# 1

நகரத்தின் மத்தியில் இத்தனை புல்வெளியா என்று வியக்கும் அளவுக்கு அவ்வளவு பெரிய 'கோல்ப்' மைதானம்.

வெள்ளைக்காரர்களும் பணக்காரர்களும் ஒரு சிறிய வெள்ளைப் பந்தை மைதானம் முழுவதும் கெந்திக்கொண்டிருப்பார்கள்.

அவர்களின் சாமக்கிரியைகளை சுமை தாங்கவும் பந்து பொறுக்கவும் ஏராளமான இளஞ்சிறார்கள்.

மைதானத்தை அணைத்துக்கொண்டாற்போல ஒரு தார் ரோடு.

அது ஐந்து நட்சத்திர ஓட்டலையும் அரசாங்க விடுதியையும் கடந்து எதிர்பாராமல் திரும்புகிறதே அந்த மூலையில் காலையில் ஒரு சைக்கிள் சக்கரவண்டியில் கூலியாட்களுக்கு 'நாஷ்தா' பண்ணிக் கொடுக்கும் நடமாடும் பலகாரக்கடை இருக்கிறது.

அந்தக் கடையின் சொந்தக்காரன் வேல்முத்துசாமியின் மூத்த மகள்தான் வேணி.

இந்த மாதிரி கடைகளை இந்த நகரத்தில் நீங்கள் அதிகப்படியாகப் பார்க்கலாம். கீழ்–நடுத்தரவர்க்கங்களின் வசதிக்கு ஏற்பட்ட கடை. போலீஸ் பயத்தினால் நான்கு சைக்கிள் சக்கரங்களில் நடமாடும் கடை. பலகையில் பிளாட்பாரம் அமைத்து, அதில் ஒரு மண்ணெண்ணெய் அடுப்பு, கரிய வாணலி, சில அலுமினியப் பாத்திரங்கள், அருகே கை கழுவ, பாத்திரம் கழுவ, காற்றை அடக்க ஒரு தகரத்திரை, இரண்டு வாளிகள், பிளாஸ்டிக் குடம்.

சக்கரங்களின் அருகே கீழ்த்தளத்தில் கெரசின் டின், சமையல் தயாரிப்புக்கு உண்டான பரப்பு, எண்ணெய், இட்லி மாவு வகையறாக்கள்.

வேல்முத்து காலை இட்லி போடுவான். கோல்ப் மைதானத்து சிப்பந்திகளும், சாலையில் மேற்கே கட்டிக்கொண்டிருக்கும் பலமாடிக் கட்டிடத்துத் தொழிலாளிகளும், குதிரைப் பந்தய நாட்களில் ரேஸ் கோர்ஸ் ஆசாமிகளும் இங்கேதான் நாஷ்தா பண்ணிவிட்டுப் போவார்கள்.

காரணம். வேல்முத்துவின் இட்லி பூப்பூவாக இருக்கும். இன்னொரு
காரணம் –

வேணி.

வேணியை அழகான பெண் என்று சொல்லமுடியாது. கொஞ்சம்
முகம் அலம்பிப் பவுடர் போட்டால் சுமாராக இருப்பாள்.

அழகைவிட அவள் பேச்சின் கொஞ்சல் எல்லாரையும் கவரும்.
மேலும் அவள் இளமை. பதினான்கு. பெண்கள் பெரும்பாலோருக்கு
ஒருவிதமான மெருகு ஏறும் வயது. அவர்கள் அந்த வயசில் செய்வது
எல்லாமே ஆண் பிள்ளைகளுக்கு அழகாக இருக்கும்.

வேணி எட்டு வயசிருக்கும்போது அவள் அம்மா பிரசவத்தில்
செத்துப் போய்விட்டாள். குழந்தைக்கு சரியாகப் பெயர் வைக்கவே
இல்லை. குட்டி என்றுதான் ஒரே ஒரு பெயர் வைத்து, அதை
வளர்ப்பதும் வேணிதான், ஏன், அம்மாவுக்குப் பிரசவம் பார்த்ததே
வேணிதான்! அம்மா வலி தாங்காமல் முக்கிக்கொண்டிருக்க,
மருத்துவக் கிழவிக்குக் கண் தெரியாமல் வருவதற்குள் அந்த இருட்டில்,
விரிந்த கால்களுக்கு இடையில் கன்னங்கரேல் என்று முடி தெரிந்ததைப்
பார்த்து வேணிக்கு பயமும் மகிழ்ச்சியும் அழுகையும் வந்தன.
குழந்தை அழ, அம்மா அழாமல் மவுனமாகப்படுத்...

குட்டியை வளர்த்தது அவள்தான். ஆறு வயதுக்கு அது அத்தனை
காரியம் செய்கிறது. “அக்கா.. அக்கா” என்று அவளது முந்தானையைப்
பற்றிக்கொண்டு, என்ன பேச்சுப் பேசுகிறது!

எல்லாம் வேணி கற்றுக்கொடுத்ததுதான்.

வேல்முத்துவை ‘பாவா’ என்றுதான் வேணி அழைப்பாள். அம்மா
அப்படித்தான் வேல்முத்துவைக் கூப்பிட்டதாக ஞாபகம்.

வேல்முத்து இராத்திரி குடித்துவிட்டுத் திரும்பிவர எத்தனை
நேரமானாலும் காலை ஆறு மணிக்கு எழுந்து சுறுசுறுப்பாகிவிடுவான்.
வேணி ஸ்டவ்வுத் திரியை சரிபார்த்து கெரசின் ஊற்ற, தகர
மறைப்பின் அருகில் அதைப் பற்றவைத்து வாணலியை வைத்து
முதலில் வடை சுடுவான்.

அடுக்கடுக்காக இட்லிப் பானை வைத்து அழகாக அகப்பையில்
சீராக மாவு ஊற்றி வைத்துவிட்டு சாயாவுக்கு வென்னீர் வைப்பான்.
பாப்பா சின்னப் பாத்திரங்களைத் தேய்த்து வைத்து பம்ப் அடிக்கிற
குழாய்க்குப் போய் இரண்டு வாளி தண்ணீர் கொண்டுவந்ததும்,
சீராமபுரத்தில் இருந்து வண்டியைத் தள்ளிக்கொண்டு போவார்கள்.

செல்லும்போது, காலைக் காற்று வேணிக்கு ரொம்பப் பிடிக்கும்.
தன்னொத்த பிள்ளைகள் புள்ளி புள்ளியாக சட்டை பாவாடை
சீருடை போட்டுக்கொண்டு, தாய்மார் கொடுத்த கைக்குட்டையை
ஸ்கர்ட்டில் செருகிக்கொண்டு, இங்கிலீஷ் பேசிக்கொண்டு பஸ்சுக்குக்



காத்திருக்கும் பெண்களைப் பார்த்து வேணிக்குப் பொறாமை
இருக்காது. ஆர்வம்தான்.
சின்னவள்தான் பேசிக்கொண்டு வருவாள்.
“கொட்டாய்ல படத்தை மாத்திட்டாங்கல்ல, பாவா.”
“அப்படியா?”
“போவமா?”
“போவம், கண்ணு.”
“திரியும் குடிச்சுட்டு வரமாட்டில்ல.”
“இல்லை கண்ணு. நேத்தோட நிறுத்திட்டேன்.”
“ஆமாம் பாவா! நெதம் அதையே சொல்லுங்க.”
“அக்கா! எனக்கு ஸ்லேட்டு உடைஞ்சுருச்சு.”
“ஆமா, நீ இஸ்கோலுக்கு போற அழகுக்கு.”
“வேணி, உனக்குக் கல்யாணம்; பாப்பாவுக்குப் படிப்பு.”
“போங்கப்பா.”
“என்ன வேல்முத்து, பொண்ணுங்களோட ஒரே மஜாக்கு!”
முனியப்பா, கெஸ்ட் அவுசில் காண்டிராக்டர்.
“முனியப்பா, வேணியைக் கட்டிக்கிறியா?”
“எனக்குக் கல்யாணம் ஆயிடுச்சே! இல்லைன்னா இப்பவே
ரெடி.”
“போங்கப்பா.”
“இதுக்கு இன்னா வயசுங்கறே? கல்யாணம் கட்டிக் கொடுத்தா
சர்க்கார்ல ஜெயில்ல போட்டுருவாங்க.”
முனியப்பா மட்டும் இல்லை, வேணியைப் பார்த்து அடிக்கடி
சிரிப்பவர்கள் ஒரு கோஷ்டியே இருக்கிறார்கள்.
கோவிந்தராஜு வேலியைத்தாண்டி கோல்ப் மைதானத்திலிருந்து
ஒன்பது மணிக்கு வருவான். வெள்ளைக்கார டாலர் நோட்டெல்லாம்
காட்டி, “துரைங்களுக்கெல்லாம் ஆட்டம் சொல்லித் தர்றது நான்தான்,
தெரியுமில்லை” என்று சாயா அடித்துவிட்டு, புல்லைக் கடித்துக்
கொண்டே வேணியைப் பார்த்து “ஹாய் ஹாய் ஹாய் மேரி
புல்புல்” என்பான். தெலுங்குக்காரனாக இருந்தாலும் இந்தியில்தான்
பேசுவான். அடிக்கடி தலையைக் கலைத்து வாரிக்கொள்வான்.
தம்ளரை வாங்கும்போது கையைத் தொடுவான். தந்தையிடம்
சொன்னால் கிராக்கி போய்விடும் என்று வேணி பயந்துகொள்வாள்.
தாங்கமுடியாமல் போனால் சொல்லிவிடலாம் என்று இருக்கிறாள்.
முனியப்பா ஒருமுறை வேல்முத்து இல்லாதபோது அவள் இடுப்பை
வளைத்துத் தொட்டுவிட்டு, “உன் வொய்சில எனக்கு உடுகி இருக்கா”
என்றான்.

ஓட்டலில் இருந்து வெள்ளையாக சுத்தமாக உடை அணிந்து கொண்டு தலைய வாரிக்கொண்டு வருவான், ஒருவன்.

ஒருநாள் வேணியை ஓட்டலுக்கு அழைத்துச் செல்கிறேன் என்று சொல்லியிருக்கிறான். பெயர் மறந்து போச்சு. எதுவும் வாங்க மாட்டான். என்னா வேணும் என்றால், வேல்முத்து இல்லையென்றால், "நீதான் வேணும்" என்பான்.

"ஏம்பா நான் வேணாமா?" என்று குட்டி கேட்க,

"நீயும் வேணும் குட்டி, எங்க ஆடுபாக்கலாம் பிந்தியாசம்கேகி..."

குட்டி பாவாடையை அசைத்துக்கொண்டு நாக்கைக் கடித்துக் கொண்டு நன்றாகவே ஆடும்.

"ஏய் சும்மாரு."

**கா**லை ஏழு மணிக்கெல்லாம் மூலைக்கு வந்த மாத்திரத்தில் சுறுசுறுப்பாக வியாபாரம் ஆகும்.

வேணி பளிச்சென்று குளித்துவிட்டு, பாவாடை தாவணி அணிந்து கொண்டு சின்ன சின்ன இலைகளிலும் அலுமினியத் தட்டுகளிலும் இட்டிலி வடை அல்லது சுடச்சுட இட்லி மட்டும் கொடுக்க, குட்டி தண்ணீர் கொடுக்க, வேல் முத்து ஆவியடிக்க பானையிலிருந்து இட்லி பில்லைகளை ஈடு ஈடாக எடுத்து வைக்க, எல்லாமே ஒன்பது மணிக்குள் பறந்துவிடும்.

அப்போதுதான் கோல்ப் கோவிந்தராஜு வருவான். வேல்முத்துவுடன் அரைமணி மைதானத்துக் கதை பேசுவான். ஒரு பந்து நாற்பது ரூபாய் என்றும், வெள்ளைக்காரர்களைவிட தான் சாமர்த்தியமாகப் பந்தடிப்பவன் என்றும் சொல்வான்.

வேல்முத்து அவனிடம் அதிகப்படியாகக் கடன் வாங்கியிருக்கிறான் என்பது வேணிக்குத் தெரியும். "எதற்காகக் கடன்? இந்தப் பாழாப் போகிற குடிக்கும் மற்றொரு விசயத்துக்கும்தான்." அதுவும் அவளுக்குத் தெரியும். அதனால் கோவிந்தராஜுவைக் கண்டால் அவளுக்குப் பிடிக்காது.

"கோராஜு! நானு எத்தனை மொத்தம் உனக்குக் கொடுக்கணும்?"

"கணக்கு வெச்சுக்கலை."

"எம்மவ சொல்லுது, கடன் எல்லாம் தீர்த்துருன்னு."

"கடனை அவ்வளவு சுலபத்தில தீர்க்கலாமா? என்ன வேணி?"

"எல்லாத்துக்கும் சேத்து எம்பொண்ணைக் கொடுத்துர்றேன், ராஜு."

"அதுசரி. அப்ப எல்லாம் தீர்ந்துரும். நான் உனக்குக் கடன்பட்டுருவன். என்ன செல்லம்" என்று கோவிந்தராஜு அவளைப் பார்த்துச்



சிரித்து ஸ்டைலாக சிசர்ஸ் பற்றவைப்பான்.

குட்டியைப் பார்த்து, "உனக்கு இன்னா வேணும்?"

"தொப்பை" என்று அவள் சிரித்து அழகு காட்டுவாள்.

"இதுதான் பாரு, உன் ரெண்டாவது பொண்ணு, அப்படியே பெரிசானப்புறம் எல்லாத்தையும் சொக்கடிக்கப் போவுது."

"ரெண்டு பெண்ணை வெச்சுட்டு கவலையா இருக்குது ராஜு!"

"கவலையே படாத. இதுங்களைக் கட்டிக்கறதுக்குக் கொடுத்து வெச்சிருக்கணும்."

"நீ யாரைக் கட்டிப்ப குட்டி?"

"ரஜினிய."

"இந்தா" என்று வேணி குட்டியை அதட்டும்போது, அது சிரிக்கும் போது வேணிக்குத் தாயின் ஞாபகம் வரும்.

புரியாத வயதில், அம்மா அந்த இருட்டில் பிரசவ வலி தாங்க முடியாது அலறியபோது, வேல்முத்து குடிக்கப்போயிருந்தவன் திரும்பி வரவில்லை. அழைத்துவரப் பக்கத்து வீட்டுப் பையன் சைக்கிளுக்குக் காசு வாங்கிச் சென்றவனும் வரவில்லை. பாட்டி எதையோ அரைத்து கரைத்துக்கொண்டு "இப்ப வந்துருவான் கண்ணு, பொறுத்துக்க, பொறுத்துக்க" என்று சொல்லும்போது, வேணிக்கு அம்மாவைப் பார்க்கப் பயமாக இருந்தது. "இங்க வா, இங்க வா" என்று இரண்டு கைகளையும் விரித்து அவளைக் கூப்பிட்டாள்.

"என்னம்மா செய்யுது? என்னம்மா செய்யுது? அழுவாதம்மா, அழுவாதம்மா" இத்தனைதான் வேணியால் பேச முடிந்தது.

"உங்கப்பன் வரத்துக்குள்ள போயிருவன். பயம்மா இருக்குது. கண்ணு வேணி... கிஷ்ணவேணி, வலி தாங்கலைம்மா."

"சொல்லாதம்மா" என்று அழுதாள். தாராளமாகக் கண்ணீர் பாவாடை மேலே சொட்டியது. "பொறுத்துக்க முத்து வந்துருவான். வந்து ஆஸ்பத்திரிக்கு அழைச்சிட்டுப் போயி..."

"ஆத்தா வெளிய போறியா? எம் மவகூட பேசணும்."

கிழவி வெளியே செல்ல, "கிட்ட வாம்மா."

"அம்மா, என்னம்மா செய்யுது உங்களுக்கு?"

"பெட்டிக்குள்ள ஓலை மடக்கி வெச்சிருக்கேன் பாரு. அதை எடு."

"எதைம்மா."

"அதபாரும்மா, பெட்டி."

அம்மாவின் தகரப் பெட்டியைக் கொண்டுவந்து கொடுக்க, வேணியைத் திறக்கச் சொன்னாள். அரக்கு வர்ணத்தில் சேலையும் காகிதப் பொட்டலமும் இருக்க, "உங்கப்பன்கிட்ட காட்டிடாதே.

ஒளிச்சு வெச்சிரு. படிப்புக்கு வெச்சுக்க. கல்யாணத்துக்கு வச்சுக்க. சேலை எங்கம்மாவுக்கு அவங்கம்மா தந்தது. வெச்சுக்க கண்ணு. உங்கப்பனை நம்பவே நம்பாதே. அவனுக்கு சோறு தண்ணி கொடுக்காதே, பட்டினி போடு. என்ன பாடு படுத்திருக்கான் தெரியுமா? புள்ளையார் கோயிலண்டைல இருக்கா பாரு சிறுக்கி, அவளை வெச்சிக்கிட்டு என்னை என்னா உதைச்சிருக்கான். அவனுக்கு எதும் செய்யாத கண்ணு. படிச்சு பாஸ் பண்ணி எங்கிட்ட வந்து அப்புறம் சொல்லு. அம்மா நான் பெரிய படிப்பெல்லாம் படிச்சேன், அப்பனுக்குச் சோறுதண்ணி கொடுக்கலைன்னு சொல்லு. அப்பதான் என் உசிருக்கு திருப்தி கெடைக்கும் வேணி... கிஷ்ணவேணி... கண்ணே... இதெல்லாம் அப்புறம் புரியும். உங்கப்பனை நம்பாதே. வேணி! உன்னை நீதான் பாத்துக்கணும். சேலையையும் பொட்டலத்துக்குள்ள உள்ளதையும் வெச்சுக்க. அப்பனை..."

அதன்பின் அம்மா பேசுவதெல்லாம் குழறலாக இருக்க, அப்பா லேசாக ஆடிக்கொண்டு மருத்துவச்சியுடன் உள்ளே வந்து, "வலி எடுத்துருச்சா? ஒரு மாசம் ஆகும்னு சொன்னானில்லை அந்த டாக்டரு பரதேசி! ரெண்டு ரூவா வாங்கிட்டான், கண்ணு" என்று உளறிக்கொண்டே விழுந்தான். சைக்கிள் எடுக்கப் போனவன் வரவே இல்லை. கிழவி பீங்கான் பாத்திரத்தில் சோப்பு கொண்டுவந்தாள். "முத்து, இந்த சமயத்தில குடிக்கப் போயிட்டியே."

"இல்லை ஆத்தா, சத்தியமா சொல்றேன், ஆஸ்பத்திரியில் இவளுக்கு மருந்து வாங்கியாரத்தான் போயிருந்தேன். அவன் என்னடான்னா பொத்திட்டு போயிட்டான். அப்றம் நம்ம ராஜி இல்லை ராஜி அவனைப் பார்த்தனா?"

"ஆ ஆ ஆ" என்று அலறல் கேட்டபோது, "வேல்முத்து நீ வெலகிக்க."

"வேணி கண்ணு! பாட்டிக்குக் கண்ணு தெரியலை இல்லை. கொஞ்சம் விளக்கு காட்டும்மா."

விளக்கு காற்றில் நடுங்க, வேணி பார்த்துக்கொண்டிருக்க, பாப்பாவின் தலைமுடி அம்மாவின் கால்களுக்கு இடையில் தெரிய, கசிவும் இரத்தமுமாய் அந்தப் புத்துயிர் மெலிதாகக் குரல் பெற்று தலைகீழ் அழுகை தொடங்க, அம்மா ஒரு முறை வேணியைப் பார்த்து, வசீகரமாகச் சிரித்துக்கொண்டு அவளை நோக்கிக் கைநீட்டி "வா" என்றாள், வார்த்தையில்லாமல்.

"அம்மா அம்மா, செரியாப் போச்சாம்மா, செரியாப் போச்சாம்மா. பாப்பா பொறந்திருச்சு, அம்மா."

அம்மா?

அட்டா செத்துட்டாங்களே.



# 2

அம்மாவின் நினைவுகள் வேணிக்கு வேறு விதங்களிலும் அவ்வப்போது எதிர்பாராமல் வந்து வயிற்றுக்குள் சோகம் மூட்டும். கே.ஆர்.விஜயா சினிமா படம் சூப்பர் கொட்டகையில் போஸ்டர் போட்டபோதெல்லாம் அவள் நினைவு வரும்.

காலைக் காட்சிக்கு வேணியையும் இழுத்துப் போய் கியூவில் நெருக்கமாக நின்றுகொண்டு கனகாம்பரம் வாங்கிக் கொடுத்து பக்கத்து சீட்டு இருட்டில் மூக்கைச் சிந்திக்கொண்டு திரையில் கஷ்டம் வரும்போதெல்லாம் அழுவாள்.

அவளைப் பார்த்துப் பார்த்துத்தான் வேணியும் அழுவாள்.

அப்புறம் கோயில் அருகே சென்று அந்தப் பெண் பிள்ளையுடன் ஒரு நாள் முழுவதும் சண்டை போட்டபோது என்ன என்ன வார்த்தையெல்லாம் உபயோகித்தாள்!

அத்தனை வார்த்தைகள் சொல்லி அப்படித் திட்டினவள் ராத்திரி, பாட்டா, அழுகையா என்று சொல்ல முடியாத ஒரு வேதனைக் குரலில் – ஒரு வேதனை ராகத்தில் –

"தண்டைச் சிலம்புக்காரி
தலைவாசல் வீட்டுக்காரி
அவளைத் தொடுவானேன்
கவலைப்படுவானேன்..."

என்று பாடிய பாட்டு முழுவதும் வேணிக்கு நினைவிருக்கிறது.

ராத்திரி வழக்கம்போல வேல்முத்து வண்டியைக் கொண்டு நிறுத்திவிட்டு, "வேணிகுட்டி! இந்தா மூலைவரைக்கும் போய் வந்துர்றேன், பாத்துக்க என்ன" என்று கிளம்பினான்.

"உம் நீ வரமாட்ட பாவா!" என்றது குட்டி.

"பத்து மினிட்டில வந்துருவேன்."

"இல்லை பாவா, போவாதிங்க பாவா!" என்று குட்டி கொஞ்ச –

"சும்மா இரு குட்டி! நீங்க போயிட்டு வாங்க பாவா" என்று வேணி வேல்முத்துவை நோக்கிச் சொல்ல –

அவன் குற்ற உணர்ச்சியுடன் அவளை நேராகப் பார்க்காமல் துண்டை உதறிக்கொண்டு கிளம்பினான்.

வேணி வண்டியில் இருந்து சாமான்களை எடுத்து வைத்துவிட்டு சுட்ட எண்ணெயை முகர்ந்து பார்த்து அதைப் பாத்திரத்தில் கொட்டி வைக்க –

குட்டி 'ஓம்வொர்க்' என்று நோட்டுப் புத்தகத்தில் கிறுக்கிக் கொண்டிருந்தது.

"எச்சி தொட்டு அழிக்காதன்னு எத்தனை முறை சொல்லியிருக்கேன். லப்பர் எங்கே?"

"லப்பர் இல்லைக்கா, ரப்பர்!"

"ஆமா ரொம்ப படிச்சுக் கிழிச்சவ."

"பாவா எங்க போறார் தெரியுமில்லை? கோயிலாண்டை இருக்கு தில்ல அந்த வூட்டில நெதம் என்ன வேலை? திரியும் அங்கதான் போறாரு."

"அங்க போவாரு. அதுக்கப்புறம், பாட்டிலுக்குப் போவாரு! பாவாவுக்கு என்ன வேலை?"

"அந்தப் பொம்பளை யாருக்கா?"

"யாரோ."

"ஒரு நாள் சூப்பர் கொட்டாயில பாவாவையும் அந்தப் பொம்பளை யையும் பார்த்தமில்ல, ஐஸ்குச்சி சப்பிக்கிட்டு."

"ஏய் நீ பொஸ்தவத்தைப் படி, முதல்ல!"

"அக்கா" என்றாள் குட்டி கொஞ்சலாக.

குட்டியின் இந்தக் கெஞ்சல் மொழியை வேணியால் வெறுக்க முடியாது. அவ்வளவு இனிமையாகக் கெஞ்சும் குட்டி.

"என்னாடி?"

"அம்மா எப்படி இருப்பாங்க அக்கா?"

"உம்மாதிரித்தான்."

"போட்டா இல்லையா?"

"இல்ல. நான்தான்டி உனக்கு அம்மா."

"கடையில சொன்னாங்க, தீப்பெட்டி வாங்கியாரப் போனனில் லையா, அப்ப..."

"குட்டி, உன் வயசுக்கு சாஸ்தி பேசற. அம்மா போறப்ப என்ன சொல்லிட்டுப் போனாங்க தெரியுமா? உன்னப் படிக்க வைக்கணும்னு



சொன்னாங்க. நீ நல்லா படிக்கணும்."

"அம்மா வேற என்ன சொல்வாங்க?"

"பேசமாட்டாங்க, பாடுவாங்க. அம்மன் சினிமா நிறைய பார்ப் பாங்க."

"சினிமாப் பாட்டா?"

"இல்லை. அவங்க தனியா பாட்டெல்லாம் பாடுவாங்க."

**"முத்து முத்து சிலைக்காரி**
**முத்துப் பொண்ணு ஓலைக்காரி..."**

குட்டிப் பெண்ணுக்கு அந்தப் பாட்டு பிடித்தது. அவளும் சேர்ந்து கொண்டாள்.

"அவளைத் தொடுவானேன் கவலைப்படுவானேன்" என்று சொல்லி முடிப்பதற்குள் –

வாசலில் "யம்மாடி! வேணி கண்ணு!" என்று குரல் கேட்க –

சட்டென்று நிறுத்திக்கொண்டாள்.

"அக்கா, அவதான்!"

அவள் என்றதில் சின்னப் பெண்ணின் குரலில் ஆத்திரமும் வெறுப்பும் இருந்தது.

வேணி பேசாமல் உள்ளே வந்தவளைப் பார்த்தாள்.

"பாவா இல்லையா?"

"வெளிய போயிருக்காரு."

"எப்ப வருவாரு? ஒரு தம்பளர் டீத்தண்ணி கொண்டாயேன்."

"டீ ஆயிருச்சு" என்றாள் குட்டி.

"அடியாத்தி! நீ பள்ளிக்கூடம் போறியா?"

உள்ளே வந்தவளுக்கு முப்பது வயசானாலும் தளுக்காக இருந்தாள். சேலை மார்பை மறைப்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை. வாசனை யாக இருந்தாள். பொட்டு பெரிசாகவும் உதட்டில் லேசாக சிவப்பாக வும் இருந்தாள். பிரா போட்டுக்கொண்டிருந்தது பளிச்சென்று தெரியும்படியாக ரவிக்கை. அவள் பெயர் பரிமளா.

பரிமளா ஸ்டூலில் சுதந்திரமாக உட்கார்ந்துகொண்டு வீட்டை சுற்று முற்றும் பார்த்தாள். "ஓடு பிரிஞ்சிருக்கில்லை. பாவா கிட்ட சொல்றதுதானே! துப்புரவா இருந்தாலும் கரியேறியிருக்குது. இந்த வூட்டுக்கு எத்தினி வாடக?"

"எல்லாம் பாவாதான் பாத்துக்கறாரு."

"இந்தா, உனக்குப் பூ கொண்டாந்தேன்."

"வாங்கிக்க குட்டி. கோவப்படாத உங்கப்பா எனக்கு ரொம்ப வேண்டியவரில்லை." குட்டியை எடுத்து அணைத்து முத்தம் கொடுக்க

முறப்பட்டாள்.

குட்டி திமிறிக்கொண்டு "ம்... விடுங்க" என்று விலகினாள்.

வேணி கடமைபோல அவளுக்கு ஒரு டீத்தண்ணீர் கோப்பையில் வைத்துக்கொண்டு வர, அவள் அதை முழங்காலைத் தூக்கி ஸ்டூல் மேல் போட்டுக்கொண்டு சப்பிக் குடித்தாள். வளர்த்தியாக இருந்தாள். அவளைப் பார்த்தாலே வேணிக்கு ஒரு மாதிரி பதற்றமாக இருந்தது.

"நீங்க வீட்டுக்குப் போங்க. நான் பாவா வந்ததும் சொல்றேன்" என்றாள் குட்டி.

அதற்கு, அவள் சிரித்து "இல்லை. உங்கப்பா வர்றவரைக்கும் காத்திருக்கத்தானே போறேன்" என்று கைகொட்டினாள்.

"உங்களுக்கு அவரு எதாவது பணம் தரணுமா?" என்றாள் வேணி.

"நெறைய்ய" என்று மறுபடி சிரித்தாள். "தினப்படிக்கு சேர்த்து வெச்சு?"

"எத்தனை தரணும்?"

"எனக்கே கணக்கில்லை!"

"எதுக்கு? என்ன வாங்கினாங்க, பாவா?" என்றாள் குட்டி.

"அதெல்லாம் சொல்லப்படாது கண்ணு! இதோ வர்றாரே."

வேல்முத்து கடை மூடப்போகும் அவசரத்தில் வேகமாக சாராயம் அடித்துவிட்டு சுருதி கூடும் சமயத்துக்கு முன்னமேயே வந்தான்.

"வாங்க மாப்பிள்ளை" என்றாள் பரிமளா.

"அட இங்க வந்தியா! அங்கல்ல ஒன்னைய தேடிப் போனேன்."

"நான் உன்னைய தேடிட்டு இங்கே வரேன். இதான் என் செல்லம். என்ன சாமர்த்தியம் இந்த வேணிப் பொண்ணுக்கு. என்னை டீ கொடுத்து, உட்கார்த்தி வெச்சு, பேசிக்கிட்டு..."

"எப்படி இருக்குறா பாரு எம்மவ" என்று வேணியின் தலையை நிமிர்த்திக் காட்டினான்.

"இதுக்கென்ன குறைச்சலாம்" என்று குட்டியைக் காட்டினாள் வேணி.

"வேணி கொஞ்சம் பக்கடா வாங்கியா. அப்புறம்...?" என்று ஸ்டூல் அருகே போய் பரிமளாவின் கையைப் பிடித்துக் கேட்டான் வேல்முத்து.

குட்டி அதைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருக்க...

"குட்டி, பொஸ்தவத்தை எடுத்துக்கிட்டு வெளிய போ" என்றாள் வேணி.

"இருக்கட்டும், செல்லம்."

"இல்லை, பாவா! அவளுக்கு நெறைய வீட்டுப்பாடம் இருக்குது."

"இருந்தா, இங்க வா! எம்மடில உக்காந்துகிட்டு செய். வா!"



"குட்டி, இது யாரு தெரியுமில்ல. பரிமளா! பரிமளா சொல்லு, பரிமளா."

குட்டி மவுனமாக இருக்க...

"பரிமளா நமக்கெல்லாம் உறவாகப்போறாங்க! பரிமளா, அப்படித் தானே?"

"ஆ ஆம் செல்லம்."

"வேணி! உனக்கு பரிமளாவைப் பிடிக்கும் இல்லை?"

வேணி மவுனமாக இருக்க, வேல்முத்து இப்போது போதை அதிகமாகிப் போய் பரிமளாவை தோளோடு அணைத்துக்கொண்டு "சொல்லு! புடிக்குமா இல்லையா?"

வேணி சும்மா இருந்தாள்.

"சொல்லும்மா. பாவா கேக்கறாரில்ல?"

"குட்டி வா. வெளிச்சம் இருக்குது. அங்க போய்ப் படிக்கலாம் வா."

"இப்ப சொல்லப் போறியா, இல்லியா?"

"என்ன சொல்லணும்?" என்றாள் விரோதமாக.

"பரிமளாவை 'எனக்குப் பிடிக்கும்'னு சொல்லு!"

"அய்யோ அதை விடுங்க. அந்தப் பொண்ணுக்கு என்னைப் பிடிக்காமயா போகும்? என்ன கண்ணு?"

"விடுங்க, அதெல்லாம் இருக்குதில்ல" பரிமளா வேல்முத்துவின் கைகளைத் தன் நெஞ்சில் இருந்து நீக்கினாள்.

"வேணி கண்ணு! கொஞ்ச நேரம்போய் அரச மரத்தடியில பாய் போட்டு, வெளிச்சமா இருக்குதில்லை, குட்டிக்கு வீட்டுப் பாடம் சொல்லித் தரணுமில்லை?"

"தெரியும். நானே போறேன்!" குட்டியைத் தரதர என்று இழுத்துக் கொண்டு, கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு வேணி வீட்டுக்கு வெளியே மரத்தடிக்கு வந்தாள்.

குட்டி "காந்தி மகான்" என்று உரக்கப் பாடம் படிக்கும்போது வேணி தன் வீட்டின் தாழ்வான வாசலைப் பாாத்தாள்.

பரிமளா சாக்குத் திரையை விடுவிக்குமுன் "அப்புறம் உள்ள வாங்க" என்றாள்.

# 3

**வே**ணி தன் தங்கையை கன்னத்தை நிமிர்த்திப் பார்த்தாள். "இதபாரு இனிமே இந்த மாதிரி பெரியவங்க பேச்சு பேசினா உன்னை கண்டம் கண்டமா வெட்டிப் போட்டுருவேன். தெரியுமில்லை? பேசாம படிக்கிறதைப் படி. அம்மா போறப்ப படிக்கவையி படிக்க வையின்னுதான் எனக்கு சொல்லிட்டுப் போனாங்க."

"அக்கா, அவளைப் பிடிக்கவே இல்லை..."

"....."

"அவள் நம்ம வூட்டுக்கு வரப்போறாளா, அக்கா?"

வேணி இப்போதும் மவுனமாக இருக்க, "தூத்தரிக்க" என்று சொல்லிவிட்டு, "ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தொன்பதாம் ஆண்டில் மகாத்மா காந்தி போர்பந்தரில் பிறந்தார். அக்கா, அவருக்கு பேரே மகாத்மான்னுதான் வெச்சாங்களாமா?"

வேணி பதில் சொல்லவில்லை. தன் வீட்டை அரச மரத்தடியிலிருந்து பார்த்தாள். சாக்குத் திரையில் நிழற் படம் காட்டினாற்போல அப்பனும் பரிமளாவும் தெரிந்தார்கள். அவள் தன் மார்புச் சட்டையைக் கழற்றும் நிழல் கோடிட்டுக் காட்டிவிட்டு, ஊதி அணைத்த விளக்கினால் மறைந்தது. வேணி காத்திருந்தாள்.

குட்டி தொடர்ந்து மகாத்மா காந்தி பற்றியும் சுத்தம் சுகாதாரம் பற்றியும் கடமைக்குப் படித்துக்கொண்டிருந்தாலும், அதன் கடைக்கண் வீட்டின் வாசலிலேயே இருந்தது. வேணியின் கரங்கள் தன் சட்டையைக் கொத்தாகப் பிடித்து இறுக்குவதைப் பார்த்தாள். பயந்துகொண்டு மறுபடியும் மகாத்மா காந்தியில் ஆழ்ந்தாள்.

சோன்பப்டிக்காரர் வண்டியைக் கொண்டு விட்டுப் போகும்போது "எங்க கண்ணு உங்கப்பன்?"

"வூட்லதான் இருக்காரு."

"அப்ப நீ ஏன் இங்கே உக்காந்திருக்க?"



வேணியும் குட்டியும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள திரையைத் திறந்து பரிமளா வெளிப்படுவதைப் பார்த்து "ஓ!" என்றான்.

"வேணி கண்ணு! அப்பா உறங்கிட்டாரு. பாத்திரத்தை எடுத்து வெச்சுரு. அப்பால பார்க்கலாம் என்ன?" என்று அவள் சொகுசாக நடந்துகொண்டே சொல்ல –

சோன்பப்டி வியாபாரி "பரிமளா ஆ" என்று அழைக்க –

"என்னைக் கூப்பிடாத. நான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன். குடும்பப் பொண்ணு" என்று அதிகப்படியாகச் சிரித்துக்கொண்டே செல்ல –

அந்த ஒலியை இருள் காற்று கடத்திக்கொண்டு சென்றது.

வேணி தன் வீட்டு ஒட்டுத் திரையைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைய, வேல்முத்து பட்டாபட்டி கால்சராயில் ஏதோ ஒரு கோணத்தில் படுத்து குறட்டைவிட்டு உறங்கிக்கொண்டிருந்தான்.

காலையில் கோல்ப் மைதானத்தில் பெரிய பீச்சாங்குழல் போட்டு புல்லை அலம்பிக்கொண்டிருந்தார்கள்.

பெரிய மனிதர்கள் ஸ்வெட்டர் போட்டுக்கொண்டு, பந்தடித்துவிட்டு நகர்ந்தார்கள்.

வேல்முத்து அதிகாலையில் எப்போதும்போல் எழுந்து திருநீறு அணிந்துகொண்டு கடைக்கு உண்டான அத்தனை வியாபார சாதனங்களையும் தயாரிக்க –

குட்டியை எழுப்பி குளிப்பாட்டி ஆடை அணிவித்து ஸ்கூலுக்குத் துரத்திவிட்டு வேணி வேல்முத்துவிடம் சேர்ந்துகொண்டாள்.

"மாவு கொண்டாந்தியா?"

"கொண்டாந்தேன் பாவா."

"வடை மாவு?"

"வடை மாவுதான் பாவா."

"ஏன் இத்தனை நேரமாம்! கோத்திக் குரங்கு! குதிரை முட்டை!"

"இப்படியெல்லாம் பேசாதிங்க பாவா!"

"ஏன்?"

"திட்டாதிங்கப்பா. எதுக்காக சும்மா சும்மா திட்டறீங்க?"

"நீ என் மகள். திட்டுவேன், இன்னும் திட்டுவேன். தேவடியாள்னு கூடத் திட்டுவேன்!"

"தேவடியா யாருன்னு உங்களுக்கே தெரியாதா பாவா?"

"யாரு?"

"பரிமளா."

வேணி எதிர்பாராத தருணத்தில், கன்னத்தில் பளார் என்று அறை வாங்கினாள். உடனே சிவந்துபோய் தடுமாறி விழுந்தாள். "என்ன

பேசுக பேசற! அவளைப்பத்தி உனக்கு என்ன தெரியும்? என்னடி தெரியும்? அவளை நான் கல்யாணம் கட்டிக்கப் போறேன். அவ என்மேல எத்தனை அன்பா இருக்கா தெரியுமா? அவளுக்கு எம் மேல எத்தனை பரிவு தெரியுமா? எம்மேல... எம்மேல... உங்கம்மா மாதிரி இல்லை!...”

வேணி கன்னத்தைப் பிடித்துக்கொண்டு சாலையைக் கடந்து மரத்தடியில் தரையில் உட்கார்ந்துகொண்டு அழுதாள்.

நாஷ்தாவுக்காக ஒருவர் ஒருவராக வர ஆரம்பிக்க, “ஏன் அழுது?”

“வாய் சாஸ்தியாயிருச்சு. ஒண்ணு வுட்டேன்!”

“வயசுப் பொண்ணை அடிக்காதப்பா. ஏதாவது எக்குத்தப்பா ஆயிரும்.”

கோவிந்தராஜு வேணியின் அருகில் வந்து, அவளை எழுப்பி, “கண்ணு! நீ என் மகள் மாதிரி. போனாப் போவுது. எழுந்து வாம்மா. அவன் கெடக்கான். உங்கப்பன் உச்சுப் பிடிச்சவன்.”

கோவிந்தராஜு வேணியைத் தப்பான இடத்தில் தொட்டுத் தூக்க, “விடுங்க என்னை” என்று அவள் விலகிக்கொண்டு கடந்து வந்தாள். கன்னத்தைத் துடைத்துக்கொண்டு தோசைக்கு உண்டான கல்லை ஸ்டவ் மேல் வைத்துத் துடுப்பைத் தேய்த்து முதல் தோசையை ஊற்றினாள். வடைக்கான வாணலியை மற்றொரு ஸ்டவ்மேல் வைத்தாள்.

“குட்டி பள்ளிக்கூடம் போச்சா?”

வேணி பேசாமல் இருந்தாள்.

“பருப்பு இருக்குதா போதுமான அளவுக்கு?” வேல்முத்து கேட்டான்.

“பேச மாட்டியா?”

“......”

“பேசாட்டிப் போயேன்.”

வேணியைப் பார்க்க முனியப்பா வந்தபோது, வேணி எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு கோல்ப் மைதானத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள்.

முனியப்பாவிடம் தாழ்வாகப் பேசி வேல்முத்து பணம் வாங்கிக் கொண்டிருக்கையில்,

“வாட்ஸ் யுவர் நேம்? பேர்? பேர் என்ன? க்யா நாம்?”

“வேணி” என்றாள். வேலி அருகே சென்றான் ஓர் இளைஞன். அவன் நீலத்தில் வேடிக்கையாக குல்லாய் போட்டிருந்தான். வேலிக்கருகில் செல்லும்போது அவனிடம் ஒஸ்தி செண்ட் வாசனை வீசியது. கண்ணாடியைக் கழற்றி அவளைப் பார்த்து, “டமிழ் பேசுவியா? கிவ் மி தி பால்”

“.....”



“டேக் தி பால்.”

அவள் விழிக்க –

“பால்! பந்து” என்றான்.

“அங்கதான் விழுந்ததுங்க!”

“டேக் இட்! டேக் இட் ஃபார் ஹெவன் சேக்!”

வேணி அந்தப் பந்தைப் பொறுக்கி அவன்பால் எறிந்தாள்.

“வேணி! தாங்ஸ்” என்றான். அவள் கொடுத்த பந்தைத் தரையில் வைத்துக் கொண்டு பளபளப்பான இரும்புக்குச்சிபோல இருந்ததை வைத்துக்கொண்டு அதைத் தரையைப் பெயர்க்காமல் வீசி அடித்த போது ‘சுள்’ என்று சத்தம் கேட்டது. பந்து ஒரு வெள்ளை வில்லாக அப்பால் பச்சை இருட்டை நோக்கி மறைந்தது.

அவன் வேணியைத் திரும்பிப் பார்த்து நாலு விரல்களால் சின்னதாக டாட்டா காட்டிவிட்டு “மெனி தாங்ஸ்” என்று சொல்லி விட்டு “பை வேணி” என்று நடந்து போனான்.

“ஏய் மூதேவி! அங்கே என்ன பராக்கு பாத்துட்டு...?”

வேணி சட்டென்று கலைந்தவளாக பாவாவைப் பார்த்தாள்.

“வாணலியை அலம்பு. கடையைக் கட்டணும்.”

“பாவா இன்னைக்கு எத்தனை வியாபாரம் ஆச்சு?”

“என்னாடிது என்னைக்கும் இல்லாம கேக்குற?”

“குட்டிக்கு இஸ்கோலுக்கு பணம் கட்டணும்.”

“கட்டியாச்சு.”

“எத்தனை கட்டினிங்க?”

“முப்பது.”

“தப்பு. சம்பள பாக்கி எழுவது ரூவா இருக்குது.”

“ஞாபகமில்லை. செவ்வாக்கிழமை கட்டினேன். எழுவதுதான்!”

“எதுக்கு பாவா பொய் சொல்றீங்க?”

“பொய் இல்லடி. பணமே கட்டியாச்சுனு சொன்னனில்லை?”

“கட்டலைன்னா அதை ஸ்கூலைவிட்டுத் தள்ளிருவாங்க.”

“யாரு தள்றாங்க பார்க்கலாம். முனியப்பாகிட்ட ஒரு வார்த்தை சொன்னா போதும்!”

“கட்டினிங்களா இல்லையா?”

“நான் கட்டப்போறது சம்பளம் இல்லைடி! பொண்டாட்டி! தன்னன்னான்னனே” என்று வேல்முத்து சிரித்தது எரிச்சலாக இருந்தது.

அதற்கப்புறம் அவள் பேசவில்லை. கடையை முடித்துக்கொண்டு மெல்ல வண்டியைத் துடைத்துக் கொண்டு தள்ளிக்கொண்டு போகும் போது ஒரு நாய்க்குட்டி மாதிரி அழகான வெள்ளைக் கார் கச்சிதமாக

பூப்போல் கடந்து சென்றது. அதன் புகை நீலமாக இருந்தது. அதை ஓட்டிக்கொண்டு சென்றவன், அவன்தான்!

"வேணி" என்று மறுபடி அதேமாதிரி கையசைத்தான்.

வேணிக்கு சிரிப்பாக வந்தது.

மதியம் குட்டிக்கு டப்பா எடுத்துக்கொண்டு சென்றபோது பரிமளா, நாயுடு கடையில் நின்றுகொண்டு வெற்றிலை தடவிக்கொண்டிருந்தாள்.

"என்னம்மா வேணி எங்க போறாப்பல?"

வேணி பதில் சொல்லாமல் நடந்தாள்.

"இதை முதல்ல துரத்தப் போறேன், சாமிக்கண்ணு! இது உதவாது. ராங்கின்னா ராங்கி!"

"உனக்கென்ன! எத்தனை பேரை வித்தைகாட்டியிருக்க. இந்த வேல்முத்துப் பயகிட்ட என்னதான் கண்டியோ?"

"அதெல்லாம் பகல்ல சொல்ல முடியாது கண்ணு. போ போ வேணி!"

வேணிக்கு அதைக் கேட்கப் பிரியமில்லாமலிருந்தது. குட்டியின் பள்ளிக்கூடத்தில் எழுபது பிள்ளைகளும் ஒரே ஒரு சறுக்கல் மரமும் இருந்தது. டீச்சர்கள் கையில் கோல் வீசிக்கொண்டு தமக்குள்ளே பேசிக்கொண்டிருந்தார்கள். பிள்ளைகள் மரத்தில் தொங்கிக் கொண்டும் சட்டைகளை நனைத்துக் கொண்டும் விளையாடிக் கொண்டிருக்க—

ஓர் அறையிலிருந்து "பாட்டகே பாட்டகே பேக்கர்ஸ் மேன்!" என்று சத்தம் வந்துகொண்டிருக்க —

"அக்கா உன்னைய டீச்சர் வரச் சொன்னாங்க."

"என்னவாம்?"

"பணம் கட்டலியாம். நாளைலயிருந்து வரவாணாமுன்னு சொல்லிட்டாங்க."

வேணி, டீச்சர் அருகில் சென்றாள்.

"யாரு தேவி, இது?"

"எங்கக்கா, டீச்சர்."

"இத பாரும்மா! தேவிக்கு மூணு மாசமா சம்பளப் பணம் கட்டலை. இன்னிக்கு ரண்டு மணிக்குள்ள கொண்டாந்தா சரி. இல்லை. ரோல்ஸ்லருந்து நீக்கிடுவோம். பிரின்சிபால் ஸ்ட்ரிக்டா சொல்லிட்டாரு."

"அக்கா! பாவா பணம் கட்டினதா சொன்னாங்களே?"

"எத்தினி கட்டணும்?"

"தெரியாதுக்கா."

"அதையாவது வெசாரிச்சு வையேன், முண்டமே!"



"திட்டாதக்கா. எங்கிட்ட பணம் இருந்தா கட்டிருப்பேன். இல்லை பத்து பைசாதான் இருக்கு. அந்தப் பரிமளா இல்லை. அவகிட்ட பாவா எல்லா பணமும் கொடுத்துர்றது..."

"இன்னைக்குத் தீத்து வெக்கறேன்" என்றாள் வேணி.

## 4

**வே**ணி வசிக்கும் பகுதி ரெயில்வே லைனை ஒட்டி இருந்தது.

ரெயில்வே லைனை ஒட்டி பல காரியங்கள், பாவங்கள் நடக்கும். அங்கு வசிப்பவர்கள் பஞ்சாலை குட்ஷெட் லாரிகளுக்கு சம்பந்தப் பட்டவர்கள். ஒடு வேய்ந்த தாழ்ந்த வீடுகள், கட்சிக் கொடிகள், மரத்தடி மேடையின் நிழலில் கேரம் விளையாடும் சோம்பேறிகள் எல்லாம் உண்டு. இந்தப் பேட்டையில் புதியவர் நுழைந்தால் அரை நிமிடத்தில் வழி தவறிவிடுவார்கள்.

வேணி தீர்மானமாகத்தான் நடந்தாள். அவளுக்கு அவள் அப்பன் வேல்முத்து வழக்கம்போல செல்லும் சாராயக்கடை தெரியும். காசை எல்லாம் குடித்துத் தீர்ப்பதற்கு முன் அப்பனிடமிருந்து வசூல் பண்ண வேண்டும்.

வாசலில் ஈ மொய்த்த வடை விற்க, அங்கங்கே கழுத்தில் கறுப்புக் கயிறும் லுங்கியுமாக இளைஞர்கள் தள்ளாடிக்கொண்டிருக்க, "பாவா! பாவா!" என்று எட்டிப் பார்த்து விழித்தாள். அவளுக்கு உள்ளே போகப் பிடிக்கவில்லை.

"ஏய் வேலு! உம் பொண்ணுடா!"

"வாம்மா கண்ணு! அய்! வளந்துருச்சே! உள்ள வா! நாங்கள்ளாம் கட்டிக்க மாட்டம்!"

வேணி நகராமல் "பாவாவைக் கூப்பிடுங்க!" என்றாள்.

கலங்கலான கண்களுடன் திரும்பிப் பார்த்தான் வேல்முத்து. "என்னாடி இங்க வந்தியா!"

"காசு கொடு பாவா! குட்டிக்கு இஸ்கோலுக்குப் பணம் கட்டணும்."

"காசா!" என்று சிரித்து, "ஏய்! எம் மவள் காசு கேக்கறா, என் காசு எங்க?"

"உன் வவுத்துக்குள்ள!" என்ற ஒருவன் வேலுவின் வயிற்றில் குத்தினான்.

"கிளிச்சு எடுத்துக்க வேணி! உள்ள வா! ஏய் வேலு உம் மவளுக்கும் ஒரு கிளாஸ் ஊத்தவா?"



"குடு பாவா!" என்ற வேணி உள்ளே வந்து வேல்முத்துவின் பையை பரிசோதிக்க, அவன் சட்டென்று கோபமாகி "ஏய், பொட்டைக் களுதை! அப்பன் பைலயே கை வெக்கறியா?" என்று கீழே தள்ளினான்.

விழுந்து எழுந்தவளை ஒருவன் "இங்க வா செல்லம்! காசுதான வேணும் உனக்கு? எவ்வளவு வேணும் சொல்லு" என்று அவளிடம் நூறு ரூபாயைக் காட்ட, வேணி அதைக் கவனிக்காமல் தன் தகப்பனையே கண் கொட்டாமல் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு சாராயக்கடையை விட்டு வெளியே வந்தாள். கண்களில் இயல்பாக வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

தூரத்தில் காத்திருந்த குட்டி "என்னக்கா, பணம் குடுத்தாங்களா பாவா?"

"ப்ச்!"

"அப்ப நாளைலருந்து நான் பள்ளிக்குப் போகவேண்டாம்! அய்யா! ஜாலி!"

வேணி தன் தங்கையைத் திரும்பிப் பார்த்து, "நீ மட்டும் போவாம இருந்த, தோலை உரிச்சிருவேன்!"

"அவங்க சேர்த்துக்க மாட்டாங்கன்னா நான் இன்னா செய்றதாம்?"

குட்டி மேலும் முனகலாக "உக்கும்! அவங்கள்ளாம் புதுசு புதுசா யூனிபாரம் போட்டு வராங்க. என் கிளிசலைப் பார்த்து கேலி பண்றாங்க! நோட்டு சரியில்லை... புஸ்தகம் சரியில்லை... அப்பா சரியில்லை..." லேசாக வேணியைப் பார்த்து "அக்காவும் சரியில்லை.." என்றாள்.

வேணி அவள் தலையைத் தன்பால் இழுத்து அணைத்துக் கொண்டாள்.

"அக்கா! நாம் ரெண்டு பேரும் எங்கயாச்சும் ஓடிப்போயிரலாமா? சாராயக்கடை இல்லாத ஊருக்கு?"

"பணத்துக்கு என்ன செய்வியாம்?"

"வூட்டு வேலை செய்யறது. குளந்தைங்களை வெச்சுக்றது... இல்லை வடை சுட்டு சம்பாதிக்கிறது. பாவா அடிச்சாங்களா?"

"இல்லை, தள்ளிட்டாங்க" என்று தனது துணியைத் தட்டிக் கொண்டாள். வீட்டை அடையும்போது, எதிர்ப்பட்ட பரிமளா, "என்னாடி ரெண்டுபேரும் சதித்திட்டம் போட்டுக்கிட்டு வர்றீங்க?" என்றாள்.

இருவரும் அவளை விரோதமாகப் பார்த்தனர். அசைமாடுபோல வெற்றிலையை அரைத்துச் சிவந்த உதடுகளும் கண்ணாடிபோல பாடி தெரியும் ரவிக்கையும், விரல் நகத்தில் தடவிய கருஞ்சிவப்புச் சாயமுமாக இருந்தாள் பரிமளா. "என்னாடி களுதைங்களா, எங்கூட பேசக்கூட மாட்டிங்களா?"

"உங்கூட பேச என்னா இருக்குது?"

"ஏழுவது ரூபா வேணும்னு உங்கப்பனைக் கேட்டியாமே... என்னைக் கேக்கறதுதானே! நான் கொடுக்க மாட்டேனா?"

"குடுங்க! பள்ளிக்கூடத்துக்குப் பணம் கட்டியாகணும்" என்றாள் வேணி.

"அப்படி வா வழிக்கு" என்று தன் கைப்பையில் இருந்து பரிமளா பணத்தை எடுத்துக் கொடுத்தாள்.

"என்னக்கா! அவன்கிட்ட வாங்கிக்கிட்ட?"

"சும்மாரு. நம்ம பாவா கொடுத்த பணம்தான் இது."

குட்டி திட்டிக்கொண்டே பள்ளிக்குத் திரும்பச் செல்லத் தொடங்கி ஒரு மாதமாயிற்று. மழை பெய்ததால் அஞ்சு நாள் கடை இல்லை. மழை நின்றபின், வேணி திரும்பவும் தினம் தினம் அப்பனுடன் வண்டி தள்ளிக்கொண்டு நாஷ்தா தயாரித்துக்கொண்டு... வேல்முத்து தினம் குடித்துவிட்டுத் திரும்பும்வரை காத்துக்கொண்டு... அந்தத் தினங்களில் நகரம் தன்னைப் புதுப்பித்துக்கொண்டது. வானத்தில் பஞ்சு மேகங்கள் பாக்கியிருந்தன. அவையும் விலகி முழு நீலமானபோது வேணிக்கு சந்தோஷ வேளை வந்தது.

ஒரு மாருதி கார் அவளருகில் வந்து நின்று, 'டூட்' என்று செல்லமாக ஆரனடித்துக் கூப்பிட்டது. திரும்பிப் பார்த்தாள். அவன் சிரித்துக்கொண்டிருந்தான்.

"வேணிதான உன் பேரு?"

வேணிக்கு அவனை முதலில் அடையாளம் கண்டுகொள்வதில் கஷ்டமிருந்தது.

"என்ன பார்க்கற? அன்னிக்கு வேலிக்கு அந்தப் பக்கத்திலிருந்து பந்து வந்து விழுந்ததே! நீ கூட பொறுக்கிப் போட்டியே ஞாபகமில்லே?"

"ஆமா!"

"வேணிதான உன் பேரு?"

"ஆமா!"

அவன் இறங்கி கதவைச் சாத்திவிட்டு "டீ என்ன விலை?" என்றான். வெயில் கண்ணாடி மூலம் கண்கள் தெரிந்தன. அந்த செண்ட் வாசனை மறுபடி வேணியின் உள்ளத்தில் மலர்ந்தது.

வேல்முத்து கோவிந்தராஜுவிடம் கடன் வாங்கப் போயிருந்ததால் வேணி தனியாக இருக்க, அவன் அவள் கொடுத்த தேநீரை அவளைப் பார்த்துக்கொண்டே சாப்பிட்டான்.

"எவ்வளவு காசு?"

"காசு வேண்டாம். ஃபிரி!"

"நீ பள்ளிக்கூடம் போறதில்லையா?"

"இல்லை."



"ஏன்?"

"கடையை யார் பார்த்துக்குவாங்களாம்?"

"அப்ப காசு வாங்க மாட்ட?"

"ஊகூம்."

"ஏனாம்?"

"நீங்கள்ளாம் பெரிய மனுசங்க. இங்க வந்து டீ குடிச்சதே பெரிய விசயம்."

"தாங்க்ஸ்!" என்று அவள் கையைத் தொட்டுத் தட்டிவிட்டு காரில் ஏறிச் சென்றவன் பத்தடி போய்விட்டு சட்டென்று நின்று வேகமாக 'பேக்' அடித்து "டீ நல்லாருந்தது" என்றான்.

"டாங்க!"

மறுபடி புறப்பட்டு சற்று தூரம் போய் மறுபடி 'பேக்' அடித்துத் திரும்பி வந்து "நீ கூட நல்லாருக்கே" என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

அவன் விட்டுச் சென்ற நீலப் புகை சற்றுநேரம் பாக்கியிருக்க, வேணிக்கு அதன் பெட்ரோல் வாசனைகூடப் பிடித்திருந்தது.

'பேரு கேக்க மறந்துட்டனே!'

வேல்முத்து வீட்டுக்குச் சென்றபோது வேல்முத்து புதுசாக சட்டை போட்டிருந்தான். பொத்தானில் இன்னமும் விலைப்பட்டியல் தொங்க, தலைவாரிக்கொண்டு கண்கள் கலங்காமல் சுத்தமாக என்னவோ வேறு ஆள் மாதிரித் தோன்றினான்.

"வா கண்ணு! வா செல்லம்! என் செல்லங்களா! வாங்க! சினிமாக்குப் போகலாம்!"

"இன்னா சினிமா பாவா?"

"இன்னா வேணும்?"

வேணி "விசயம் சொல்லுங்க பாவா!" என்றாள்.

"என்ன விசயம்?"

"எதுக்காக இப்படி குலாவறீங்க! விசயம் என்ன சொல்லுங்க!"

"மனிதன், போலாமா பாவா?"

"இருடி! சொல்லுங்க பாவா. திடீர்னு என்ன ரெண்டுபேர் மேலயும் அக்கறை? புதுச்சட்டை, குடிக்கவே இல்லை, தலைசீவி இருக்கீங்க... என்ன விசயம்?"

"நம்ம வூட்டில கல்யாணம்!"

"வாங்க பாவா. இப்பவே கியூவில நின்னுக்கலாம்" என்றாள் குட்டி.

"கல்யாணம் யாருக்கு?" என்றுகேட்டாள் வேணி.

"அப்பதான் பால்கனி டிக்கெட் கிடைக்கும்!" என்றாள் குட்டி.

"யாருக்கு பாவா கல்யாணம்னு சொல்றீங்க?"

"வேணி அக்கா! உனக்குத்தான் கல்யாணம்!"

"இல்லை கண்ணுங்களா! எனக்கு. நான்தான் கட்டிக்கப் போறேன்"

"என்னிக்கு? எப்ப?"

"நாளைக்கு?"



## 5

"பாவா, நம்ம மூணு பேத்துக்குமே வூட்ல எடம்இல்ல" என்றாள் வேணி.

"பாரு! பரிமளா வந்ததும் அவள் காச போட்டு சீராமபுரத்தண்டை சின்னதா ஓட்டல் வெக்கப்போறேன். ரேஸ்ல காண்டிராக்ட் எடுத்துட்டு ஒருமாசத்துக்கு ரெண்டாயிரம் ரூபா சம்பாதிக்கப் போறேன். என்ன என்ன பிளான் வைச்சிருக்கேன் தெரியுமா? வேணிக்கண்ணு! உனக்கு சாதாரண மாப்பிள்ளையா பாத்து வெச்சிருக்கேன்? கோவிந்தராஜு எப்பேர்ப்பட்டவரு?"

"இப்ப யாருக்குக் கல்யாணம்?" என்றாள் குட்டி.

"பாவாவுக்குத்தான்."

குட்டி வேல்முத்துவின் சட்டையைப் பிடித்துக்கொண்டு "பாவா! வாணாம் பாவா! அப்புறம் வெச்சுக்கலாம் பாவா!"

"எப்பறம்? எனக்கு வயசாயிப்போய் டொக்கு விழற போதா?" என்று சிரித்தான்.

"இப்ப எதுக்கு கல்யாணம்?"

"எதுக்குன்னு சொல்லட்டா? சொல்லட்டா?"

"குட்டி சும்மாரு. வூட்டுப் பாடத்தைப் பாரு. பெரியவங்க பேச்சு பேசாதே."

"நான் மாட்டேன். நீ கல்யாணம் கட்டிக்கக் கூடாதுன்னா கூடாதுதான்!" என்றது குட்டி.

வேல்முத்து இன்னும் சிரித்தபடியே "சரி வேண்டாம். நாளைக்கு கல்யாணம் வெச்சுக்கலாம்."

"ம்... ம்... என்னைக்கும் கூடாது பாவா!"

"ஏண்டி?"

"அவ சரியில்லை!"

"எவ?"

"பரிமளா."

"என்னது?" வேல்முத்து மின்சாரம் தாக்கினாற்போல குட்டியை ஒரு பேயறை அறைந்தான். "என்னது? அவளா! அவளுக்கு என்ன

வயசு? உனக்கு என்ன வயசு? அவளா! பள்ளிக்கூடம் போய் ஓர் எழுத்துப் படிச்சா அவளா? என்னாடி திமிரு இதுக்கு?"

அடியின் மூர்க்கத்தையும் எதிர்பாராத தன்மையையும் சமாளிக்க முடியாமல் குட்டி அப்படியே சுருண்டு படுத்துக்கொள்ள, வேணி அதைத் தன் பாவாடைக்குள் போர்த்திக்கொண்டு "பாவா! ரொம்ப சின்னது அது! இப்படி அடிக்காதீங்க! காது செவிடாயிரும்" என்றாள்.

"ஆவட்டும். இந்தப் பேச்சு பேசக்கூடாது!"

"பாவா! யோசிச்சுப் பாருங்க. இப்ப கல்யாணம் தேவைதானா?"

"ஆமா தேவைதான்."

"எங்க கதி என்னாறது?"

"உனக்கென்னாடி குறை வெச்சிருக்கேன்! பாவாடை இல்லையா? தாவணி இல்லையா? சோறு இல்லையா? காசு கொடுக்கறதில்லையா? சினிமாப் போவணும்னா காசு கொடுக்க மாட்டேன்னு எப்பவாச்சியும் சொல்லியிருக்கனா? பாரு, வேணி! பரிமளா ரொம்ப நல்லவ. தங்கக்கட்டி. அதுகிட்ட முதல் போட நெறைய பணம் இருக்கு. உன்னைய நிசம் அம்மாவைப் போல வெச்சிருக்கும். உனக்கு வேலை பங்கு கொறையும். உன் பாவா உனக்கு கெடுதலா எதாவது பண்ணுவனா? கோவிந்தராஜுவும் முனியப்பாவும் உம்மேல் எத்தனை ஆசை வெச்சிருக்காங்க தெரியுமா? உனக்கு நல்ல மாப்பிள்ளை தேட பணம் சம்பாதிக்கத்தானே இந்தக் கல்யாணமே!"

வேணிக்குப் புரியவில்லை. மையமாகத் தலையாட்டினாள்.

"அ... இப்ப வந்துருச்சு பாரு சிரிப்பு!"

அடுத்த வாரம் கல்யாணம் நடந்தது. டேப் வைத்து, பீப்பி நாயனம் வைத்து, சந்துப் பையன்கள் எல்லாம் நாட்டியம் ஆடியது வேடிக்கையாக இருந்தது.

பரிமளா அவங்க ஊர்வழக்கம் என்று முன்னந்தலையில் செவ்வந்திப் பூவும் இடுப்பில் பித்தளை ஒட்டியாணமும் அணிந்துகொண்டு வெற்றிலை போட்டிருந்தாள். சதா பேசிக்கொண்டே இருந்தாள். எல்லாருக்கும் கிளாசில் சாராயம் அளிக்கப்பட்டது.

முனியப்பா நிறைய குடித்தான். கோவிந்தராஜு வேணியை சைஸ் பண்ண பல தடவை முயன்றான். "உங்கப்பனுக்கு எத்தனை கடன் கொடுத்திருக்கேன் தெரியுமா, கண்ணு? கல்யாண செலவெல்லாம் யாருது தெரியுமில்ல?"

"தெரியும்."

"பின் ஏன் முரண்டு பண்ற? உன்னைத் தொட்டாத்தான் என்ன! கரைஞ்சா போயிருவ" கோவிந்தராஜு அவளைத் தகாத இடத்தில் எல்லாம் தொட்டுப் பார்க்க, வேணிக்கு அருவருப்பாக இருந்தது.



முனியப்பா குட்டியை எடுத்து முத்தம் கொடுப்பதும் சரியாக இல்லை. குட்டி அப்படியொன்றும் குழந்தை இல்லை. காண்டிராக்ட் சினேகிதர்களும் வந்தார்கள். லவுடுஸ்பீக்கரில் ரிக்கார்டு போட்டார்கள். மைக்கில் பேசினார்கள். மொய் எழுதினார்கள், யாரோ கார்ப்பரேசன் கவுன்சிலர் வந்து போனார்.

பரிமளா இடைவிடாமல் சிரித்துக்கொண்டிருக்க,

"இப்ப யாருக்கு அதிர்ஷ்டம்? பரிமளாவுக்கா வேல் முத்துவுக்கா?" என்றான் முனியப்பா.

"அடப் போ, மாப்பிள்ளை!"

"நானா மாப்பிள்ளை! வேல்முத்துதானே?"

"வே! இவர் இன்னிக்கு மட்டும் மாப்பிள்ளை. நீங்க என்னைக்குமே மாப்பிள்ளை."

அக்காவும் தங்கையும் ஒரு சோக விளிம்பிலிருந்துகொண்டு இதையெல்லாம் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஜிலேபி தட்டு நிறைய இருந்தது. யாரும் சாப்பிடவில்லை.

"அக்கா ஒரு ஜிலேபி அக்கா!"

"அதை மட்டும் தொட்டே கொன்னு போட்டுருவேன்."

"பசிக்குது அக்கா!"

"வா ரெண்டு பேரும் போய் வெளிய போய் சாப்ட்டுட்டு வரலாம்." வேணி அவளை அழைத்துக்கொண்டு, மெஜஸ்டிக் சர்க்கிளை நோக்கி நடக்கும்போது பாலத்தடியில் பஸ்கள் வரிசையாகப் போய்க்கொண்டிருக்க –

அய்யப்பக்காரர்கள் பஸ்சில் வந்து இறங்கியிருந்தார்கள்.

லாட்ஜ் பக்கத்தில் பெரிசாக பூக்கடையும் மிளகாய் பஜ்ஜியும் வியாபாரம் ஆகிக்கொண்டிருக்க, முப்பது பைசா கொடுத்து ஆளுக்கொரு பஜ்ஜி வாங்கிக்கொண்டு அப்புறம் தண்ணீர் அருந்திவிட்டு காசு கொடுத்துவிட்டு லைட் அருகில் நின்று கொண்டு, போகும் வரும் வாகனங்களைப் பார்த்துக் கொண்டிருக்க, "வேணி" என்று குரல் கொடுத்துக்கொண்டு அந்த மாருதி கார்க்காரன் அவர்கள் அருகே நிறுத்தினான்.

"என்ன இங்க நின்னுகிட்டு இருக்க"

"சும்மாதான்."

"ஏறிக்க" என்று கதவைத் திறந்தான்.

"இது யாருக்கா?"

"மைதானத்தில ஒண்ணு ரெண்டு முறை பார்த்திருக்கேன்."

"ஏறிக்க! லைட்டு வந்திருச்சில்லை? இது யாரு தங்கச்சியா?"

"ஆமா."

குட்டி சந்தோசமாக ஏறிக்கொள்ள, "உங்க வீடு எங்க இருக்குது?" என்றான்.

கார் நாய்க்குட்டிபோல இருந்தது. உள்ளே வாசனையாக இருந்தது.

"இந்தக் காரு உங்களுதா அண்ணா?"

"இல்லைம்மா. எங்க எஜமானரது."

"நீங்க டைவரா அண்ணா?"

"அதும் இல்லை! டைவர் செகரட்ரி சினேகிதன் என்ன என்னவோ!" வேணிக்குப் புரியவில்லை.

"உங்க வீடு எங்க இருக்குது?" அவன் கேட்டான்.

"அங்கெல்லாம் கார் போவாது" என்றாள் குட்டி.

"பக்கத்தில் எங்கயாவது எறக்கி விடட்டுமா? எங்க சொல்லு?"

"பாலம் தாண்டி ரயில் பாதையாண்ட. இன்னைக்கு எங்க வீட்டில கல்யாணம்" என்றாள் குட்டி.

"அப்படியா! யாருக்கு?"

"எங்கப்பாவுக்கு."

"அப்பான்னா வண்டி தள்ளிட்டு ஒரு கறுத்த ஆளு. கட்டை குட்டையா. அவரா?"

"ஆமா."

"கல்யாணமா?"

"ஆமா."

"உங்கம்மா என்ன சொன்னாங்க?" என்று வேணியைத் திரும்பிப் பார்த்துக் கேட்டான்.

"அம்மா இல்லை" என்றாள் வேணி. அவளால் அடக்க முடியாமல் படக்கென்று கண்ணீர் மளமளவென்று கன்னங்களில் வழிய ஆரம்பித்தது. விக்கி விக்கி அழுதாள்.

அவன் காரை நிறுத்தி அவளை ஆர்வமாகப் பார்த்துக்கொண்டிருந்தான். "அழுதா போதுமா? அழும்போதுகூட அழகாகத்தான் இருக்க. பரவால்லை. கொஞ்சம் நேரம் கூவு. என்னைக் கேட்டால் ஒரு லிமிட்டுக்குமேல் அழுகிறது வேஸ்ட் இல்லையா? உம்பேரு என்ன?"

"குட்டி."

"வேற பேரு?"

"தேவிம்பாங்க இஸ்கோல்ல."

"அட இஸ்கோலுக்கு போறியா? எத்தனாவது?"

குட்டி ரெண்டு விரலைக் காட்ட–

வேணி கண்ணைத் துடைத்துக்கொண்டு–

"பொய்யி. ஒண்ணாவது! ஒரு தடவை கோட்டு ஒரு தடவை



லேட்டு" என்றாள்.

அவன் காரைக் கிளப்ப, "இப்ப சொல்லு, எங்க விடறதுன்னு."

"எங்கயும் வேணா. திரிபுவனாண்டை விட்டுருங்க. வேடிக்கை பார்த்துட்டுப் போறம்."

திரிபுவன் பக்கத்தில் அவன் அவர்களை உதிர்த்து விட்டு, காரை விறுவிறுப்பாகக் கிளப்பிக்கொண்டு சென்றதும் அவளிடம் குட்டி கேட்டாள்.

"அக்கா இது யாரு?

"யாரோ" என்றாள் வேணி.

"பேரு?"

"தெரியாது."

"உம்பேரு தெரிஞ்சிருக்கு?"

"ஆமாம்."

"நீங்க ரெண்டுபேரும் லவ்வர்சா?"

"போடி!"

வேணிக்கு இப்போது மனசில் இருந்த கனமெல்லாம் குறைந்திருந்தது.

பாடலாம் போலக்கூட இருந்தது. "லல்லலல்லா" என்றாள்.

"நிச்சயம் இது லவ்வர்தான்" என்றாள் குட்டி. "அடுத்தது உன் கல்யாணமா?"

"அந்தாள் பேர் கூடத் தெரியாது!"

"பைத்தியமே! பேரெல்லாம் தெரிய வேண்டாம்னு ஒரு படத்தில் வந்தது. பாத்துகிட்டா போதுமாம். பின்னால லல்லாலல்லாதான்."

குட்டி பாலத்தருகே டான்ஸ் ஆடிக்கொண்டு திரும்ப வீட்டுக்குச் சென்றபோது இருள் கவிந்துவிட்டது. பந்தலில் வரிசையாக இலை போட்டு பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில் பலபேர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

வேட்டியை டாப்பா கட்டு கட்டிக்கொண்டு கோவிந்தராஜுவும் முனியப்பாவும் பரிமாறிக்கொண்டிருக்க, வேணி வந்ததும் "எங்க போயிட்ட?" என்றான் வேல்முத்து.

"சும்மா!" என்றாள். வேல்முத்துவும் கோவிந்தராஜுவும் தள்ளாடிக் கொண்டிருந்தார்கள்.

"வேலு அடுத்தது யார் கல்யாணம்?"

"வேணி கல்யாணம்."

"மாப்பிள்ளை யாரு?"

"வேற யாரு? கோவிந்தராஜு நீதான்!"

"ஞாபகம் இருக்குதில்லை? கொடுத்த வாக்கு?"

# 6

**கோ**விந்தராஜு வேணியைப் பார்த்து "பாரு, உங்க அப்பனுக்கு எத்தனை கடன் கொடுத்திருக்கேன் தெரியுமில்லை?" என்றான். சாராயத்தில் இன்னும் தள்ளாடிக்கொண்டிருந்தான். ஆண் பிள்ளைகள் அனைவருமே அதிகப்படியாகக் குடித்திருந்தார்கள்.

வீட்டுக்குள் மாலையெல்லாம் போட்டு மஞ்சள் பூவைப் படுக்கையில் தூவி முதலிரவுக்குத் தயார் செய்துகொண்டிருக்க –

கோவிந்தராஜு வேணியைக் காட்டி, "அடுத்தது நம்ம கல்யாணம் தான். எப்ப வெச்சுக்குவம்? சொல்லு! விண்சார் மானர்ல வைச்சுக்குவமா? அதை காண்ட்ராக்ட் எடுத்ததே நானும் முனியப்பாவும்தானே! அங்கேயே வெச்சுக்குவம். உங்கப்பன்கிட்ட நான் கடனெல்லாம் திருப்பிக் கேப்பனா, கண்ணு?"

வேணி அவனை நேராகப் பார்த்து, "அய்யா! உங்களுக்கு பாவா எத்தனை கடன் தரணும்?" என்று கேட்டாள்.

"அது இருக்குமா, கணக்கு வழக்கில்லாம!"

"எத்தனை சொல்லுங்களேன். வீட்லயாவது கணக்கு வெச்சிருப்பிங்கல்ல?"

"எதுக்கு உனக்கெல்லாம் அந்தக் கணக்கு?"

"அதை எப்படியாவது தீர்த்து வெக்க முயற்சி பண்ணிப் பார்க்கப் போறேன்."

கோவிந்தராஜு கண்களில் நீர்வரச் சிரித்து "ஏய் வேல்முத்து! உம்பொண்ணு இன்னா பேசுது பாத்தியா? கடனைத் திருப்பித் தரப்போவுதாம்!"

வேல்முத்து அங்கிருந்தே சிரித்தான். "அது பேச்சையெல்லாம் கேட்காத நீ. அது உனக்குத்தான்னு தீர்மானமாயிருச்சில்லை!"

"பாவா! இது என்ன வியாவாரமா பாவா? உங்களுக்கு என்னை வெச்சு கடன் வாங்க என்ன உரிமை இருக்குது?"

வேல்முத்து சிரித்து "கல்யாண நாளில்லை? நாமெல்லாம் சந்தோசமா இருக்கணுமில்லை. போய் பாலைக் காச்சிட்டு வா. நானும் பரிமளாவும் முதலிரவு பண்ணப் போறமில்லை. ஆயிரம் இரவுகள் வருவதுண்டு. ஆனால் இதுதான் முதல் இரவு!"



"பரிமளாவுக்கா உனக்காடா?"

"ரெண்டு பேத்துக்குமே! இல்லை..."

"அட போ நாயினா. நான் இன்னமும் கன்னிப் பொண்ணில்லை?" என்றாள் பரிமளா.

குட்டி அதையெல்லாம் ஆர்வமாகக் கேட்டுக்கொண்டிருந்தது. வேணிக்கு எரிச்சலாக வந்தது. "அக்கா! ராத்திரி எங்க படுத்துக்கப் போறம்?"

"ஆமாம் இப்ப அதுதான் முக்கியம்!"

கோவிந்தராஜுவை அழைத்துப்போக கார் வந்திருந்தது. "வேணி... வேணி எங்கூட ஒரு ரைடு வர்றியா? ரெண்டு பேரும் தனியா போய் வரலாம்! லேக் வ்யூவில ஐஸ்கிரீம் வாங்கித் தாரேன்!"

"ஒண்ணும் வேண்டாம்! எத்தினி கடன்னு மட்டும் சொல்லிடுங்க"

"சரி அதானே உன் ஆசை! சொல்லிட்டா போவுது!"

வேணி அந்தக் கூட்டம் ஓயும்வரை காத்திருந்து வீட்டுக்கு உள்ளே போக, அவள் பின்னாலே குட்டியும் வந்தாள். நடுக்கூடத்தில் பெட்ரோமாக்ஸ் வைத்து கயிற்றுக் கட்டிலில் மெத்தை போட்டு அலங்காரம் பண்ணியிருக்க, பரிமளா அதன்மேல் சந்தனம் இறைத்து, "ஊதுபத்தி வெச்சுரு வேணி" என்றாள்.

வேணி அவளைப் பார்த்து "இந்த மாதிரியெல்லாம் என்னை அதிகாரம் பண்ண முடியாது. தெரியுமில்லை?"

பரிமளா சிரித்தது இன்னமும் எரிச்சலாக இருந்தது.

"பால் காச்சிகிட்டு வருவியா?"

"மாட்டேன்."

"உங்கப்பன் கிட்ட சொன்னால் செவுட்டில அறையுவான் இல்லை?"

"சொல்லிக்க."

"வேணி கண்ணு என்கூட சினேகிதமா இருக்கறதில உனக்குத்தான் நல்லது. இப்பவே சொல்லிட்டேன்."

வேணி தன் பாயையும் தலையணையையும் போர்வையையும் எடுத்துக்கொண்டு வெளியிலே சென்றாள். அவளைத் தொடர்ந்து ஒட்டிக்கொண்டு பரிமளாவை விரோதமாகப் பார்த்துக்கொண்டு குட்டியும் சென்றாள்.

"எங்க போற?"

"எங்கேயோ. உனக்கென்ன?"

"ம்... எத்தினி நாளைக்கு. பாத்துருவோம்!"

**வே**ல்முத்து இப்போது உள்ளே வந்தவன் முழு போதையில் இருந்தான். தள்ளாடிக்கொண்டு படுக்கையில் விழுந்தான்.

"பாரு இந்த மாதிரி குடிக்கிறது இதுதான் கடைசி தடவை தெரியுமில்லை?" என்றாள் பரிமளா.

"தெரியும். இப்பவே இன்னும் ஒண்ணே ஒண்ணு கொடுத்துரு. இதுதான் லாசிட்டு."

"அந்தாளுகிட்ட கடன் வாங்கியிருக்கியா?"

"கடன் எல்லாம் தீர்ந்துருச்சி" என்று படுக்கையில் விழுந்தான்.

"குடிகாரன்கூட முதலிரவு பண்ணிப் பழக்கமில்லைய்யா. நாளைக்கு எழுந்து கடைக்குப் போவியா இல்லையா?"

வேல்முத்து படுத்தபடியே தூங்கிப் போயிருந்தான்.

வேணி வெளியே பூசப்பட்ட தரையில் தெரு விளக்கு வெளிச்சத்தில் படுத்திருக்க, பரிமளா வெளியே வந்து "உள்ள வா வேணி, உள்ள வந்து படுத்துக்க! உள்ள விசேசமா ஒண்ணும் நடக்கலை."

வேணி பதில் சொல்லாமல் இருக்க—

"சின்னவளே நீ வாயேன்!"

குட்டி, "நீ நாசமாப்போவே" என்று கரித்து, கையை அவள்பால் சொடக்கினாள்.

பரிமளா சிரித்தாள். "வராட்டி போங்களேன். குளிர் காயுங்க, தவியுங்க. நல்லதனமா சொன்னா வரமாட்ட. அப்பன் எழுந்தும் நாலு போடு போடச் சொன்னா சரி!"

**வேணி** விழித்திருந்தாள். அவளுக்குக் குழப்பமாக இருந்தது. ஓடிப் போய்விடலாம் என்று தோன்றியது. எப்படி எங்கே என்று புரியவில்லை. குட்டியைவிட்டுப் போய்விட்டால்? அது முடியாது. யார் படிக்க வைப்பார்கள்? பரிமளா அதை வீட்டுவேலைக்கு வைத்துவிடுவாள். கடையை யார் பார்த்துக்கொள்வது. பாவா செய்தது அநியாயம். இந்தப் பரிமளா பாவாவிடம் மிச்சமிருக்கும் காசையெல்லாம் எடுத்துவிடப்போகிறாள். எடுத்துக்கொண்டு, எங்கள் இருவரையும் துரத்திவிடப்போகிறாள். அதைத் தடுக்க வேண்டும் என்று வேணியின் இளமனசுக்குள் எண்ணங்கள் ஓடின.

பரிமளா வீட்டுக்கு வெளியே வந்து உட்கார்ந்துகொண்டாள்.

உள்ளே பாவா குறட்டை விடும் சத்தம் கேட்டது. வேணி அவள் இருக்கும் பக்கமே திரும்பாமல் அந்தப் பக்கம் பார்த்துக்கொண்டு படுத்துக்கொண்டாள்.

"நீ தூங்கலை எனக்குத் தெரியும் கண்ணு."

வேணியை குட்டி இறுகக் கட்டிக்கொண்டாள். இருவரின் கரங்களும் கோர்த்துக்கொண்டன.

"வேணி என்னை விரோதமா நெனைச்சுக்காத! தனியா இருக்க



எனக்கு பயமா இருக்குது. அதுக்குத்தான் உங்கப்பனைக் கல்யாணம் கட்டிக்கிட்டேன். உங்க ரெண்டுபேத்தையும் துரத்திவிடுவேன்னு நெனைக்காதே. நானும் உன்னை மாதிரி வளந்தவதான். எனக்கும் வீட்டு வேலை, சமையல் எல்லாம் தெரியும். உங்க ரெண்டுபேத்தையும் நல்லாவே வளர்ப்பேன். நல்லாவே காப்பாத்துவேன். ஆனா முதமுத சினேகிதம் வேணும். என்னை மூஞ்சில அடிச்சாப்பல யாராவது பேசினாங்கன்னா எனக்கு கெட்ட கோபம் வந்துரும். அப்பறம் அவங்களை கிட்ட சேர்க்கவே மாட்டேன். எனக்கு மானம்தான் பெரிசு. என்ன பேசமாட்டியா?"

வேணி பேசாமல் இருந்தாள்.

"சரி, ஒரே ஒரு வார்த்தை பதில் சொல்லு. நான் உங்க வூட்ல இருக்கணுமா போயிரணுமா?"

"அது உங்க இஷ்டம்."

"அப்பாடா! முதமுத உன் குரல் வெளிய வருது."

"சரி உன் இஷ்டம் என்ன? நீ இருக்கணும்கிறியா போகணும்கிறியா?"

"நான் சொன்னா யார் கேக்கப் போறாங்க?"

"சொல்லு! நான் கேக்கறேன் சொல்லு."

"என்னை நிசமா கேட்டா நீங்க வேண்டாம். எங்க வீட்டில இருக்கறவங்களுக்கே எடம் இல்லை. பணம் இல்லை."

"அதனால நான் வேண்டாங்கற. சரி. நான் போயிர்றேன். நீயா 'பரிமளா அக்கா! வாங்க'ன்னு என்னை வந்து கூப்பிடற வரைக்கும் நான் இந்த வீட்டுப்படி மிதிக்கப்போறதில்லை. என்ன சரிதானே?"

"இதை பாவாகிட்ட சொல்லுங்க. அவங்க எழுந்த உடனே எங்களைப் போட்டு பொத்து பொத்துன்னு அடிப்பாங்க. அதுக்குத்தானே இந்த நாடகமெல்லாம்."

"இல்லை. நான் வேல்முத்துகிட்ட இதைச் சொல்ல மாட்டேன்."

"வேண்டாங்க. நீங்க உங்க இஷ்டப்படி வாங்க. இருந்துக்கங்க. எங்க ரெண்டு பேத்தையும் வேணா துரத்திவிட்டுருங்க. என்ன வேணாலும் செய்யுங்க. உங்களுக்கு உரிமை இருக்குது."

பரிமளா அவளைப் பார்த்து புன்னகை செய்தாள். "நானும் உன் வயசில அப்படித்தான் இருந்தேன்."

"ஏய் குட்டி வாடி! பல் வெளக்க போகலாம் பைப்புக் குழாய்க்கு. இனிமே அங்கதான் நமக்கு வாழ்வு."

பரிமளா அவளை சற்று நேரம் உணர்ச்சியில்லாமல் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு புறப்பட்டுப் போகும்போது அவள் நகைகள் ஒலித்தன.

வேணி உள்ளே போனாள். கட்டிலில் அரைகுறையாகப் படுத்திருந்த பாவாவைப் பார்த்தாள். மெல்ல காலை வெளிச்சம் அவன் மேல்

பரவ, வாய் திறந்து பெரிய குறட்டையாக ஒலித்துக் கொண்டு
தூங்கிக்கொண்டிருந்தான்.
வேணி கடைக்கு உண்டான பாத்திரங்களை எடுத்துச் சென்று
கழுவ ஆரம்பிக்க –
குட்டி தன் பாடப்புத்தகங்களை சேகரித்து வீட்டுப் பாடம்
எழுதத் தொடங்கினாள்.
பாத்திரம் கழுவினபின் வழக்கம்போல "பாவா... பாவா" என்று
தகப்பனை எழுப்பினாள். அவன் எழுந்ததும் பக்கத்தில் தடவிப்
பார்த்தான். "எங்க பரிமளா?"
"தெரியாது பாவா. அப்பவே எழுந்து போயிட்டாங்கன்னு
நெனைக்கறேன்! பாவா கடைக்குப் போறமில்லை?"
வேல்முத்து யோசித்துப் பார்த்தான். "ஆமா போவாம பின்ன
என்ன செய்ய! கல்யாணம் பண்ணிக்கிட்டதால பொறுப்பு சாஸ்தி
யாவே போயிருச்சில்லை?"
"ரொம்ப களைப்பா இருக்கிங்களே?"
"பரவாயில்லை, சமாளிச்சுருவேன்."
"வேணி!" என்று குழைவாக அழைத்தான்.
"என்ன பாவா"
"எம்மேல கோவம்தானே உனக்கு?"
"ஆமாம்."
"கோவம் போகணும்னா என்ன செய்யணும்?"
"அந்த கோவிந்தராசுகிட்ட எத்தினி கடன் வாங்கியிருக்கிங்கன்னு
சொல்லுங்க."
"எதுக்கு?"
"அடைக்கணும்."
"அடைச்சாச்சுன்னு சொன்னனில்லை."
"அடைச்சாச்சுன்னு சொன்னனில்லை."
மத்யானம் பரிமளா கடைப்பக்கம் வந்திருந்தாள். "எல்லாம்
சரியா இருக்குது. பொண்ணு கோவம்தான் இன்னும் போவலை.
எம்மேலேயே கோவம் போவலையே! வேணி ஸ்டோருக்குப் போய்
ஒரு லிட்டர் கடலெண்ணை வாங்கி வருவியா?" என்று கேட்டாள்.
வேணி கிளம்பி ஸ்டோருக்கு அருகில் செல்லும்போது அவனை
மறுபடி பார்த்தாள். அருகே காரை நிறுத்தி "எம்பேரு கேட்கவே
இல்லையே நீ. காதல் பண்றதுக்கு பேரு வேணுமா வேண்டாமா?"
என்றான்.
திரும்பிப் பார்த்தாள்.
"உம்பேரு வேணி. மறக்கலை பாத்தியா?"
லேசாக சிரித்தாள்.
"வேணி எங்கூட கோவா வரியா?"



# 7

வேணி அவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள். "எங்க போகணும்?"
"கோவா! கோவா கேள்விப்பட்டதில்லை?"
"இல்லை. அது எங்கிருக்கு? மல்லேசுவரம் தாண்டியா?"
அவன் சிரித்து, "நிசமாவே நீ மல்லேசுவரம் தாண்டிப் போனதில்லை
போல இருக்குது, வேணி."
"உம் பேரு என்ன? சொல்லலியே."
"எம் பேரு என்னன்னு வேணாம் உனக்கு"
"அட, பேரு சொல்லுய்யான்னா. என்னை மட்டும் வேணி
வேணின்னு அடிக்கடி கூப்பிடறப்ப."
"எம்பேரு சொல்லிக் கூப்பிடுவியா? சொல்றேன்."
"சொல்லு."
"ஆனந்த். சொல்லு ஆனந்த்."
"அப்புறம் சொல்லிக்கலாம்" என்றாள்.
அவன் காரில் ஏறிக்கொள்ளுமாறு அழைத்தும், அவள்
மறுத்துவிட்டாள். ஏதோ சாக்குப்போக்குச் சொன்னாள்.
அவளுக்கு ஆண்பிள்ளையிடம் இப்போதுதான் பயம் விலகி
யிருந்தது.
ஏதோ ஓர் ஆர்வம் இப்போதுதான் புறப்பட்டிருந்தது.
ஆண்களைப் பற்றிய எண்ணங்கள் அத்தனையும் ஒருவிதக்
குழப்பத்திலேயே இருந்தன.
"டீ சாப்டறியா?"
"எங்க வூட்டுக்கு வா... பஸ்ட் கிளாசா தேத்தண்ணீர் கொடுக்
கிறேன், ஏலக்காயெல்லாம் போட்டு. எங்க ஓனரே டீ எஸ்டேட்டு
வெச்சிருக்காரு. கோவாவுக்கு வண்டி போவுது. அவர் பையன்கிட்ட
டெலிவரி பண்ணிட்டு வரணும் இந்த மாருதியை."
"நான் வரமாட்டேன்" என்றாள், தீர்மானமாக.

"ஏன், ஒரு நாலு நாளைக்கு உங்க கடையைப் பார்த்துக்க ஆள் இல்லையா?"

"எங்கப்பா உன்கூட பேசினன்னு தெரிஞ்சாலே கொன்னு போட்டுருவாரு."

"அதெல்லாம் நடக்காது வேணி. நான் உன்கூடப் பேசினா என்ன தப்பு? எம்மேல நம்பிக்கை இல்லையா உனக்கு? சொல்லு, உன் கையைப் புடிச்சுடுவன்னு பயமா?"

"அதில்லை. எங்கப்பா சினேகிதங்கள் எல்லாம் என்னைத் தொட்டுப் பார்ப்பாங்க."

"எதுக்கு?"

"என்னவோ. குழந்தை குழந்தைன்னுதான் கூப்பிடுவாங்க..."

"அவங்களையெல்லாம் தொடவிடாதே. நீ இனிமே குழந்தை இல்லை" என்று அவள் மார்பைப் பார்த்தான்.

வேணிக்கு வெட்கமாக இருந்தது.

"கோவாவுக்கு வரியா இல்லையா? தீர்மானமா சொல்லு."

"என்னைக்குப் போற?"

"நாளைக்குப் போறதா ஏற்பாடு. நீ வரதா இருந்தா ஒரு ரெண்டு நாளு காத்திருக்கலாம்."

"நான்வேணா எங்கப்பாகிட்ட கேட்டுப் பார்க்கறன்."

"நான் வரட்டுமா? கேக்கட்டுமா?"

"அய்யோ, வேண்டாம். ஆம்பிளைன்னு தெரிஞ்சுதுன்னா கண்டம் கண்டமா வெட்டிப் போட்டுருவாரு."

"சும்மா பெனாத்தாதே. உன்னை யாரும் அப்படி வெட்டிப் போட்டுட முடியாது."

அப்போது அந்த வழியே வந்த பரிமளா, அவர்கள் இருவரையும் பார்த்தாள். "என்னது. யாரிது கண்ணு?"

"இவங்க வந்து..."

"இவங்க யாரு?" என்றான், ஆனந்த்.

"இவங்கதான் எங்கப்பா புதுசா..."

"ஓ... அப்படியா? அம்மா வணக்கம்மா!" என்றான் மிகையான மரியாதையுடன்.

"நீ யாருப்பா? காரு உன்னுடையதா?"

"என்னுது மாதிரித்தான். எம்பேரு ஆனந்த்."

"இந்தப் பொண்ணை எப்படித் தெரியும்?"

"சும்மா டீக்கடையில் சந்திச்சது. அவ்வளவுதான்."

"என்னைப்பத்தி ஏதாவது புகார் சொல்லிச்சா?" என்று கேட்டாள்,



நெற்றியைச் சுருக்கிக் கொண்டு.

"இல்லையே! புதுசா வந்திருக்காங்களே அவங்க தங்கமானவங்கன்னு சிலாக்கியமாத்தான் பேசிச்சு என்ன வேணி?"

"அப்படி இருக்காதே. வேணி, உங்கப்பன் சில்லறைப் பணம் கேட்டது."

"அப்ப நான் வரட்டுமா, வேணி?" என்று அவன் புறப்பட்டான். "கோவா! ஞாபகமிருக்கட்டும்."

"சரி" என்று பரபரப்புடன் வேணி அவனை விரட்ட –

பரிமளா, "இன்னாடி! புளியங்கொம்பாத்தான் பிடிச்சு வெச்சிருக்க. எங்கிட்ட சொல்லக்கூடாதா? யார்றி இவன்?"

"யாரோ..."

"உங்கிட்ட என்னா அப்படி பத்துதல்? வேல்முத்து கிட்ட சொல்லிடவா?"

"சொல்லு" என்றாள். பயமாகத்தான் இருந்தது.

"ஆமாம், எங்க பணம்! வசூல் பணம்!"

"இந்தா" என்றாள். "சீட்டுக்குக் கொடுத்தது போக, பாமாயிலுக்குக் கொடுத்ததுபோக..."

"மிச்சம் எத்தனைதான் இருக்குது?"

"நாலணா."

"சரிதான்... சரியான மூதேவி! வாடி வூட்டுக்கு."

"போங்க வர்றேன்."

பரிமளா போனது, வேணிக்குப் பயமாகத்தான் இருந்தது. பாவாவிடம் இல்லாததும் பொல்லாததும் சொல்லி வைக்கப் போகிறாள். அய்யோ, என்ன செய்வார்? அடிப்பார். குடித்துவிட்டால் அடி சரியாக விழாது. தள்ளாடலே அதிகமாக இருக்கும்.

வீட்டுக்குப் போனபோது குட்டி சிலேட்டில் எழுதிக்கொண்டிருந்தாள்.

"எங்கக்கா போயிட்ட? மாருதி வந்தாரா?"

"குட்டி, கோவா எங்க இருக்கு?"

"என்ன கோவா, பால்கோவாவா?"

"இல்லை. ஏதோ இடம் பேருடி."

"தெரியாது. நான் டீச்சர் கிட்ட கேட்டுக்கிட்டு வரவா."

"வா..."

"என்னை 'மாவீரன்' அழைச்சிட்டுப்போவியா? சூப்பர் கொட்டாய்ல வந்திருக்கு."

"எத்தினிவாட்டி பாத்தாச்சு."

"அலுக்கவே இல்லை. அய்யோ ரஜினி... ரஜினி..."

"பரிமளா வந்தாளா?"

"வந்துச்சு. யாரோ பார்க்க வந்தாங்க. அவங்க பின்னாடி போயிருச்சு."

"அங்க வந்தா. கடைக்கு சில்லறை கேட்டா. நான் கணக்கு சொல்லிட்டேன்."

"காசு நெறைய வெச்சிருக்காங்க அக்கா! ரவிக்கைக்குள்ள நோட்டு சொருகியிருக்கிறது, தெரியாது. அக்கா, உன் லவ்வர்ஸ் வந்தாரா?"

"சே! என்ன பேச்சு.."

"அவங்களை பார்த்ததுமே மனசுக்குள்ள லல்லல்லா சத்தம் கேட்டுச்சா?"

"சினிமா பார்த்து கெட்டுக்கிடக்குது கழுதை."

"அக்கா, உங்கிட்ட ஒண்ணே ஒண்ணு கேக்கலாமா?"

"தெரியும். என்ன கேக்கப்போறன்னு. மானிங் ஷோதானே?"

"இல்லை."

"பேல்பூரி?"

இல்லை என்று வசிகரமாகத் தலையாட்டினாள்.

"பின்னே என்னவாம்?"

"ஸ்கூல் போதும் அக்கா."

"என்னது" என்றாள், கன்னம் சிவந்து. "நீ மட்டும் மறுபடி இந்த வார்த்தை சொன்ன, கைல சூடு இழுத்துருவேன். அம்மா என்னா சொல்லிட்டுப் போயிருக்குது. தெரியுமில்லை."

"எனக்கு என்னா தெரியும்? நான் அப்ப சின்னப் பிள்ளை. என்ன சொன்னங்களோ. டீச்சர்கிட்ட மாட்டிக்கிட்டு ரொம்ப ரோதனைக்கா. இல்லைன்னா பச்சை யூனிபாரம் போட்டுகிட்டு கவர்மெண்டு ஸ்கூல் இருக்குதே அங்க போறேனே."

"ஏன் இந்த ஸ்கூலுக்கு என்ன கொறை?"

"எல்லாரும் பணக்காரங்க அக்கா."

வேணி ஏதோ சொல்ல வாயெடுத்தவள் சட்டென்று நின்றாள்.

"கிழிசலைப் போட்டுட்டு நிக்கறது ரொம்ப கஷ்டமா இருக்குது. அக்கா" என்று இயல்பாகத்தான் சொன்னாள்.

வேணிக்குக் கண்ணில் நீர் ததும்பியது. "குட்டி, கவலைப்படாதே. உன்னை அவங்களுக்கு சமானமா வளர்க்கறேன். எனக்குத்தான் படிப்பில்லை. உனக்கு படிப்புக் கொடுத்தே ஆகணும். நல்ல ஸ்கூல் அது. அதை விடக்கூடாது!"

"அப்ப எனக்கு ஒரு டெரிகாட் யூனிபாரம் வாங்கித் தா. எத்தனை கிழிசல் பாரு இது."



"என்னா வெலை?"

"என்ன வெலை?" என்று புதுசாகக் குரல் கேட்டது.

பரிமளா உள்ளே வந்து விசாரிக்க இருவரும் மவுனமானார்கள்.

"என்னா கன்னு எங்கிட்ட கேக்கக்கூடாதா? உனக்கு சில்க்கிலேயே பண்ணிப்போடுவன்டி, அத்தனை வசதி இருக்குது எனக்கு. எங்கப்பன் யாரு தெரியுமா? சிங்கப்பூர் மருதுன்னா தெரியுமா?"

"என்னா சிங்கப்பூரா, மடிவாளா பக்கத்தில இருக்குதே அதா?"

வேணி "வாடி போகலாம்" என்றாள்.

வேல்முத்து மரத்தடியில் சகாக்களுடன் பேசிக்கொண்டிருந்தவன், அவர்கள் இருவரையும் பார்த்தான். பக்கத்தில் கோவிந்தராசுவும் முனியப்பாவும் நின்றுகொண்டிருந்தனர்.

"வேணி இங்க வாடி" என்றான்.

அவள் அருகில் சென்று "என்ன பாவா?"

"என்னது, எல்லாக் காசையும் தீத்துட்டியாமே? எத்தினிக்கு வியாவாரம் ஆச்சு?"

"முப்பத்தாறு."

"முப்பத்தாறுக்குக் கணக்கு சொல்லு."

பக்கத்தில் இருந்த கோவிந்தராசு "மாமா, எம் பொஞ்சாதிகிட்ட கணக்கு கேக்க நீ யாரு?"

வேல்முத்து அவனைப் பார்த்து சிரித்து, "ஓ! அந்த ரூட்டில வரியா? பொறு மாப்பிள்ளை, பொண்ணுக்கு இன்னும் பதினஞ்சுகூட முடியலை."

"இல்லைப்பா. வளர்த்தியைப் பார்த்தியா. நிச்சயம் பதினெட்டு வயது இருக்கும்."

"என்னா பெட்டு?"

"பாவா! பாமாயில் பத்தாது. இன்னும் வாங்கிட்டு வரணும். காசு தர்றிங்களா?"

"மாப்பிள்ளை, ஒரு அம்பது ரூபா கொடு."

கோவிந்தராசு தன் பையிலிருந்து கத்தையாக நோட்டு எடுத்து, இரண்டு ஐம்பது ரூபாய் நோட்டுகளை வேணியிடம் நீட்டி "வாங்கிக்க" என்றான்.

வேணி பாவாவைப் பார்த்துக்கொண்டிருந்தாள். கோவிந்தராசுவை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

"வேல்முத்து! எம் பொஞ்சாதியை ரொம்ப வேலை வாங்கறே... நீ."

வேல்முத்து அவன் கொடுத்த நோட்டுகளை வாங்கி, வேணியிடம் ஒரு நோட்டைக் காட்டி "இந்தா" என்றான்.

வேணி அதை வாங்காமல் அந்த இடத்தை விட்டுப் புறப்பட –

"வேணி" என்று இடிக் குரலுடன் வேல்முத்து மேடையிலிருந்து கீழே இறங்கினான்.

"என்னவாம்" என்று திரும்பினவளை, பின்னலைப் பிடித்துக் கொண்டான்.

"அய்யோ, வேண்டாம் வேல்முத்து. அது குழந்தை வுட்டுரு."

"இன்னாடி, உனக்கு இத்தனை அலட்சியமா?"

வேல்முத்து பெல்ட்டைக் கழற்றினான்.



# 8

பெல்ட்டை உருவிக்கொண்டு தன்னை நோக்கி வந்த வேல்முத்துவை வேணி விரோதமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"மன்னிப்பு கேட்டுக்க. இல்லாட்டி வீசிப்பிடுவேன்."

கோவிந்தராசு சமாதானமாக "அட போ வேலு! இதெல்லாம் சின்ன விசயம். எல்லாம் நாளைக்கு கல்யாணம் ஆனபிறகு நிமித்திரலாம்."

"இல்லை ராசு! சொன்ன பேச்சை கேக்காட்டி என்ன புள்ளை அது? இந்த வயசில இத்தனை அலட்சியமா இதுக்கு?" வேணியை நோக்கி அந்த பெல்ட்டை ஒரு வீசு வீசினான். அவள் சுலபமாக நகர்ந்து கொண்டாள். சற்றே சிரிப்பு வந்தது. ஏனெனில் வேல்முத்து வீசின வீசில் தள்ளாடினான்.

"சிரிப்பியா நீ" என்று பரிமளா அவளைப் பிடித்துக் கொடுக்க, வேல்முத்து அவள் இடுப்பில் பட்டை வாரை வீச, வேணி வலித்தாலும் அப்பனை விரோதமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கோவிந்தராசு கிட்டத்தில் வந்து சமாதானம் பண்ணத் தயங்கினான்.

வேல்முத்து அத்தனை முரடன். இப்போது அவர்கள் அத்தனைபேரும் வேடிக்கை பாாக்க அவளை வீழ்த்தி மேலும் அடிக்கத் துவங்கினபோது அவன் கையை அந்தப் பையன் வந்து பிடித்தான்.

செல்லமாக "அடிக்காதீங்க. எதுக்கு வயசுக்கு வந்த பொண்ணை அடிக்கணும்?"

"வேல்முத்து! இது யாரு தெரியுமில்லை? உம் பொண்ணோட லவ்வர்ஸ்" என்றாள் பரிமளா.

"என்னாது!" என்றான் கோவிந்தராசு. "என்னாது" என்றான் வேல்முத்து.

அதே சமயத்தில் "அஆங் இந்த ஆளையும் ஒம் பொண்ணையும் கடையில வெச்சுப் பார்த்தேன். அன்னியோன்னியமா பேசிக்கிட்டு இருந்தாங்க" என்றாள் பரிமளா.

வேணி அவனைப் பார்த்தாள்! அவன்தான் ஆனந்த். "சும்மா அடிக்காதீங்க" என்றான் மீண்டும்.

"யார்றா நீ அதைக் கேக்க? இது எம்பொண்ணு தெரியுமில்லை?"

"அப்படியா? அப்படி இருந்தாலும் அடிக்கக் கூடாது நீங்க."

"எழுந்திரும்மா"

"இதாங்க உங்க பொண்ணோட காதலன்!"

"அதெல்லாம் இல்லைங்க. என்ன என்னவோ பேசுது இந்தம்மா. உங்க கடைப் பக்கம் டீ வாங்க வருவேன். அவ்வளவுதான்."

"உம்மவ புடிச்ச புளியாங்கொம்பு இதான்! கோவிந்தராசு, பாத்துக்கிட்டே இருக்கியே, உனக்கு வாய்க்கப் போற பொண்டாட்டிக்கு கல்யாணத்துக்கு முந்தியே காதல்ப்பா! இன்னா தைரியம் பாத்தியா?"

இதற்குள் வேல்முத்துவும் கோவிந்தராசுவும் முனியப்பாவும் அந்தப் பையனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

வேணி விளிம்பில் பதற்றத்துடன் பார்த்துக் கொண்டிருக்க, "ஏம்பா நம்ம பேட்டையில வந்து கைவெப்பியா நீ?"

"என்னங்க அசிங்கம் அசிங்கமா பேசிக்கிட்டு" என்றான் ஆனந்த்.

கோவிந்தராசு அவன் தாடையைப் பற்றியபோது "யோவ் விடுய்யா. உதை வாங்குவ" என்றான் ஆனந்த்.

"பார்த்துரலாமா?"

"பார்த்துரலாமா?"

என்று முனியப்பா வேட்டியைத் தூக்கிக் கட்டிக்கொண்டு கையைக் காலைச் சுழற்ற, ஆனந்த் அவன் மூக்கில் பலமாகக் குத்த, அப்படியே பின்னால் சாய்ந்தான்.

கோவிந்தராசு "அப்படியா சேதி! நயினா கடப்பாரை கொண்டு வா!" என்றான்.

"வேண்டாம். விட்டுரு கோவிந்து!"

"கொண்டுவான்னா கொண்டுவா. இந்த விசயத்தை இங்கேயே பைசல் பண்ணிரணும். கொண்டு வா. டேய்! நீ ஆம்பிளையா இருந்தா போகாதே. இந்த இடத்தை விட்டுப் போகாதே! எங்க தோஸ்த் மேலே கைவெச்ச. எங்க பேட்டை பொண்ணுங்கமேல கைவெச்ச. இதுக்கு நீ தண்டனை வாங்கியே ஆகணும். எங்கடா கடப்பாரை?"

ஆனந்த் தன் சட்டை முழுக்கையை மடக்கிக்கொண்டு, "என்ன வேணாலும் எடுத்துட்டு வாங்க. கடப்பாரைதானே! நான் கொண்டாரவா?"

"போடா வேலு உள்ளே போயி கடப்பாரை கொண்டா! அருவா கொண்டா! பயலை வெட்டிப் பொதைச்சுரலாம்!"



"யோவ்! வேற ஆளைப் பார்த்துக்க. அதெல்லாம் நம்மகிட்ட பலிக்காது."

"என்னடா சொன்னே" என்று கோவிந்தராசு அவன் அருகில் சென்று காலரை முறுக்க, "யோவ் சட்டைய வுடுய்யா" என்றான் ஆனந்த்.

சட்டையைப் பிடித்தாலும், கோவிந்தராசு சற்று அரண்டுபோய் இருந்தான். அவனுக்குப் பலவிதமான பயங்கள். தன்னிடம் அப்போது கைவசம் ரொக்கமாக பைக்குள் இருக்கும் பத்தாயிர ரூபாயால் பயம். இருந்தாலும் மெப்புக்கு பயமில்லை போல அதட்டிப் பார்த்தான்.

இந்த மனோதத்துவத்தை முழுவதும் புரிந்துகொண்ட ஆனந்த் புன்னகைத்தான்.

"வாய்யா வா. யாரு பீஸ்...பீஸா ஆவுறாங்க பார்க்கலாம். எங்கண்ணன் ஒருத்தன் வரப்போறான். அவன் வரும்வரை இருக்கலாம். இல்லை ஒண்டிக்கு ஒண்டின்னாலும் சரிதான்."

இதற்குள் வேல்முத்து, "ராசு! போனாப் போறான் வுட்டுரு" என்றான். இருவரையும் கலைத்தான். "யோவ்! புது ஆளு நீ. உம்பாட்டுக்குப் போப்பா. நாங்க பாத்துக்குவம்."

"இல்லைங்க. அடிக்கிறதா இருந்தா அடிங்க. பரவாயில்லை. ஒண்டிக்கு ஒண்டி சண்டை இருந்தாலும் பரவாயில்லை."

"அடப்போய்யா. சண்டை வேண்டாம்னா..."

"கேட்டுக்கங்க. யாராவது இந்தப் பொண்ணைத் தொட்டிங்க கிளிச்சிருவேன். நிசமாவே கிளிச்சிருவேன். வேணி எங்கூடவா."

வேணி அப்பனைப் பார்த்தாள்.

"இன்னாடி போயிருவியா?" என்றாள் வேல்முத்து.

"இல்லை பாவா."

வேணி தலையாட்டினாள்.

"அப்ப வரமாட்ட?"

"இல்லை" என்று தலையாட்டினாள்.

அவன் அலட்டிக் கொள்ளாமல் "ஒரு காரியம் பண்ணு. யாராவது உம்மேல கைவெச்சாங்க, அடிச்சாங்கன்னா என்னாண்டை தகவல் சொல்றியா? பீஸ் பீசா களட்டிருவேன். அது உங்கப்பனா இருந்தாலும் சரி! மைதானத்தண்டை தினம் கோல்ப் ஆட நம்ம அய்யா வருவாரு. நான் கூட வருவேன்!"

பரிமளா "அடி ஆத்தி" என்று வியந்தாள்.

"வேல்முத்து! உம்பொண்ணு சரியில்லைப்பா. இப்பவே புருசங்க சகவாசம் வெச்சிருக்குது! இதைக் கல்யாணம் கட்டிக்கிட்டு இந்த ஆளுக்கு பதில் சொல்லிட்டிருக்க முடியாது என்னால" என்றான்

கோவிந்தராசு.

"அட பரவாயில்லை ராசு! நீ அதை நம்பறியா? எம் பொண்ணு அப்படியெல்லாம் போமாட்டா. மத்தவங்கதான் அதை நாடுவாங்களே தவிர, எம் பொண்ணு தப்பு தண்டாவுக்கே போவாது ராசு!"

"அப்ப சட்டு புட்டுன்னு கல்யாணத்தை ஏற்பாடு பண்ணு."

"பண்ணிருவேன் ராசு, வயசு கம்மியா இருக்குதேன்னு பார்க்கறேன்."

"அதை யாருய்யா கேக்கப் போறா? பேசாம நகரம் போய் பண்ணிரலாம். நம்ம கிராமம் இருக்கு, அங்க வெச்சுக்கலாம்."

"செலவும் அதிகமாகுமேன்னு பார்க்கறேன்."

"செலவு பூரா என்னுதுதானே."

வேணியை குட்டி வியப்பாகப் பார்த்துக் கொண்டிருக்க, "பரிமளா! இந்தப் பொண்ணை அழைச்சுட்டுப் போ" என்றான்.

"அப்ப எப்ப வெச்சுக்கலாம் வேல்முத்து?"

"இப்போதைக்கு இல்லை ராசு" என்று அவனைத் தனியாக அழைத்தான் வேல்முத்து.

வேணிக்கு தற்காலிகமாக ஆறுதலாக இருந்தது.

வேல்முத்து கோவிந்தராசுவை தனியே அழைத்துக் கொண்டு, "இப்ப கல்யாணம்னா அந்தப் பொண்ணு டிமிக்கி கொடுத்துட்டு ஓடிப்போயிரும். அதனால சாக்கிரதையாக இருக்கணும். நீ என்ன பண்றே, முதல்ல நகரத்துக்கு அழைச்சுட்டுப்போக ஏற்பாடு செய்துரு"

"எப்படி பலாத்காரமாவா?"

"பரிமளாவை கேக்கறேன். ஏதாவது சொல்லி ஏற்பாடு செய்துரும், அதுகிட்ட."

வேணியும் குட்டியும் வீட்டினுள் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தார்கள்.

"என்னாடி பேசிக்கிறாங்க?"

"தெரியலைக்கா. எதோ திட்டம் போடுறாங்க."

"குட்டி! அந்தாளு எங்க இருக்காருன்னு தெரியுமா, உனக்கு?"

"யாரு?"

"அதான், ஆனந்த்."

"தெரியாதேக்கா."

"அந்தாளை எப்படியாவது கண்டுபிடிக்கணும். அடுத்த முறை மைதானத்தாண்ட வருமோ இல்லியோ?"

"ஏங்க்கா?"

"என்னவோ செய்யப் போறாங்கன்னு பயமா இருக்குது" என்று அவளை கவலையாகப் பார்த்தாள்.



அதற்குள் பரிமளாவும் வேல்முத்துவும் உள்ளே வந்துவிட, சட்டென்று மவுனமானாள்.

பரிமளா பரிவோடு "நீ வா கண்ணு! எங்கிட்ட வந்துரு. என்னய்யா வயசுப் பொண்ணு அடிக்கவே கூடாதுய்யா. அது மனசு என்னா நோகும்? இப்ப எதுக்கு கல்யாண அவசரமெல்லாம்? நீ வாம்மா கண்ணு, சோறாக்கினியா? இல்லை நானும் உதவி செய்யவா?"

"வேண்டாம்" என்று வேணி உள்ளே போனாள்.

பரிமளா வேல்முத்துவை நோக்கிக் கண்ணடிப்பதை கண்ணாடி வழியாகக் கவனித்தாள். "குட்டி, என் செல்லமே அம்மாகிட்ட வாம்மா."

"நீ ஒண்ணும் எங்கம்மா இல்லை."

"ஏய்" என்று வேல்முத்து நாக்கைக் கடித்துக் கொண்டு அவளைக் கையோங்க, "போய்யா, எப்ப பார்த்தாலும் குழந்தைகளை அடிக்கிறதே வேலைய்யா உனக்கு. என்னா மனுசன்யா நீ. புள்ளைங்க ரெண்டும் பூ கணக்கா! வேணி, மீனு வாங்கியாந்தேனே, அதை வறுத்து வெக்கிறியா?"

"அய் மீன் வறுவல்! குட்டி சமையல் அறைப்பக்கம் போ" என்றான்.

அவள், "நான் படிக்கணும் பாவா" என்றாள்.

"அப்ப வெளியே போய்ப் படி" என்றான்.

"இருய்யா, குழந்தைங்க தூங்கட்டும்" என்று அவன் கையைத் தன் மேனியிலிருந்து விலக்கினாள் பரிமளா.

"இதுங்க லேசில தூங்காது."

"ஏன்யா அந்த ஆனந்துங்கறவன்கிட்ட ரொம்ப வீராப்பாபோனிங்களே, மத்தபடி ஏன் பொட்டிப் பாம்பாயிட்டிங்க? யாரும் அடிக்க உதைக்க காணமே..."

"அப்படித்தான் நெனச்சுக்கிட்டு இருக்க. அப்புறம் என்ன ஆவுது பாரு! கோவிந்தராசுவைப் பகைச்சுக்கிட்டு யாரும் ரொம்ப காலம் உயிர் வாழ முடியாது. இன்னைய தேதிக்கு எப்பவும் பைல பத்தாயிரம் வெச்சிருப்பான். அடி தடி ஆளுங்ககிட்ட சொன்னா நாலு தட்டு! அவனெல்லாம் எந்த மூலை? ஆமாம் யாரு அது."

"பணக்காரப் புள்ளை போலத் தோணுது. காரெல்லாம் வெச்சிருக்கான். சின்னதா நாய்க்குட்டி மாதிரி சிவப்பா. அது என்னா காருடி குட்டி?"

"மாருதி"

"மாதுரி."

"மாதுரி இல்லை, மாருதி!"

"அதான சொன்னேன். கோவிந்தராசுக்கு நான் சொல்றேன்.

கோவிந்தராசுகிட்ட எதாவது வாக்கு கொடுத்துட்டியா? என்னா வாக்கு?"

"வேணியைக் கல்யாணம் கட்டிக் கொடுக்கறதா. கொடுத்தே ஆகணும் கோவிந்தராசுக்கு! இல்லை கடிச்சுத் தின்னுருவான்" என்றான் வேல்முத்து.



# 9

பரிமளா வேல்முத்துவிடம் சொன்னாள். "நீ பாட்டுக்குக் கல்யாணம் செய்து அனுப்பிச்சுட்டின்னா, கடையை யாரு பார்த்துப்பாங்க?"

"ஏன் பரி, நீ பாத்துக்க மாட்டியா? உன்னைப் பாக்கிறதுக்கே கடையில கூட்டம் வந்து சேருமே."

"எனக்கு வடையெல்லாம் சுடத் தெரியாதே. என்னா அரைக்குது கரைக்குது எம்பொண்ணு. அது வேலை நம் கைல ஆவுமதில்லைப்பா. என்னால சும்மா நிக்க முடியும், அதுவும் அரை மணிக்கு மேல நின்னா வாயு பொறப்பட்டுரும். ஏப்பமா வந்துகிட்டு இருக்கும்."

"ராசுகிட்ட ஏகப்பட்ட கடன் வாங்கிட்டனில்லை? அதைத் திருப்பிக் கொடுக்க வேணாமுன்னுட்டான். கல்யாணம் கட்டிக் கொடுத்தா போதும்னான்."

"சரியான ஆம்பிளையா நீ! கடனுக்குப் பொண்ண வித்தியே."

"வேற என்ன செய்யறதாம்?"

"அப்படி என்ன கடன்? சீட்டா, குடியா, ரேசா?"

"அதது கொஞ்சம் கொஞ்சம் உண்டு. வாள்க்கைய என்ஜாய் பண்ண வேணாமா கண்ணு. இப்ப நாம ரெண்டு பேரும் முதுமலைக் குப் போறமில்லை?"

"என்னாவாம்?"

"தேனிலவு."

"கடை?"

"வேணி பாத்துக்கும்."

"இதைத்தான் கல்யாணம் கட்டிக் கொடுக்கப் போறேங்கிறியே?"

"இப்பவே இல்லையே."

"எப்பவும் என்னை எதிர்பார்க்காதே. என்னால கடையெல்லாம் பாத்துக்க முடியாது. ஆமா, இந்த சின்னதுக்கு இன்னா படிப்பு? படிச்சு இன்னா கிழிக்கப்போவுது?"

"ஏதோ, அது அம்மா போறப்ப வேணிகிட்ட கேட்டுக்கிச்சாம்.

அதனால புடிவாதமா..."

"நிறுத்துய்யா. அதுவும் வளந்துருச்சில்ல, கடையில போட்டுரு! கொஞ்சம் கொஞ்சமா சின்னதுகிட்ட வேலையை விட்டுரலாம். அப்பறம், பெரிசை கல்யாணம் கட்டிக் கொடுத்துரு. கோவிந்தராசு கிட்ட இன்னம் கடன் வாங்கு. உன்னால முடியாங்காட்டி, நான் வாங்கித் தரேன். அவங்கிட்ட நைச்சியமா பேசணும். அவ்வளவுதான்."

"உம் பேச்சில மயங்காத ஆளுங்க உண்டா, கண்ணு?"

வேல்முத்து அவளைக் கட்டி முத்தம் கொடுக்க முயல, "போய் சும்மாரு. அதுங்க இன்னும் தூங்கலைன்னு நெனக்கிறேன்."

"அதுங்களுக்கு எல்லாம் தெரியும் வா. செகண்டு ஷோ போகலாமா?"

அடுத்த அறையில் வேணியும் குட்டியும் கண்கொட்டாமல் படுக்கையில் விழித்திருந்து எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

வேணிக்கு வயிற்றுக்குள் என்னவோ சங்கடம் பண்ணியது.

குட்டிக்கு பல விஷயங்கள் விளங்கவில்லை. ஸ்கூலை நிறுத்தப் போகிறார்கள் என்பது அதற்கு ஒருவாறு சந்தோஷமாகவே இருந்தது. பாடப்புத்தகங்கள் மிகவும் பயங்காட்டின. மற்ற மாணவிகளின் செல்வ நிலைமை அவளுக்கு அவமானம் அளிக்க, எதற்கெடுத்தாலும் அவளை கேலி பண்ணும் மற்ற மாணவிகளும் டீச்சர்களும் அவளுக்கு மொத்தமாக பள்ளிக்கூடத்தின்மேல் வெறுப்பைக் கொடுத்திருந்தார்கள்.

"அக்கா! சினிமாவுக்குப் போறாங்களாம். நாமும் போகலாமா?"

"சும்மாருடி."

அவர்கள் இருவரும் வாசல் கதவை வெளியே பூட்டிக்கொண்டு போவது கேட்டதும் வேணி எழுந்து உட்கார்ந்துகொண்டாள்.

"என்னக்கா தூக்கம் வரலியா?"

வேணி சும்மா இருந்தாள்.

"இல்லை குட்டி. நீ யாரு என்ன சொன்னாலும் பள்ளிக்கூடம் போகணும். தெரியுமில்ல? நீ மட்டும் போவலை, நம்ம அம்மா ஆவியா வந்து அடிச்சுப்போட்டுருவாங்க, எங்களையெல்லாம். இது ஏதுடி மாலை?"

"பரிமளாக்கா கொடுத்திச்சு."

வேணி அவள் கன்னத்தில் அடித்து, "பரிமளா அக்கா! அவ அக்காவாடி உனக்கு? அவகிட்ட போயி மாலை வாங்கிப் போட்டுகிட்டியே வெக்கமில்லை?"

குட்டி கன்னத்தைத் தடவிக்கொண்டு "சும்மா சும்மா இப்படி அடிச்சா நான் உங்கூட எப்படி பிரியமா இருப்பேன்க்கா? இப்ப மாலை வாங்கினா என்னவாம்? வேண்டாம்னா களட்டி கொடுத்துர்றேன்."



"அவ யாரு தெரியுமா? பரிமளா யாரு தெரியுமா? தேவடியாடி! மூணு ஆம்பிளைங்களை வெச்சிகிட்டு இருந்தவ. இப்பகூட ராத்திரி ஒருத்தன் வந்து சத்தம் போட்டுட்டு போவான். பழைய புருசன். தெரியுமில்லை?"

"நம்மகிட்ட நல்லாத்தானே பழகுறாங்க?"

"அடியாத்தி! இப்பவே அவபக்கம் சேர்ந்துக்கிட்டியா? காசு கொடுத்தாளா?"

"ஆமா."

"எத்தினி?"

"அஞ்சு ரூபா."

"அப்புறம் என்ன சொன்னா?"

"இஸ்கூலுக்குப் போக வேண்டாம்னு சொன்னாங்க."

"அது உனக்கு சந்தோஷம்தானே."

"நான் அக்காவைக் கேட்டு சொல்றேன்னு சொன்னேன். அக்காவைக் கேக்காம எதும் செய்யமாட்டேன்னு சொல்லிட்டேன். நீதான் எனக்கு எல்லாம்."

"முட்டாள் பொண்ணே, கேள். உன் படிப்பை நிறுத்தி உன்னை அடிமை மாதிரி நடத்தப் போறாங்க ரெண்டு பேரும். என்னைக் கல்யாணம் கட்டிக்கொடுத்துட்டு துரத்திவிடப் போறாங்க. அதான் பிளான் வெச்சிருக்காங்க. நீ அந்த வலையில போய் விழுந்தியே."

"நான் ஒண்ணும் அவங்க பேச்சைக் கேக்கவே இல்லைக்கா. அவங்கதான் எம்பேர்ல வந்து விழறாங்க"

"குட்டி! படிப்புங்கிறது முக்கியம்டி. எனக்குத்தான் கடவுள் படிப்பில்லாம பண்ணிட்டாரு. தினம் மசால் வடைக்கும் இட்லிக்கும் அரைச்சே செத்து சுண்ணாம்பாயிட்டு இருக்கேன். நீயாவது வேற மாதிரி இருக்கணும்னு ஆசைடி. நீ நல்லா படிச்சு வந்து, ஒரு டாக்டராவோ போலீஸ்காரியாகவோ இல்லை கலெக்டராவோ ஆகணும். அப்படித்தான் கனாக் கண்டுக்கிட்டு இருக்கேன். அம்மா நகைங்களையெல்லாம் அதுக்குத்தான் ஒளிச்சு வெச்சிருக்கேன். தெரியுமில்லை! இதெல்லாம் புரியுமா குட்டி உனக்கு?"

"புரியாதுக்கா."

"சனியன் புடிச்சவளே, பள்ளிக்கு ஒழுங்கா போய்த் தொலைப்பியா?"

"சரிக்கா" என்றாள் குட்டி.

குட்டி தூங்கினதும் ரொம்ப நேரம் வேணி விழித்திருந்தாள். ராத்திரிக் காட்சி பார்த்துவிட்டு வேல்முத்துவும் பரிமளாவும் உள்ளே நுழையும் சத்தமும் அவர்கள் படுத்துக்கொண்டபின் கேட்ட சத்தங்களும் அவள் கன்னத்தில் கண்ணீராக வழிந்தது.

ஆனந்த் என்கிறவனை அதற்கப்புறம் வேணி பார்க்கவே இல்லை. யார் யாரோ வந்துபோனார்கள். கோவிந்தராசு காண்டிராக்ட் விஷயமாக மைசூர் போயிருந்ததால், வேல்முத்து சில மாதங்கள் ஒழுங்காக கடையைக் கவனித்து வந்தான். பரிமளாவுடன் கூட அதிகம் ஒட்டிக்கொள்ளாமல் இருந்தாலும் பரிமளாவை சகித்துக் கொள்கிற அளவுக்குப் பழகிவிட்டாள் வேணி. பரிமளா கர்ப்பமாக இருக்கிறாள் என்பதும் தெரிந்தது. குட்டியை பரிமளா அடிக்கடி ரஜினி படத்திற்கு அழைத்துச் செல்வதையும் பார்த்து பேசாமல் இருந்தாள், வேணி.

குட்டிக்கு பாவாடை குட்டையாக இருப்பதைக் கவனித்து அதற்கு ஒரு பட்டுப் பாவாடை வாங்கிக் கொடுத்தாள், பரிமளா. அதைப்பற்றி வேணி எந்தவித உணர்ச்சியும் காட்டவில்லை.

எப்போதாவது கோல்ப் மைதானத்தை அவள் கண்கள் தேடும். எங்கேயாவது அந்த ஆனந்த் தென்படுகிறானா என்று. மாருதி காரைப் பார்க்கும்போதெல்லாம் மனசு ஒரு மாதிரி தவிக்கும். கொஞ்ச நாட்களில் அந்த எதிர்பார்ப்பும் விட்டுப்போய் பழையபடி மிஷின் போல உழைக்க ஆரம்பித்தாள்.

பரிமளாவுக்கு ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு தமிழழகன் என்று பெயர் சூட்டினார்கள். கன்னத்தில பெரிசாக திருஷ்டிப் பொட்டு இட்டு தொட்டிலில் போட்டார்கள். புதுசாக பவுடர் டப்பாவெல்லாம் வாங்கிக்கொண்டு வந்து பலபேர் கொடுத்தார்கள்.

கோவிந்தராசு அந்தக் குழந்தைக்கு ஐநூறுரூபாய் கவரில் வைத்துக் கொடுத்து "நம்ம குழந்தை எப்ப?" என்று வேணியைக் கேட்டான்.

வேணிக்கு அன்றைக்கு என்னவோ அவனுடன் பேசலாம் என்று தோன்றியது.

கோவிந்தராசு வேணியை சிவானந்தா ஸ்டோர்ஸ் எதிரில் பெரிய ஓட்டலுக்கு அழைத்துச் சென்றான். எல்லாம் வாங்கிக் கொடுத்தான். "நீ மட்டும் உம்முன்னு சொல்லு. உன்னைத் தங்கத்திலேயே இழைக் கிறேன். வேணி, எனக்கு காண்டிராக்டில சம்பாதிச்சது எத்தனை இருக்கு தெரியுமா? எத்தனையோ இருக்கு. கோரமங்கலாவில ஒரு சைட்டு வெச்சிருக்கேன். இன்னைக்கு அது ரெண்டரை லட்சம் பெறும், இப்ப சொல்லு உம்பேர்ல எழுதி வெச்சுருவேன்."

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டீன்னா, கடையை யார் பார்த்துக்குவாங்களாம்?"

"கடையை வித்துட்டு வந்துரவேண்டியதுதான்."

"அப்பாவைக் கேட்டீங்களா?"

"உங்கப்பன்தான் எல்லாத்தையும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கியிருக் கானே! எதுக்காகத்தானோ அந்த பொம்பளையை கல்யாணம் பண்ணிக்கிட்டு! அந்தக் குழந்தை உங்கப்பனதுங்கிறியா?"



வேணி சும்மா இருந்தாள்.

"ப்ரூட் சாலட் வேணுமா?"

"வேண்டாம்."

"சும்மா சாப்டு. உன் ஒருத்தியோட கண்ணு இருக்குது பாரு, அதுக்குத்தான்... அதுக்குத்தான் உங்கப்பனுக்கு கடன் கொடுத்துக் கிட்டே இருக்கேன். இன்னமும் கடன் தீரலை."

"எத்தனை கொடுத்திருக்கீங்க?"

"சொல்ல மாட்டேன். சொல்லக்கூடாதுன்னு முத்துதான் சொல்லியிருக்கான்."

"எங்கிட்ட சொல்லக்கூடாதா?"

"கணக்கு வெச்சக்கலை. அது இருக்கும் ஒரு இருபத்தைஞ்சாயிரமாவது."

"எதிலயாவது கையெழுத்துப் போட்டிருக்காரா?"

"பெரோநோட், கடன் பத்திரம், உங்க அரண்மனை எல்லாத்தையும் எம்பேர்ல வெச்சிருக்கான்."

"என்ன சொல்லியிருக்காரு?"

"நீ எனக்குத்தான்னு."

வேணி அவனை முதல் தடவையாக நிமிர்ந்து பார்த்தாள். நல்ல கறுப்பு எண்ணெய் வழியும் முகம். பை நிறைய அழுக்கு நோட்டு. மூக்கு நுனியில் சிமெண்ட். நல்ல பனீர் என்று ஒளிரும் பற்கள். நெற்றியில் சின்னப் பிள்ளையில் குத்தின பச்சைப்பொட்டு. கழுத்தில் சொலிக்கும் தங்கச் சங்கிலி.

"இப்ப சொல்லு வேணி! எம்மேல இஷ்டம்னு."

"சொன்னா ஒண்ணு தருவீங்களா?"

"எது வேணாலும் கேளு."

"எதும் வேண்டாம். குட்டிக்குப் படிப்பு கொடுத்தா போதும்."

# 10

கோவிந்தராசு வேணியைக் கண்கொட்டாமல் பார்த்தான்.

“எங்கயோ பொறந்திருக்க வேண்டியவ நீ... உங்கப்பனுக்குத் தோதா இருந்து, தங்கச்சியைப் படிக்க வெச்சு, இட்லி சுட்டு வடைக்கு அரைச்சு... நீ மட்டும் எங்கூட வந்தா உனக்கு அந்த மாதிரி வேலையெல்லாம் கெடையவே கெடையாது. உன்னை ராணி மாதிரி வெச்சுப்பேன். எல்லாத்துக்கும் ஆள் போட்டுருவேன். சும்மா கார்வார் பண்ணிக்கிட்டு இருந்தாபோதும், வாரம் ரெண்டு சினிமா பாத்துக்க. அப்பப்ப ஏர்கண்டிசன் பஸ்ல போலாம்... எங்க போலாம்...”

“கோவா” என்றாள்.

“சரி கோவா! கோவாவில என்ன வெச்சிருக்க?”

“எனக்குத் தெரிஞ்சவங்க இருக்காங்க.”

“எங்க வேணாலும் போலாம். நஞ்சன் கோடில எங்க மாமன் வூடு இருக்குது. பாத்தா அசந்துருவே வேணி” என்று அவள் கையைப் பற்றினான். அதை அவள் வாபஸ் வாங்கிக்கொண்டாள்.

“எப்ப கல்யாணம்?”

“முதல்ல வாக்குக் கொடு.”

“என்னவாம்?”

“குட்டி படிப்புக்கு எதனாச்சியும் ஸ்திரமா ஏற்பாடு பண்றேன்னு. மாதா மாதம் லேட்டா பணம்கட்டுது. யூனிபாரமுக்குக் காசில்லை. செருப்பு பூட்சு கலர் பென்சில்னு ஒவ்வொரு முறையும் அப்பன்கிட்டேயும் பரிமளாகிட்டேயும் கெஞ்ச வேண்டியிருக்குது. வர்ற பணம் எல்லாம் குழந்தைக்குச் செலவு செய்துர்றாங்க.”

“சரி தனியா ஏற்பாடு செய்துரணும். பாங்கில ரொக்கம் கட்டி அதிலிருந்து வர்ற வட்டி இஸ்கோலுக்கு 'நேரா போற மாதிரி செய்துரணும். அவ்வளவுதானே?”

“அவ்வளவுதான்.”

“செய்தா சம்மதம்னு சொல்லுறியா?”



“எதுக்கு?”

“கல்யாணத்துக்கு.”

“அதுக்கு இப்ப என்ன அவசரம்? செய்துறேன்.”

“என்னடி என்னைப் போட்டு இப்படி சித்திரவதை பண்ற.”

“ஏன்யா, உனக்கு கெடைக்காத பொண்ணுங்களா? இத்தனை காசு வெச்சிருக்க?”

“கிடைக்கற பொண்ணுங்க எனக்கு வேண்டாம். கிடைக்கிறதில கஷ்டம் இருக்கிற உம்மாதிரி ஒருத்திதான் எனக்கு வேணும்.”

“புரியலை.”

“இதையாவது புரிஞ்சுக்க. உன்னை நம்பி நான் ரொம்ப தூரம் போயிட்டேன். மாமன்கூட வாக்குவாதம் பண்ணிக்கிட்டேன். வர்ற பொண்ணுங்களை, எங்க சாதிப் பொண்ணுங்களையெல்லாம் தள்ளித்தள்ளிப் போட்டுக்கிட்டு வந்திருக்கேன். இப்ப மட்டும் நீ மாட்டேன்னு சொல்லாத. சொன்ன, எனக்கு வர்ற கோபத்தில என்ன பண்ணுவேன்னே எனக்குத் தெரியாது. நாங்கள்ளாம் பூர்வீகத்தில ரொம்ப சண்டை போட்டவங்க. கத்தி ஈட்டின்னு வெச்சுகிட்டு சின்ன விஷயத்துக்கெல்லாம் குத்திப்போம். இது பெரிய விசயம். யாராவது குறுக்க வந்தா, தயங்கவே மாட்டேன். உனக்கு இப்ப கல்யாணம் பண்ணிக்க இஷ்டமில்லையா? கொஞ்சம் வருஷம் போலாம்னு பாக்கறியா? அது பரவால்லை, ஆனா, எங்கிட்டருந்து தப்பிச்சுக்க முடியாது.”

ஒருகணம் வேணியின் கையைப் பிடித்து, சற்றே வலிக்கும்படியாகப் பற்றிவிட்டு அவளையே ஆழ்ந்து பார்த்தபோது வேணிக்கு அச்சமாக இருந்தது.

“வேல்முத்து ரொம்ப தூரம் போயிட்டான் தெரியுமில்லை?”

வீட்டுக்குத் திரும்ப நடக்கும்போது யோசித்தாள்.

தங்கச்சிக்குப் படிப்பு வேண்டும் என்றால் வேறு வழியிருக்கிறதா, என்ன? இந்தக் கல்யாணத்துக்கு சம்மதித்துத்தான் ஆகவேண்டுமா?

மரத்தடியில் குட்டி உட்கார்ந்துகொண்டு சுவாரசியமாகப் படித்துக் கொண்டிருந்தாள். வேணிக்குப் பெருமிதமாக இருந்தது. தங்கச்சி இப்போது இங்கிலீசெல்லாம் படிக்க ஆரம்பித்துவிட்டாள். “இன்னாடி படிக்கிறே?”

“பாட பொஸ்தவம் அக்கா” என்றவள் புத்தகத்திலிருந்து நழுவி விழுந்த அட்டைப் படத்தில் ரெண்டுபேர் கட்டிக்கொண்டிருந்தார்கள்.

வேணி கொதிப்படைந்து “இதான் பாடமா, இதான் சொல்லித் தர்றாங்களா?”

குட்டி அவளை பயத்துடன் பார்த்து “சாரிக்கா! தப்பாய்டுச்சி. வீட்டுப் பாடமெல்லாம் பண்ணிட்டேன். அதுக்கப்புறம்தான்...”

பளீர் என்று கன்னத்தில் அறைந்தாள்! "உனக்கா ஓடா உழைச்சுட்டு இருக்கேன். சுகம்னா என்னன்னு பார்க்காம ராத்திரியும் பகலுமா வடைக்கும் தோசைக்கும் அரைச்சுக்கிட்டு இருக்கேன். கூட ஒரு சித்தி. அவ கொழந்தை கொல்லைக்குப் போனதையெல்லாம் வாரிக்கிட்டு இருக்கேன். உங்கப்பன் பட்ட கடனுக்கெல்லாம் என்னை வெலைபேசி வெச்சிருக்காரு. எல்லாம் எதுக்குடி? உனக்கு படிப்புக்குத் தானே?"

குட்டி தன் கன்னத்தை இன்னமும் தடவிக்கொண்டு வேணியை விரோதமாகப் பார்த்தாள். அந்தப் பார்வையில் இருந்த எதிர்ப்பை சகித்துக்கொள்ள முடியாமல் மேலும் அவள் கன்னத்தில் ஒரு வீறு வீறினாள், வேணி.

"அய்யோ அய்யோ" என்ற குட்டி "பரிமளாக்கா பரிமளாக்கா" என்று கூவினாள். என்னைப்போட்டு இன்னா அடி அடிக்கறாங்க."

உள்ளேயிருந்து வந்த பரிமளா "என்னடி செல்லம்" என்றாள்.

"என்னைப் போட்டு கொல்லுது."

"நீ வாம்மா, சித்திக்கிட்ட! அதுக்கு அப்படித்தான். சில வேளையில பைத்தியம் புடிச்சுரும்."

"அவ என்ன செஞ்சா கேளு."

"என்னாடி செஞ்சே?"

"கதை பொஸ்தவம் வாசிச்சுகிட்டு இருந்தனாம்..."

"அதுக்கா இந்த அடி? பாவி! கன்னம் செவந்து கிடக்கு."

"சும்மா மாய்மாலம் பண்ணாதீங்க. உங்களுக்கு எங்க பேர்ல எத்தனை அக்கறைன்னு தெரியும்."

"நீ வா கண்ணு" குட்டியை சேலைத் தலைப்பால் பொத்திக் கொண்டு உள்ளே அழைத்துச் செல்ல வேல்முத்து "என்னா விசயம்?" என்றான்.

"உம் மூத்தது ரொம்பத்தான் துளுத்துப் போச்சு. யாரைக் கண்டாலும் அடி உதைதான். அன்னைக்கு புள்ளையை நகத்தால கீறிருச்சு!"

"அபாண்டம்."

"வேணி!" என்று வேல்முத்து அதட்ட –

"ஊகூம்! அது உம்பேச்சைக் கேக்காது, இனிமே. ஊர் மேய ஆரம்பிச்சுருச்சு. சகவாசம் செரியில்லை. எத்தனை சீக்கிரம் கோவிந்தராசுகிட்ட கட்டிக் கொடுத்துர்றியோ அத்தனை எல்லாருக்கும் நல்லது."

"வயசு ஆயிருச்சு. உனக்குத்தான்யா பாப்பா. ரெண்டாவதும் வயசுக்கு வர்ற வேளை வந்துருச்சு. தெரியுமில்லை."

"அப்ப துரத்திர்லாம்ங்கறே" என்றான் வேல்முத்து.



"ஆமா."

"கடையை?"

"நான் பாத்துக்க மாட்டனா? குழந்தையை வெச்சுக்க ஆளு போட்டுட்டு. இதன் படிப்பை நிறுத்திட்டு, நானும் குட்டியும் பாத்துக்க மாட்டமோ?"

"சரி. ராககிட்ட கேக்கறேன்."

"அவருகிட்ட என்ன கேக்கறது? அவரு நாளைக்கே தயாரா இருக்காரு."

"மார்கழி மாசம் யாரும் கல்யாணம் பண்ண மாட்டாங்க."

"ஒரு மாதம் ரெண்டு மாதம்னா பரவால்லை."

வேணி அனைத்தையும் சுவாரசியமில்லாது கேட்டுக்கொண்டிருந்தாள். குட்டி கீழே இறைந்திருந்த புத்தகங்களை சேகரிக்க வெளியே வந்தாள். வேணியை குற்ற உணர்வுடன் பார்த்தாள்.

"சாரிக்கா" என்றாள் சன்னமாக.

"போய்ச் சேர்ந்துக்க. அது பக்கம் சேர்ந்துக்க."

"அடிக்காதக்கா."

"போடி உன் தலைவிதி. அத மாத்த முடியாது. போ. போ."

குட்டி கொஞ்ச நேரம் தயங்கிவிட்டு, உள்ளே சென்றாள்.

வேணிக்கு எல்லாம் வெறுப்பாக இருந்தது. அவளது எளிய சிந்தனைகளில் எதிர்காலம் பற்றிய உற்சாகமான எதிர்பார்ப்பு குன்றியது. இங்கே இருந்தால் தினம் வண்டி தள்ள வேண்டும். அங்கே போனால், தன்னைவிட இரண்டு மடங்கு வயதுடையவனுக்கு வாழ்க்கைப்பட்டு அவன் பிள்ளைகளைப் பெற்றாக வேண்டும்.

அவளுக்கு விரக்தியாக இருந்தது! யாருக்காக உயிர் வாழ்கிறேன் என்று குழப்பமாக இருந்தது.

வேணி ரொம்ப நேரம் அப்படியே உட்கார்ந்து இருந்தாள். அவளை சாப்பிட வா என்று யாரும் கூப்பிடவில்லை. உள்ளே போனாள். திறந்த தட்டில் கறியும் சோறும் இருந்தது. பானையைச் சரித்தாள். தண்ணீர் இல்லை. அவள் பாயை தமிழழகனுக்குப் போட்டிருந்தாள். அவள் தாவணி தமிழழகன் மூத்திரத்தில் நனைந்திருந்தது. குட்டியும் பரிமளாவும் அவசரமாக டிரஸ் மாற்றிக் கொண்டிருந்தார்கள். வேல்முத்துவும் தலை வாரிக்கொண்டிருந்தான்.

எங்கே போகிறீர்கள் என்று கேட்கவில்லை. சூப்பர் கொட்டகையில் ரஜினி படம் பார்க்கத்தான் போவார்கள். குழந்தையை நான் பார்த்துக்கொள்ள வேண்டும். இதையெல்லாம் சொல்லக்கூட மாட்டார்கள்.

"கதவைத் தாப்பா போட்டுக்க. நாங்க செகண்டுஷோ பாத்துட்டு பன்னண்டரைக்குள்ள வந்துருவம். தம்பி எழுந்திருக்க மாட்டான்.

எழுந்தா பால் பவுடர் கரைச்சுக் கொடு. கொஞ்சம் கொடு போதும்."

"தான தன்னன்னே தன்னத் தன்னனே" என்று பாடிக்கொண்டு போனார்கள்.

வேணி தனிமையாக இருந்தாள். உள் அறைக்குச் சென்றாள். பானையை எடுத்தாள். அதன் கீழ் இருந்த பானையை எடுத்து அதன் கீழே லேசாக புதைத்து வைத்திருந்த அந்தப் பொட்டலத்தை எடுத்துப் பார்த்தாள். அம்மா சாகும்போது கொடுத்து வைத்திருந்தது இரண்டு மூன்று நகை, சிவப்புக்கல் பதக்கத்துடன், தங்கம் போலத்தான் தோன்றியது. அப்புறம் அம்மாவின் சேலை.

"அம்மா... அம்மா... இப்ப என்ன பண்ணுவேன்? சொல்லேன் அம்மா..."

"அம்மா கொஞ்சம் பேசேன்! இந்த வீட்டில நான் இருக்கிறதா?"

"அப்பனை நம்பாதன்னு சொன்னனில்ல வேணி?"

"வேற என்னம்மா செய்ய முடியும்?"

"குட்டிக்குப் படிப்பு கொடுக்கச் சொன்னேன்."

"அதுக்கு இஸ்டமில்லைன்னா நான் என்னம்மா செய்ய முடியும்?" என்றாள். சேலையை கண்ணில் ஒத்திக்கொண்டாள். கண்ணீர் அம்மாவின் சேலையை நனைத்தது.

"வேணி உன்னால நான் சொன்னதையெல்லாம் செய்ய முடியவில்லை. என்ன பிரயோசனம்?"

"என்ன பண்ணச் சொல்றம்மா?"

"எங்கூட வந்துரு. வா கண்ணு, எங்கூட வந்து சேர்ந்துக்க."

"எப்படிம்மா... எப்படிம்மா...?"

"கொஞ்ச தூரம் நடந்தா ரயில் பாதை இருக்குதில்லை?"

"ஆ... ஆம்."

"ரெயிலும் இருக்குதில்லை? ஏன் தயங்கறே? சேலை எனக்கு வேணும். கொண்டாந்து கொடுத்துரு. எனக்குக் குளிருது."

வேணி அம்மாவின் சேலையைத் தன்மேல் சுற்றிக்கொண்டாள்.



# 11

வேணி தன் அம்மாவின் சேலையை உடம்பில் சுற்றிக்கொண்டு தீர்மானமாக ரெயில் பாதையை நோக்கி நடந்தாள். இந்த வேளையில் ஓர் எக்ஸ்பிரஸ் வரும். பாதையோரமாக நடந்து கடைசி நிமிடத்தில் தான் விழவேண்டும்.

மின்சார சிக்னல் விளக்கு ராத்திரி பச்சைப் பொட்டு இட்டது போலத் தெரிந்தது. தூரத்தில் மல்லேசுவரத்தின் வான வெளிச்சம்.

தூரத்தில் ரயில் சத்தம்கேட்க அவளுக்குப் பயமாக இருந்தது. இருந்தும் தீர்மானமாக நடந்தாள்.

"வேணி! வேணி! வேணிதானே அது?"

"யாரு" என்று திரும்பிப் பார்த்தாள்.

அந்த உருவம் அவளை அணுகி, "வேணி என்ன இது! நான்தான்..."

"ஆனந்த்..."

"என்ன இது வேசம்? எதுக்காக அழுவற? எதுக்காக ரெயில் பாதை பக்கத்துல இவ்வளவு குளோசா போய்க்கிட்டு இருக்க? உடம்பு சரியில்லையா வேணி?" என்று அவளை உலுக்க –

வேணி மடை திறந்ததுபோல் அவன் மார்பில் சாய்ந்து அழத் தொடங்கினாள்.

"முதல்ல ரெயில் போகட்டும். அப்புறம் அழலாம்."

அவர்களைக் கடந்து அந்த ராட்சச ரெயில் செல்ல, அவளை மார்போடு அணைத்துக்கொண்டு பாதைச் சரிவில் பதுங்கி உட்கார்ந்து கொண்டான்.

ரெயில் சென்றது.

"இப்ப சொல்லு, என்ன இதெல்லாம்?"

வேணி மவுனமாக இருந்தாள்.

"தற்கொலை செய்துக்க பாத்தியா?"

"....."

"இது என்ன சேலை!"

"எங்கம்மாது!"

"தற்கொலை செய்துக்கத்தானே பார்த்தே?" அவள் மார்பைத் தடவிக் கொடுத்தான்.

"ஆமா" என்று தலையாட்டி, அவன் மேல் அணில் குஞ்சுபோல ஒட்டிக்கொண்டாள்.

"எதுக்காம்...?"

"நான் எதுக்காக இருக்கணும்?"

"தற்கொலை என்கிறது ரொம்ப கோழைத்தனம். சொல்லு, உனக்கு என்ன வேதனை?"

"எனக்கு ஒண்ணுமே இல்லை. ராப்பகலா அப்பனுக்கும் சித்திக்கும் தங்கச்சிக்கும் உழைக்கணும். எனக்கு ஆதரவா பேச யாருமில்லை. கோவிந்தராகிட்ட அப்பா கடன் வாங்கியிருக்காரு. அதுக்கு என்னை வெலை பேசியிருக்காங்க. கோவிந்தராகவைக் கல்யாணம் செய்துக்கத் தான் வேணுமாம். அந்தாள் என்னை ராமநகரத்துக்குப் பக்கத்திலேயோ மாண்டியா பக்கத்திலயோ எங்கயோ கூட்டிப் போகப் போறாரு. அவரு என்னைவிட ரெண்டு பங்கு வயசானவரு. சொல்லுங்க நான் எதுக்கு இருக்கணும்?"

"எனக்காக இருக்கலாமில்லை?"

"உங்களைத்தான் ரொம்ப நாளாக் காணுமே? பார்க்கவே இல்லை. மறந்து போயிட்டிங்க."

"மறப்பனா?" என்று அவளை அதிகமாகத் தடவிக் கொடுத்தான்.

இதமாக இருந்தது. அவன் கை சில தகாத இடங்களில் தங்குவதை அவள் ஆட்சேபிக்கவில்லை. உள்ளம் துள்ளலாக இருந்தது. மனசுக்குள் ஈரம் சுரந்தது.

"வேணி நான் கோவா போயிருந்தனில்லை?"

"ஒரு வருசமாவா?"

"ஆமா அங்கதான் முதலாளியோட ரெண்டாவது பாக்டரி இருக்குது. இப்பத்தான் மாற்றலாகி வந்தேன். வேணி! உனக்கு கடுதாசி போட்டேன் வந்துச்சா?"

"இல்லையே..."

"சரியா விலாசம் போட்டிருந்தேனே. வேல்முத்து நடமாடும் டீக்கடைன்னு போட்டிருந்தேன். கோல்ப் மைதானம் அருகில் அப்படின்னெல்லாம்..."

"வந்திருக்கும். கிழிச்சுப் போட்டிருப்பாங்க."

"வேணி உனக்குக் கல்யாணம் பேசறாங்களா?"

"ஆமா..."

"எப்ப...?"



"சீக்கிரமே."

"வேணி! நான் இதை அனுமதிக்கமாட்டேன். உன்னை நான்தான் கல்யாணம் செய்துக்கப் போறேன். எங்கூட வந்துரு..."

"எப்ப...?"

"இப்பவே..."

"தங்கச்சியை விட்டுட்டா."

"யாருமே நன்றி விசுவாசம் அன்பில்லாமல் இருக்காங்க என்கிறே."

"ஒருமுறை குட்டியைப் பார்க்கணுமில்லை. பணம் வெச்சிருக்கேன். எங்கம்மா நகைங்கள்ளாம் இருக்குது."

"ஒண்ணும் வேண்டா. வந்துரு. நான் உன்னைக் காப்பாத்தறேன்."

வேணி யோசித்தாள்.

"இத்தனை சீக்கிரமா முடிவு பண்ணணுமா?"

"வந்துரு வேணி..."

"எங்க வர்றதாம்..."

"எங்கூட வந்துரு..."

"உன் வீட்டுக்கா..."

"வீடு இன்னமும் ஏற்பாடு செய்யலை. அவுட் அவுசில இருக்கேன், வர்றதா இருந்தா உடனே வந்துரு என் ரூமுக்கு."

"கல்யாணம் ஆறதுக்கு முன்னாடி அங்க ஏதும் வம்பு பண்ண மாட்டியே?"

"இல்லை, வா..." என்று சிரித்தான்.

"ஒரு பேச்சு குட்டிகிட்ட மட்டும்..."

"அப்புறம் நாளைக்கு காலையில நான் குட்டியைக் கூட்டிவாரேன். உன்னை இந்த நிலையில தனியா விட்டு வெக்க எனக்கு இஷ்டமில்லை."

வேணியை அவன் எடுத்து அணைத்துக்கொண்டு, ஏறக்குறைய தாங்கிக்கொண்டு செலுத்திக்கொண்டு வந்தான். ஓர் ஆட்டோவைத் தடுத்து நிறுத்தி, "நேரா சதாசிவ நகர் போங்க" என்றான்.

அவன் அழைத்துச் சென்ற இடம் பணக்காரர்கள் வாழும் பிரதேசம். தனித் தனியாக வீடுகள். வீட்டுக்கு வீடு கார்கள். நாய்கள். தோட்டத்தில் ஊஞ்சல்கள்.

"உங்ககூட யார் இருக்காங்க?"

"யாருமில்லை. நான்தான் இருக்கேன். முதலாளி வீட்டுக்காரங்கள்ளாம் பெரிய வீட்டில் இருக்காங்க. நான் இருக்கறது அவுட் அவுஸ்."

"தனியாவா?"

"பயப்படாதே. கடிச்சு சாப்பிட மாட்டேன்."

"அதுக்கில்லை."

"ரொம்ப கற்பா இருக்கிறியே."

"கல்யாணம் ஆறதுக்கு முன்னாடி எதும் செய்யக் கூடாதில்லை."

"எதுவும் செய்யலாம். அவங்கவங்க என்னவெல்லாம் சாதிக்கிறாங்க, தெரியுமா?"

"அய்யோ நீ எதாவது செய்வியா, இப்ப?"

"கவலைப்படாதே! உன் சம்மதம் இல்லாம எதும் நடக்காது."

"சாமி சாட்சியா சொல்லு."

"எனக்கு சாமி மேல நம்பிக்கை இல்லை."

ஆட்டோவுக்குப் பணம் கொடுத்துவிட்டு கதவைத் திறந்தபோது, நாய் குரைத்தது. "சீசர்" என்று அதட்ட அந்தக் கரிய நாய் குழைந்து அவளை நோக்கி வாலை பலமாக வீசியது. கதவை சத்தமில்லாமல் சாத்திக்கொண்டாலும் பெரிய வீட்டிலிருந்து "யாரு?" என்று குரல் கேட்க –

"நான் ஆனந்த், முதலாளி!" என்று பதில் சொன்னான்.

"கூட யாரு..."

"தெரிஞ்சவங்க... காலைல சொல்றேன்" என்றான்.

"சரி, கேட்டைப் பூட்டிரு... காலை ஆறு மணிக்கு ஏர் போர்ட்டுக்குப் போகணும். சின்னம்மா வராங்க..."

"தெரியும் முதலாளி."

அவுட் அவுஸ் என்பதே பெரிய வீடாக இருந்தது. டி.வி. எல்லாம் இருந்தது. கீழே கம்பளம் போட்டிருக்க, அதன் மேல் அந்த நாய் சுதந்திரமாகப் படுத்துக்கொண்டு, ஆனந்தைப் பார்த்தது.

"சீசர்...சாமி கும்பிடு."

நாய் தன் இரண்டு முன்னங்கால்களையும் சேர்த்து வைத்துக் கொண்டு நின்றது.

"இது ஒண்ணுக்குத்தான் இந்த வீட்டில பக்தி அதிகம்?" என்றான்.

வேணி முதன் முதலாகச் சிரித்தாள்.

"நல்லவேளை உன்னப் பார்க்க நான் இன்னைக்கு வராட்டா என்னா கதி ஆயிருப்ப... தற்கொலைங்கறது எந்த பிரச்சினைக்கும் தீர்வு இல்லை தெரியுமில்லை." அவன் விளக்கைத் தழைத்து, "இந்த ராத்திரி இந்த சோபாவில படுத்துக்கலாம்" என்றான்.

"நாயி."

"அது காவல் இருக்கும்."

"எனக்கு பயமா இருக்குது..."

"எங்கிட்டயா நாய் கிட்டயா?"



"ரெண்டு பேருமே."

"நாயை வேணுமானால் அனுப்பிரலாம். என்னை அனுப்ப முடியாதே. நான் இங்கே படுத்தே ஆகணுமே."

"அந்த ரூமு" என்றாள்.

"அது பாத்ரூம். அதில் ஓர் ஆள் படுக்க இடம் இல்லை."

"வராந்தாவில் படுத்துக்கறேன்."

"கொசு கொன்னு போட்டுரும்."

"பரவாயில்லை பழக்கம்தான்."

ஆனந்த் அவளை நேராகப் பார்த்தான். "இதோ பாரு! முத முத ஓர் ஆள்மேல நம்பிக்கை வெய்யி... நம்பிக்கை வேணும். நான் சொன்னன்னா சொன்ன பேச்சைக் காப்பாத்துவேன். தொடாதேன்னு சொன்னா தொடமாட்டேன். என்ன நம்பு..."

வேணி அவனை நிமிர்ந்து பார்த்தாள். கண்களில் ஏராளமாக அறியாமை நிரம்பியிருந்தது. நேராக ஒரு பெண்ணைப் பார்ப்பதில் எந்தவிதமான விரசமோ படுக்கை இச்சையோ இல்லாமல் அன்புதான் தென்பட்டது. அவனருகே சென்றாள். அவன் கையைப் பற்றிக்கொண்டாள். தன்னைச் சுற்றிலும் அதைச் சுற்றிக்கொண்டாள். "உங்கிட்ட எனக்கு நம்பிக்கை இருக்குது."

"இப்ப என்மேல எனக்கு நம்பிக்கை இல்லை."

"பரவால்லை" என்றாள்.

"என்ன பரவால்லை?"

"என்ன ஆனாலும்..."

"நான் உன்னை உபயோகப்படுத்திகிட்டு உன்னைக் கல்யாணம் செய்துக்காம ஏமாத்திட்டேன்னா?"

"அதுகூட பரவால்லை..."

"எப்படி பரவால்லை ஆகும் அது? உன் கற்பு, தமிழ்ப் பண்பாடு எல்லாம் என்ன ஆவுறது?"

"எல்லாத்தையும் அலமாரில வச்சுரலாம். எனக்கு சட்டை தரியா..."

"ஆம்பிள்ளை சட்டைதானே இருக்கு."

"பரவாலை...

"வெளக்கு பரவால்லையா?"

"பரவால்லை...

"மத்த எது எது பரவால்லை?" என்று அவளுடன் சேர்ந்துகொண்டு தரையில் உட்கார்ந்தான்.

"சீசரை வெளியே போகச் சொல்லு" என்றாள் வேணி.

# 12

வேணிக்கு காலையில் எழுந்திருந்தபோது, எங்கிருக்கிறோம் என்று பிரமிப்பாக இருந்தது. எப்படி இங்கே வந்தோம் என்று புரியவில்லை. அப்புறம்தான் ராத்திரி ஆனந்துடன் அவுட் அவுசுக்கு வந்தது, அவன் சட்டையைப் போட்டுக்கொண்டு இருவரும் அருகருகே படுத்துக்கொண்டது, ஒரு கண எதிர்பார்ப்பில் அவன் தொடுவதை அவள் அனுமதித்தது, அதன்பின் முரட்டுத்தனமாகக் கட்டிக் கொண்டு... சட்டென்று அவன் விலக –

"ஏன்யா?"

"வேண்டாம் வேணி! இதுக்கு மேல வேண்டாம்."

"பரவால்லை."

"மேல எதாவது செய்தம்னா எம்மேல உனக்கு மரியாதை போயிரும். உம்மேல எனக்கு ஆசை போயிரும். ஒங்க அப்பாகிட்ட வந்து உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதா கேட்டு அவங்க சம்மதிக் காட்டா பதிவாளர் ஆபீசில கல்யாணம் பண்ணிக்கிட்டு, அதுக்கப்புறம் முறையா நடக்க வேண்டிய காரியத்தை அவசரப்பட்டு இப்பவே சாதிக்கிறதில திரில் எதும் இல்லை. வேண்டாம் வேணி."

"எப்ப வரப்போறியாம்?"

"எங்க?"

"எங்க வீட்டுக்கு."

"ஒரு வாரத்தில வந்துருவேன். நாளைக்கு சின்னம்மாவும் சின்னய்யாவும் வராங்க. கொஞ்சம் பிசியா இருப்பேன். காலையில ஏர்போர்ட்டுக் குப் போயிருவேன். அதனால உன்னை எழுப்ப மாட்டேன். நீ என்ன செய்யற, நாஷ்தா வெச்சிருக்கேன். அதை சாப்பிட்டுட்டு பேசாம வீட்டைப் பார்க்கப் போயிரு. உங்கப்பா, தங்கச்சி யார் கேட்டாலும் எங்க போயிருந்தன்னு சொல்லவே சொல்லாத. இல்லை, இங்கயே இருந்துருவியா?"

"நீ எப்படி சொல்றியோ..."

"போயிர்றதுதான் நல்லது. தனியா உன்னை இங்க வெச்சிருந்தா முதலாளி தப்பா எண்ணமாட்டார். ஆனா, அவங்க பசங்க ஒரு மாதிரி கிண்டல் பண்ணுவாங்க..."



"எங்கப்பா என்னை பலவந்தமாக கோவிந்தராசுவைக் கட்டிக்கச் சொன்னா?"

"யாரும் உன்னை அப்படி பலவந்தப்படுத்த முடியாது உனக்கு என்னா வயசு?"

"பதினாறு"."

"சர்டிபிக்கேட்டு இருக்குதா? ஆதாரம் எதாவது உங்கப்பன் கொடுத்திருக்கானா?"

"இல்லை."

"அப்ப யார் கேட்டாலும் பதினெட்டுன்னு சொல்லு, என்ன?"

"சரி"

"பயப்படாத. நான் வந்து உன்னை மீட்டுக்கிட்டுப் போறேன்."

காலை எழுந்தபோது அவனைக் காணவில்லை. மேசை மேல் தட்டு போட்டு மூடி வைத்திருந்தது. பிளாஸ்க் இருந்தது. காப்பியும் இட்லியும் இருந்தது. வேணி அதைச் சாப்பிட்டுவிட்டு, தண்ணீர் குடித்துவிட்டு, முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக்கொண்டாள். தலைமயிரை ஆனந்தின் சீப்பை எடுத்து வாரிக்கொண்டாள். கண்ணாடியில் ஒரு சிறுமி தெரிந்தாள்.

"நீதானே, வேணி?"

"ஆமா."

"ஆனந்த் அண்ணன் உனக்கு எதாவது வேணுமான்னு வெசாரிச்சு அனுப்பச் சொல்லிச்சு. எதாவது வேணுமா? நாஷ்தா மேசை மேல வெச்சிருக்காங்க."

"சாப்பிட்டேன். எப்ப வருவாரு?"

"சொல்ல முடியாது. ஏர்போர்ட்டுக்குப் போயிருந்தாரு. அதுக்கப் புறம் அவங்கள்ளாம் வெளிய போயிருக்காங்க."

"மணி என்னா?"

"எட்டரை."

"அவ்வளவா தங்கியிருக்கேன்?"

"நீங்க ஆனந்த் அண்ணனுக்கு உறவா?"

வேணி தயங்கி "ஆமா" என்றாள். "நீ?"

"நான் இந்த வீட்டில வேலை செய்றேன். ஆனந்து அண்ணன் ரொம்ப நல்லவரு. அவரு என்ன சொன்னாலும் முதலாளி கேப்பாரு. உம்பேரு வேணிதானே?"

"ஆமா."

"ஆனந்து அண்ணன் வந்தா, பூங்கொடி நல்லா பார்த்துக்கிட்ட துன்னு சொல்லு."

"ஏன்?"

"அப்பதான் ஆனந்து அண்ணன் முதலாளிகிட்ட என்னைப் பத்தி சொல்வாரு. முதலாளி ஆனந்து சொல்றதைத்தான் கேப்பாரு எல்லாத்திலயும் அப்படித்தான்."

"முதலாளி பேர் என்ன?"

"தெரியாது. சேட்டுங்க. அவங்க கல்யாணத்துக்கு குதிரைமேல வருவாங்க. சிவப்பா இருப்பாங்க."

வேணி தயக்கத்துடன்தான் அந்த இடத்தை விட்டுக் கிளம்பினாள்.

பூங்கொடி என்கிற அந்தப் பெண் தயாராக பூட்டை வைத்துக்கொண்டு காத்திருக்க, "அப்புறம் எப்ப வருவீங்க?"

"சீக்கிரமே! ஆனந்துகிட்ட சொல்லிரு."

"என்னா சொல்றது?"

"வீட்டுக்கு வரும்படி."

"சொல்றேன்."

வீட்டு வாசலில் சின்னதாக ஒரு கும்பலே காத்திருந்தது. கோவிந்தராசு, பரிமளா, முனியப்பா, வேல்முத்து, குட்டி, பாட்டி எல்லாரும் கவலையுடன் காத்திருக்க, வேணி வருவதை குட்டிதான் முதலில் கவனித்தாள். "இதோ அக்கா!"

எல்லாரும் திரும்பிப் பார்க்க, வேல்முத்து "வாடிம்மா ராணி! எங்க போயிருந்தாப்பல?"

பரிமளா "எங்கடி போயிருந்த?"

"வேலு அடிக்காத, வேலு. அப்பறம் அடிக்கலாம்." அடிக்கப்போன வேல்முத்தைத் தடுத்தான் கோவிந்தராசு.

முனியப்பாவும் "விடு வேலு" என்றான். வேணியை நிறுத்தி "எங்க போயிருந்த?" என்று கேட்டான்.

வேணி அவனை நிமிர்ந்து பார்த்து, "ஆனந்து வீட்டுக்கு" என்றாள்.

"யாரு ஆனந்து?"

"அதான் அந்தப் பையன். மாதுரி கார்ல வர்றானே."

"மாருதி காரு."

"இன்னா தைரியம் பாத்தியா?"

"அவரைத்தான் நான் கல்யாணம் கட்டிக்கப் போறேன்."

"என்னது?"

"ஆமா. என்னை யாரும் பலவந்தம் பண்ணிர முடியாது."

"வேலு! பாத்தியா. இதுக்குத்தான் அடிச்சுக்கிட்டேன். போன வருசமே செய்திருக்கலாமில்லை?" என்றான் ராசு.

"என்னது என் வாக்கை மீறுறதா, எப்படி வேணி?"



"பாவா, என்னைத் தொடாதீங்க."

"என்னது!" வேல்முத்து கையை ஓங்கிக்கொண்டு அவளிடம் வர-பரிமளா "வேண்டாம், முத்து" என்றாள்.

"அருவா எங்க? இந்தப் பொண்ணு எனக்கு வேண்டியதில்லை. சொன்ன பேச்சைக் கேக்காத கழுதை எதுக்கு எனக்கு? பஜாரி, உச்சு முண்டை!"

வேணி அவனை எதிர்த்து குரோதத்துடன் பார்த்தாள். "என்ன வேணுமானாலும் செய்துக்கங்க. என்னை ஒண்ணும் செய்துர முடியாது."

ராசு அவளைப் பார்த்து "என்ன வேணி! எங்கிட்ட சிநேகிதமா இருந்தியேம்மா?"

"உங்களை நான் எப்பவாவது கல்யாணம் செய்துக்க சம்மதம் சொன்னனா?"

பரிமளா அவளருகில் வந்து "வேணிக் கண்ணு" என்றாள். "எங்க போயிருந்த?"

"ரயில்ல போய் விழப் போயிருந்தேன். அவருதான் வந்து காப்பாத்தினாரு."

அப்போது முனியப்பா வேல்முத்துவையும் கோவிந்தராசுவையும் தனியாக அழைத்து மரத்தடிவரை – வேணிக்குக் கேட்காத தூரத்திற்குச் சென்று இரகசியமாகப் பேசினர். அதன்பின் வேல்முத்து, அவளருகே வந்தான்.

"சரி சொல்லு, அவன் எங்க இருக்கான்னு தகவல் சொல்லு."

"எதுக்கு?"

"அவனை உனக்குக் கல்யாணம் செய்து வெக்கறோம்."

"உம்! ஏமாத்துவிங்க."

"ஏமாத்தலை. சொல்லுடி உச்சு முண்டை."

"கேக்கற விதமே நம்பிக்கையா இல்லை."

"ஏய் சின்னவளே! உனக்கு எதாவது தெரியுமா? அந்தாளு எங்கருக்கான்னு."

"தெரியாது பாவா" என்றாள் குட்டி.

"அவரே வர்றேன்னிருக்காரு."

"எதுக்கு?"

"என்னைக் கல்யாணம் பண்ண, கேக்க."

"அப்படியா? அவன் என்கிட்ட, என் பொண்ணைக் கட்டிக்க அனுமதி கேக்க வரப்போறானா?" என்ற வேல்முத்து கோவிந்தராசுவின் பக்கம் திரும்பி "கதை போற போக்கைப் பாத்தியா ராசு."

கோவிந்தராசு சமாதானமாக "அதனால என்ன முத்து இந்தக்

காலத்து பெண்ணுங்க அப்படித்தான் இருப்பாங்க. பாரும்மா வேணி. இதனால எனக்கு ஏமாற்றம்தான். ஆனா வருத்தமில்லை. நீ எனக்குக் கெடைக்கலைன்னாலும் எங்கயாவது சந்தோசமா இருந்தா சரி. தற்கொலையெல்லாம் வேண்டாம். உங்கப்பனுக்கு நான் நெறைய கடன் கொடுத்தேன். உன்னை அடையணும்ங்கிற சுயநலத்தால இல்லை. உன் அப்பன் நல்லவன். அவன் என் தோஸ்த்து. அவனுக்கு உதவி செய்யணும்ங்கற ஆசையால கொடுத்தேன். நீ கெடைச்சா சந்தோசப்பட்டிருப்பேன். அதனால என்ன! பரவாயில்லை. அந்தாளு எங்கிருக்கான் சொல்லு. எல்லாரும் சேர்ந்து உனக்கு அவனைக் கட்டி வெக்கிறோம். என்ன முனியப்பா! நான் சொல்றது சரிதானே?"

"ஆமா. பொண்ணே உன் சந்தோசம்தான் நம்ம சந்தோசம்."

பரிமளா அவளிடம் வந்து "எங்க இருந்துச்சு வீடு?"

"எனக்கே அட்ரஸ் தெரியாது."

"அப்பால வருவானா? எப்ப?"

"ஒரு வாரத்துக்குள்ள."

"வரலைன்னா?"

"வருவாரு."

"ராத்திரி அவன்கூட படுத்துக்கிட்டு இருந்தியா?"

"ஆமாம். ஆனா, நீங்க நெனைக்கற மாதிரியில்லை."

"அடியாத்தி!"

"வேணி அவன் எங்க இருக்கான்னு மட்டும் சொல்லிரு போதும்" என்றான் வேல்முத்து.

"அவரே வருவாருன்னு சொன்னனில்லை."

"வரலைன்னா கோவிந்தராசுவைக் கட்டிக்கிறியா?"

"அந்தப் பேச்சே இல்லை."

"எந்தப் பேச்சு?"

"அவர் வரலைங்கிற பேச்சே இல்லை."

"பாரும்மா என்னதான் கோவிந்தராசு பெரியமனசுத்தனமா சொன்னாலும் உங்கப்பன் அவருகிட்ட ரொம்ப கடன்பட்டிருக்காம்மா. அதனால கோவிந்தராசுவைக் கல்யாணம் செய்துக்கறது கட்டாயமாயிருச்சும்மா."

"அப்படியெல்லாம் இல்லை வேலு. வேணி நீ யாரை வேணாலும் கட்டிக்க. அவன் வரலைன்னா என்னைப்பத்தி நெனைக்கலாம் நீ. நான் எப்போதும் காத்திருப்பேன்!"

"அவன் எங்கிருக்கான்னு மட்டும் சொல்லிரு வேணி!"

"சொல்றேன்" என்றாள்.

அவர்கள் அனைவரும் அவளருகில் வந்து சூழ்ந்துகொள்ள, வேணிக்கு சிரிப்பு வந்தது.



# 13

அவர்கள் எல்லாரும் "சொல்லு... சொல்லு" என்று ஆனந்தின் விலாசம் கேட்க, வேணி யோசித்துப் பார்த்து "எனக்குக்கூட அட்ரஸ் தெரியாது பாவா" என்றாள்.

"என்னது அவங்கூட ராத்திரி தங்கிட்டு வந்திருக்க! அத்தனை நெருக்கமா பளகிருக்க?"

"அதெல்லாம் ஒண்ணுமே கெடையாதுன்னு சொன்னனில்லை?" என்றாள் வேணி.

"வேல்முத்து பொண்ணு பொய் சொல்லுது. முகத்தில ஒருமாதிரி பூரிப்பு மந்தகாசம் தெரியுது. நிச்சியம் நடந்திருச்சு" என்றாள் பரிமளா.

"சும்மாரு, பரி! கோவிந்தராசு நெசம்முன்னு நெனைச்சுக்கப் போறான். ராசு! அதெல்லாம் இல்லை. எம் பொண்ணு தங்கம்."

"தங்கம் இல்லை. கொஞ்சம் பித்தளை கலந்தாக்கூட நமக்கு பரவால்லை வேலு, நாமல்லாம் அலுமினியமா இருக்கறப்ப. என்ன, பரிமளா?" என்று அவளைப் பார்த்து சிரித்துவிட்டு, "வேலு! இந்தப் பொண்ணை எனக்குக் கட்டி வெச்சுத்தான் ஆகணும்ம்னு கட்டாயம் இல்லை. சந்தோசமா சவுக்கியமா எங்கயாவது வாழ்ந்தா சரி" என்றான்.

"அப்ப நான் வாங்கின கடன்?"

"அதுக்கென்ன? அதுக்குத்தான் பத்திரம் பாண்டு எல்லாம் எழுதிக் கொடுத்திருக்கியே! நீ எங்க போறே? நானும் எங்க போறேன். என்ன பரிமளா?"

பரிமளா "அட வேண்டாம்யா! இந்தாள் கடனை சப்ஜாடா தீர்த்துறதுதான் நல்லது. வேணி சொல்லு! நிசமாவே அவன் விலாசம் தெரியாது உனக்கு?"

"தெரியாது... தெரியாது! சதாசிவ நகர்ல ஒரு வீட்டாண்டை அழைச்சுக்கிட்டுப் போனாரு. அவுட் அவுஸ் மாதிரி இருந்திச்சு. அங்கே தான் ராத்திரி..."

"ராத்திரி?"

“படுத்திருந்தோம். பேசிட்டு இருந்தோம்”

“அவ்வளவுதான். அதுக்கு மேல ஏதும் இல்லை.”

“திருப்பித் திருப்பி அதையே கேட்டுக்கிட்டு இருக்கிங்களே.”

“அந்தவூட்டைக் காட்ட முடியுமா?”

“எதுக்காம்?”

“அங்கிட்ட போயி கல்யாணம் பேசறதுக்கு, வேற எதுக்காம்?”

வேணி நம்பிக்கையில்லாமல் சுற்றிலும் பார்த்தாள்.

“ஆமா வேணி, நிசமாதான் நம்பு. எங்களை உன்னை சந்தோசமா
பெரிய வூட்டில கல்யாணம் கட்டிக் கொடுக்கிறதில யாருக்குத்தான்
ஆசையிருக்காது சொல்லு.”

“அந்தாளு கடன் எல்லாம் திருப்பிக் கொடுக்கமாட்டாரு. அத்தனை
காசில்லை அவர்கிட்ட. வெறும் டிரைவரு.”

“இருந்தாலும் பெரிய மனுஷன் வீட்டு டிரைவர்தானே. நீ எங்களை
அழைச்சுகிட்டு போயேன். நாங்களே பேசிக்கிறோம்.”

“இதோ அவரே வர்றாரு” என்றது குட்டி. “அய்! ரஜினி மாதிரியே
ஷ்டைலா வர்றாரு.”

வேணிக்கு தூரத்திலிருந்து ஆனந்தைப் பார்க்க பெருமையாகவே
இருந்தது. சிரித்துக்கொண்டே, நல்ல வெள்ளை நிறத்தில் சர்ட்டு
பாண்ட் அணிந்து தலையைக் கலைத்துவிட்டுக்கொண்டு, வெயில்
கண்ணாடி கண்களை அரைகுறையாக மறைக்க அதைக் கழற்றி
விரல்களுக்கு இடையில் சுழற்றிக்கொண்டு எல்லாரையும் கும்பிட்டு
“வணக்கம்! எம்பேரு ஆனந்துங்க. முன்னால ஒருதரம் இங்க எல்லா
ரையும் முரட்டுத்தனமா சந்திச்சிருக்கேன். இப்ப கொஞ்சம் ஜென்டில்
மனா வர்றேன். உங்க வூட்டுப் பொண்ணைக் கல்யாணம் செய்ய
கேக்க வந்திருக்கேன்! வேல்முத்து நீங்கதானே?” என்று ராசுவைக்
கேட்க, குட்டி சிரித்தது.

“நான்தான் வேல்முத்து, பொண்ணுக்குத் தகப்பன்” என்றான்,
ஒதுங்கி நின்ற வேல்முத்து.

“உங்க பொண்ணை கல்யாணம் பண்ணிக்கிறதா தீர்மானம்
பண்ணிட்டோம்.”

“யாரு?”

“ரெண்டு பேருமே.”

“அப்படியா? என்ன தர்றதா இருக்க?”

“என்னையே தர்றனே.”

“பணமா, ரூபாயா?”

“கல்யாணச் செலவெல்லாம் நான் பார்த்துக்கறேன். அதுக்கு
விருப்பம் இருந்து கேட்டா ஒரு செட்டு நகை பண்ணிப் போடுவேன்.”



“ரொக்கமா எத்தனை தருவே?”

“ரொக்கமான்னா எதுக்கு? டவுரி மாதிரியா?”

“ஆமா, அப்படித்தான் வெச்சுக்கயேன்.”

“அது நீங்க தரவேண்டாம்னு உறுதிமொழி அளிக்கிறேன்.”

“நாங்க இல்லைய்யா! லட்டுக்கணக்கா எங்க வூட்டுப் பொண்ணைக்
கொத்திக்கிட்டு போறியே, நீல்ல தரணும்?”

“இது எந்த ஊர்லயும் வழக்கமில்லைங்களே. இருந்தாலும் போனாப்
போவுது. பத்து ரூபா போட்டுக் கொடுக்கிறேன்.”

“பத்தாயிரமா?”

“இல்லை. பத்து ஒத்தை ரூபா! பாருங்க, சும்மா வெளையாட்டு
எதும் வேண்டாம். அந்தப் பொண்ணை நான் கல்யாணம் செய்யறதா
தீர்மானிச்சாச்சு. அதுக்கு அதும் சம்மதிச்சாச்சு. ஏதோ உங்களுக்கு
தகவல் சொல்ல வந்தேனே தவிர, அனுமதி கேக்க வரலை.”

“பாத்தியா ராசு, இந்தப் பேச்சு எப்படி?”

“கல்யாணம்தான் ஆயிருச்சே, வேல்முத்து. முதலிரவு எல்லாம்
பண்ணிட்டுதானே வந்திருக்காங்க.”

“பொய்யி. அதெல்லாம் நடக்கலை.”

“இருடி.”

“அவ இருக்கமாட்டாங்க எங்கூட இந்தக் கணமே வர்றா.”

“அவ இருக்கமாட்டாங்க எங்கூட இந்தக் கணமே வர்றா.” கோவிந்தராசுவும் முனியப்பாவும் மறுபடி மாநாடு

வேல்முத்துவும் கோவிந்தராசுவும் முனியப்பாவும் மறுபடி மாநாடு

கூட—

ஆனந்த் சுதந்திரமாக அவளிடம் வந்து, “இந்த மோதிரம் சரியா
இருக்குதா பாரு” என்று கையைப் பற்ற—

வேணி அவர்களைப் பதற்றத்துடன் பார்த்தாள்.

வேணி அவர்களைப் பதற்றத்துடன் பார்த்தாள். மூவரும் தீர்மானித்ததுபோல் “பாருப்பா, உனக்கு வேணியைக்

மூவரும் தீர்மானித்ததுபோல் “பாருப்பா, உனக்கு வேணியைக்
கல்யாணம் செய்து கொடுக்க எங்களுக்கெல்லாம் சம்மதம்தான்.”

“கை குடுங்க” என்றான். மூவரையும் கைகுலுக்கினான்.

“என்னதான் நீ தடாலடி பண்ணினாலும் நாங்க எங்க பொண்ணை
சரியான முறையில் கட்டிக் கொடுக்கத்தான் இஷ்டப்படறோம்.
அவசரப்படுத்தாத. கொஞ்சம் அவகாசம் கொடுத்தா, நல்லாவே,
எல்லாருக்கும் சந்தோசமா செய்யலாம்.”

“எத்தனை அவகாசம்.”

“ஒரு மாதம்.”

“ஒரு மாதமெல்லாம் என்னால காத்திருக்க முடியாது.”

“ஒரு வாரமாவது கொடுத்தால்...”

அப்போதுதான் வேணியின் கவலைக் கண்களை ஆனந்த் சந்தித்
தான். “கொஞ்சம் இருங்க! வேணியைக் கேட்டுக்கணும்” என்று

அவளை அழைத்தான் தனியாக.

இருவரும் செல்ல –

“அவங்க சொல்றதையெல்லாம் நம்பாதீங்க. என்னை இப்பவே கூட்டிக்கிட்டு போயிருங்க” என்று கலங்கினாள் வேணி.

“கூட்டிட்டுப் போயிறுவேன், வேணி. ஒரே ஒரு சிக்கல். உன்னை இப்ப அவுட் அசுல குடித்தனம் வெக்க முடியாது. முதலாளியோட எஸ்டேட்டுக்காரங்க நாலஞ்சுபேர் வந்திருக்காங்க. கல்யாணம் பண்ணிட்டு உன்னை ஒரு நிமிசம் இந்த சூழ்நிலையில வெக்க விருப்பமில்லை எனக்கு. ஒரு வாரத்துக்குள்ள அவங்க போயிருவாங்க. அதனால ஒரு மாதம் வேண்டாம். ஒரு வாரம் தாமதிக்கலாம்னு தோணுது.”

“அதுக்குள்ள இவங்க என்னைக் கடத்திக்கிட்டு போய் எதாவது..”

“ஒண்ணும் செய்துர முடியாது. எல்லாரும் பயந்தாரிங்க. உம்மேல கைவெச்சா தகவல் சொல்லு, உடனே வந்து தூள் கௌப்பிருவேன்.”

“அதைக் கொஞ்சம் அடிச்சு சொல்லிட்டுப் போயிருங்க.”

“எழுத்து மூலம் வாங்கிட்டுப் போயிர்றேன். பயப்படாத வேணி. ஒரு வாரம் உன்னை ஒருத்தரும் ஒண்ணும் பண்ணிர முடியாது. எனக்கும் கொஞ்சம் பணம் புரட்ட வேண்டிருக்குது. ஒரு வாரம் சவுகரியப்படும்.”

அவளைவிட்டு விலகி அவர்களிடம் சென்று “ஒரு வாரம் பரவால்லை. அதுக்கு முன்னால நீங்க கையெழுத்துப்போட்டுக் கொடுக்கணும். பேப்பர்ல.”

“என்னன்னு?”

“இந்தப் பொண்ணு எனக்குத்தான்னு.”

“அதுக்கென்ன.”

“இப்பவே வேணும்.”

“அதுக்கென்ன.”

“காலைல மறுபடி வர்றேன், வேணி. பயப்படாதே. தினம் காலைல ஒருமுறை மாலையில ஒருமுறை டூட்டி முடிஞ்சதும் வந்து பார்த்தேன். தெரியுமில்லை வேணி. இந்தா பணம் வெச்சுக்க செலவுக்கு” என்று அவளிடம் முன்னூறு ரூபாய் கொடுத்தான்.

“நான் தினமும் காலையில வர்றேன், என்ன? டாட்டா! சின்னப் பொண்ணே, ரஜினி வர்றம்மா. அக்காவை நல்லா பாத்துக்க. பலகாரம் வாங்கிக் கொடு என்ன.”

அவன் சென்றதும் கோவிந்தராசுவும் முனியப்பாவும் “அப்ப வர்றேன் வேலு. ராத்திரி சந்திக்கலாம்” என்றார்கள்.

விலகிச் சென்றார்கள்.



வேல்முத்துவை வேணி கண்கொட்டாமல் பார்த்தாள். அவள் எதும் பேசாமல் தன் வேலையை கவனிக்கத் தொடங்கினாள்.

“வளர்த்த கடா மார்ல பாயுது. இதைத் தாயில்லா பொண்ணுன்னு அருமையா வளர்த்தேன். பாரு! ஏண்டி குட்டி. உனக்கு யாரும் லவ்வர்ஸ் இருக்காங்களா?”

பரிமளா சமாதானக் குரலில் “வேலு. பிற்காலத்தில வேணிக்கு நல்லதுதானே நடக்கப் போவுது. அதனால இப்ப கொஞ்சம் பார்த்தால பேசற. சமாதானப்படுத்திக்க. நம்ம தமிழு உன்னைக் காப்பாத்துவான். பாரு இப்பவே என்ன சிரி சிரிக்குது எம்பையன்.”

வேணிக்கு சந்தோசமாகவும் சற்றே நம்பிக்கையில்லாமலும் இருந்தது. என்ன சுலபமாக ஒத்துக்கொண்டுவிட்டார்கள். அவர்கள் மூவரும் கூடிப் பேசினார்களே, ஏன்? ராத்திரி என்னை கிராமத்துக்குக் கடத்திக்கொண்டு போகப் போகிறார்களா? அப்படி ஏதாவது திட்டம் வைத்திருக்கிறார்களோ என்று அச்சமாக இருந்தது.

நடக்காது. காலையில் ஆனந்த் வந்து “எங்கே வேணி?” என்று கேட்கும்போது விஷயம் வெளியே வந்துவிடும். போலீஸை அழைத்து வந்துவிடுவான்.

ஆனந்த் அப்படிப்பட்டவன். அசகாய சூரன்.

குட்டியைத் தடவிக் கொடுத்தாள். “என்னக்கா! கல்யாணம் பண்ணிக்கப் போறியா?”

“ஆமாடி?”

“என் கதி என்ன ஆவுறது?”

“நாங்க இந்த ஊர்லதான் இருப்போம். எங்கூட நீயும் வந்துரு.”

“அ.. ஆம் படிக்கணும் இல்லை?”

“ஆமாம்.”

“பாவா வுடுவாங்களா?”

“உன்னையா என்னையா?”

“ரெண்டு பேத்தையும்.”

“விட்டுத்தான் ஆகணும்.”

“இல்லாட்டி…”

“இல்லாட்டி நம் ஆனந்து இல்ல, அவரு வந்து சத்தம் போடுவாரு. போலீஸ்காரங்களையெல்லாம் தெரியுமாம் அவருக்கு.”

“அக்கா! அவங்க என்ன பேசிக்கிறாங்க தெரியுமா. நீ இல்லாதப்ப–”

“அதைப் பத்தி கவலையில்லை. நாளைக்கு ஆனந்து காலைல வந்ததும் பாரு…”

# 14

**கா**லை ஆனந்த் வராதது வேணிக்கு பரபரப்பாக இருந்தது. இருந்தாலும் வேறு வேலை எதாவது இருக்கும் ரொம்ப பிஷியாக இருப்பாரு. அவங்கள்ளாம் ஏர்போட்டு போவணுல்லை என்று எண்ணிக்கொண்டாள்.

"அக்கா அவரு ரொம்ப நல்லவருக்கா. என்னையும் உங்கூட கூட்டிப் போயிருக்கா. எனக்கு உன்னைய விட்டுவிட்டு இருக்க முடியாது. இந்தப் பரிமளா என்னைக் கொலை செய்துருவா" என்றாள் குட்டி.

"என்ன மாய்மாலம் அவகிட்ட உனக்கு. பட்டுப் பாவாடை, பணம் எல்லாம் வாங்கிட்டு ஏன் குலாவினியாம்?"

"அதெல்லாம் இல்லை. அவளா வந்து கட்டாயமா எங்கிட்ட கொடுத்ததினாலதான் வாங்கிட்டேன். அப்பறம் நீ வேணாம்னு சொன்ன பிற்பாடு அவகூட பேசக்கூட இல்லையே?"

வேணி சும்மா இருக்க, "அக்கா, நான் உன்னைவிட மாட்டேன். உம்பின்னாடியே வருவேன்" என்றாள்.

வேணி சிரித்து "கவலைப்படாதே. முத முத நான் போய் வீடு எல்லாம் பார்த்தப்புறம் கட்டாயம் உன்னை வந்து கூட்டிப் போயிர் றேன். குட்டி சமத்தா படிக்கணும்."

"நீ என்ன சொன்னாலும் சரி அக்கா."

"இந்தாளு ஏன் வரலை? சாயங்காலம் வருவாரா?"

"அந்தவீடு ரொம்ப பெரிசா அக்கா?"

"ஆமா அவுட் அவுசே பெரிய வீடு கணக்கா இருக்குதுன்னா பார்த்துக்கயேன்."

"அங்க ராத்திரி அழைச்சுக்கிட்டு போயிருந்தாரா, அவரு?"

"ஆமா ஏய்! நீ உன் வயசுக்கு மீறின கேள்வியெல்லாம் கேக்கற."

"நான் வேணா போய்ப் பாத்துறவா? பஸ்ல டிக்கெட் வாங்கிகிட்டு சதாசிவநகர் போய்ப் பாத்துட்டு வரவா?"

"வேண்டாம் எனக்கே அந்த வீடு தெரியாது."



அவளுக்கு மனசுக்குள் கவலை அதிகமாகியது. அவர் அட்ரஸ் தெரியாது. வீடு தெரியாது. இந்த முறைகூடப் போய் எழுதி வாங்கிக் கொண்டுவிட வேண்டும். சரியான விலாசம், வீட்டு நம்பர்... எல்லாம் என்று மனசுக்குள் எண்ணிக்கொண்டாள்.

காலையில் அவள் வண்டி எடுத்துக்கொண்டு மைதானத்துக்குப் போக வேண்டியிருந்தது. தினம் முழுவதும் மைதானத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் ஆனந்த் எங்கேயாவது தென்படுகிறானா என்று.

ஆனந்த் வந்தால் தன்னை வந்து பார்க்கும்படி வேல்முத்து சொல்லச் சொன்னான்.

"எதுக்கு பாவா?"

"அந்தாளு குலம்கோத்திரம் எல்லாம் வெசாரிச்சு வச்சுக்கத்தான். இப்பவே பாரு, காலைல வர்றதா சொல்லிட்டு வரலை. அவனை நம்பி எம் பொண்ணைக் கட்டிக் கொடுக்கப் போறதுக்கு முன்னாடி அவனை கொஞ்சம் வெசாரிச்சு வெக்கறது நல்லதுதானே?"

"வந்துருவாருப்பா! வந்ததும் பார்க்கச் சொல்றேன்."

"வரணும். வந்துதான் ஆகணும். அவன் எதாவது உங்கிட்ட பணம் கொடுத்திருக்கானா?"

"இல்லை பாவா."

"எதாவது கேட்டு வாங்கி வெச்சுக்கிட்டியா?"

"எதுக்காம்?"

"கல்யாண செலவுக்கு."

"அதெல்லாம் இன்னும் பேசவே இல்லை. அனாவசியமா செல வழிக்க வேணாம்னு சொன்னாரு."

"வெசாரிச்சுப் பார்த்துட்டேன். ரிஜிஸ்டர் ஆபீசுல உன்னை எடுத்துக்க மாட்டாங்க. உனக்கு இன்னமும் பதினெட்டு வயசாகலை. அதை அவங்கிட்ட சொன்னியா?"

"சொல்லியாச்சு. பரவாயில்லை. பதினெட்டு வயசாச்சுன்னு சொல்லிரலாம்னார். அவருக்கு எல்லாரையும் தெரியுமாம்."

"பதினெட்டு வயசு வர்றவரைக்கும் காத்திருக்கலாமில்லை! என்ன அவசரம்?"

"பாவா! நீங்கதானே அவசரப்படறிங்க, ராசுவுக்கு என்னைக் கல்யாணம் கட்டிக் கொடுக்க. அதனாலதானே இந்தப் பேச்சே வந்தது."

"அதைத்தான் இப்ப கைவிட்டாச்சே. எனக்கென்னவோ இந்த ஆனந்துங்கிறவன் நம்பிக்கையா இல்லை. பேரே அதானான்னு சந்தேகமா இருக்குது. முனியப்பா விசாரிச்சுப் பாத்ததில சங்கர்னு பேர் சொன்னானாம். பொம்பளை சவகாசம் எல்லாம் உண்டாம். என்னவோ வேணி, உன் பிடிவாதத்தால் பிறகாலத்தில் ரொம்ப

கஷ்டப்படப் போறன்னு பயமா இருக்குது. நான் பெத்த பிள்ளையில்லையா?"

வேணிக்கு சாயங்காலம் ஆகும்வரை இருப்புக் கொள்ளவில்லை. வழி ஞாபகம் இருக்கிறது. போய்ப் பார்த்துவிடலாமா? தெருதான் சந்தேகம் சதாசிவ நகரில் வெளிச்சமிருக்கும்போதே அல்லாடினால் அந்த வீட்டைக் கண்டுபிடித்து விடலாம். வாசலில் மாமரம் இருந்தது. மரத்தில் ஊஞ்சல் போட்டு பிரம்பு நாற்காலி தொங்கிக் கொண்டிருக்க, அவுட் அவுஸ் தனிப்பட்டு இருந்தது. கண்டுபிடித்துவிடலாம். அதில் சிரமமிருக்காது. நாளைக்காலை குட்டியையும் கூட்டிப் போய் தேடிப் பார்த்துவிடலாம் என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே ஆனந்த் வந்தான்.

வேணிக்கு அத்தனை கவலைகளும் ஒரே நொடியில் கலைந்து போய்விட்டன. "வாய்யா! உனக்காக எத்தனை நேரம் காத்திருக்கிறது?"

வேல்முத்து சந்தோசத்துடன், "வரலைன்னதும் கவலை ஆய்டுத்து ஆனந்த்" என்றான்.

"காலைல அல்லது மாலையில ஒரு முறையாவது வந்துருவேன். வேணி! உன்னை மறுபடியும் தொந்தரவு செய்தாங்களா."

"அதெல்லாம் இல்லை. எல்லாம் சமாதானமாயிருச்சே. வயசுதான் பத்தலை" என்றான் வேல்முத்து.

"கவலைப்படாதீங்க. தாசில்தார் ஆபீசில் எனக்கு தெரிஞ்ச ஆளு இருக்காரு. அவரு பர்த் சர்டிபிகேட், ஏஜ் சர்ட்டிபிகேட் ரெண்டும் கொடுத்துருவாரு."

"கல்யாணம் எங்க வெச்சிக்கிறாப்பல?" என்றான் வேல்முத்து.

"பதிவுத் திருமணம் வெச்சுக்கிட்டு காமதேனுவில் ஒரு ரிசப்ஷன் மாதிரி கொடுத்துரப்போறேன்."

எப்போதும் வேணியைப் பார்த்துக்கொண்டுதான் பதில் சொன்னான். மனதுக்குள் துடிப்பாக இருந்தது. அவள் கையைப் பற்றிக் கசக்கினான். வேல்முத்து வடை போட்டுக்கொண்டிருந்தபோது, இடுப்பை வளைத்துக் கிள்ளினான்.

"எங்க ரஜினிக்குட்டி?"

"ஏம்பா, சட்டுனு கல்யாணம் செய்துக்கிட்டா தங்க எடம்?"

"முதலாளிகிட்ட பேசிட்டேன். அவுட் அவுசுல இருக்கலாம்னு சொன்னாரு."

"சொந்தமா ஒரு வீடு கெடைக்கற வரைக்கும் நம்ம வீட்டுலேயே இருக்கலாமே. ஒரு ரூம் ஒழிச்சுத் தர்றோம்" என்றான் வேல்முத்து.

"வேண்டாம் பாவா" என்றாள் வேணி.

"இத்தனை வருசம் எங்கூடவே இருந்து வளந்துட்டு ஒரு நிமிடத்தில எல்லாத்தையும் உதறிட்டுப் போறேங்கிறா பாருங்க."



"அதுதாங்க காதலுக்கு உள்ள மகத்தான சக்தி. வேணிக்கண்ணு. உன்னைக் கண்கலங்காம பத்திரமா வெச்சுப்பேன். கல்யாணம் ஆனப்புறம் வடை சுடவேண்டாம். வீட்டில் இருந்துகிட்டு என் ஓர் ஆளுக்கு சமைச்சா போதும். நாம சிக்மகளூர் போகலாம், கோவா போகலாம். ஜோக் போகலாம். தலைக்காவேரி போகலாம். ஊர் ஊரா சுத்திக் காட்டுவேன். சிற்பங்கள்ளாம் காட்டுவேன். என் வேலையே ஊர் சுத்தறதுதான். உன்னையும் கூட்டிட்டுப் போயிருவேன். உனக்கு கார் ஓட்டக் கத்துக் கொடுத்துருவேன், என்ன?"

"கல்யாணச் செலவுக்குப் பணம் வெச்சிருக்கியா? நான் அப்பங்கிற முறையில் செலவு செய்துதான் ஆகணும். எதாவது நகை பொடவை எடுத்தாகணும் இல்லை?"

"அதெல்லாம் அவசியமில்லைங்க. பொண்ணைக் கொடுக்கிறீங்களே, அது போதும்."

"இல்லைப்பா. அதுக்கு ஒரு நல்ல தாவணி கெடையாது. பொடவை என்கிறதை கண்ணால பாத்ததில்லை. நாங்கள்ளாம் ஏளைங்கப்பா."

"கல்யாணத்துக்கு வேண்டிய சேலை எங்க எசமானே எடுத்திருவார். கவலைப்படாதீங்க. உங்களுக்கு செலவு வைக்க மாட்டோம். வேணி! நீ என்ன சொல்ற?"

"எப்ப கல்யாணம்?"

"ரிஜிஸ்தர் ஆபீசுல டேட்டு வாங்கணும். மினிமம் கொஞ்ச நாள் காத்திருக்கணும். அதெல்லாம் என் பிரெண்டு ஒருத்தன் செய்யறான். பாலசிங்கம்னு பேரு."

"அதிகம் தாமதிக்காதீங்க."

"தாமதமே இல்லை. உன்னைவிட நான்தான் அவசரத்தில் இருக்கேன். வேணி தனியா இருந்து அலுத்துப் போச்சு. அய்யா வேல்முத்து வரவா?"

"சாயங்காலம் கடை முடிஞ்சதும் ஒரு நடை வந்தின்னா நல்லது, ஆனந்து."

"ஏன் எதுக்காம்?"

"கொஞ்சம் உன் குடும்பம் பத்தியெல்லாம் வெசாரிக்கணும்."

"குடும்பம் என்னங்க குடும்பம்? பொண்ணுக்கும் எனக்கும் பிடிச்சுப் போச்சில்லை? அதான் முக்கியம்."

"எதுக்கும் அப்பங்கிறதில் ஓர் ஆதங்கம் இருக்காதாப்பா?"

"என்ன விசாரிக்கணுங்கிறிங்க? இப்பவே கேளுங்களேன்."

"நம் பெரியவங்களையெல்லாம் கூட்டிவரணுமில்லை?"

"அது யாரு பெரியவங்க?"

"அப்படியெல்லாம் யாருமில்லை" என்றாள் வேணி.

"ஏம்பா, எம் பொண்ணை அப்படியே லட்டு மாதிரி கவர்ந்துகிட்டு

போறே! உன்னை ஒரு சாயங்காலம் கூட்டி வெச்சு, என்ன ஏதுன்னு வெசாரிக்க அப்பானான எனக்கு உரிமை இல்லைங்கறியா?" என்று வேல்முத்து பரிதாபமாகக் கேட்டான்.

ஆனந்த் "சரிங்க, சீக்கிரம் டேட்டி முடிஞ்சுச்சுன்னா வரங்க. எங்க வரணும்?"

"எங்க சவுகரியமோ அங்க வா! பேட்டைக்கு வரியா, இல்லை இங்கயே வேணா வா."

"வர்றேன். டைம் கெடச்சுதுன்னா வரேன். இல்லை நாளை மாலை."

"எப்ப சவுகரியமோ அப்ப கல்யாணத்துக்கு முன்னால வந்துரு போதும்."

"தினம்தான் வரப்போறேன், வேணி! வரட்டுமா? இந்தா, இன்னைக்கு இது" என்று அவளிடம் ஒரு சாக்லேட் பட்டையைக் கொடுத்து கையை அழுத்திவிட்டுப் போனான்.

வேணி வண்டியைத் தள்ளிக்கொண்டு செல்ல, வேல்முத்து அங்கேயே உட்கார்ந்து இருந்தான். கார்கள் போன வண்ணமாக கலகலப்பாக இருந்தது. அந்த இடம் இருள் படிய ஆரம்பித்துவிட்டதால் கெஸ்ட் அவுசிலும் நட்சத்திர ஓட்டலிலும் விளக்குகள் விழிக்க ஆரம்பித்தன.

வண்டி தள்ளிக்கொண்டிருந்தபோது, பளபளப்பாக பாரில் பலபேர் ஓட்டலில் நடக்கப்போகும் ரிசப்சனுக்காக இறங்கினார்கள்.

சரிவில் இறங்கி, தன் வீட்டை நோக்கி வேகமாகச் சென்றுகொண்டிருந்த வேணிக்கு மிகுந்த சந்தோஷமாக இருந்தது. அவன் கொடுத்த சாக்லேட் பட்டையை சற்றே விடுவித்து நுனியில் கடித்துப் பார்த்தாள்.

குட்டிக்குக் கொடுக்க வேண்டும். குட்டியைக் கூட்டிக்கொண்டு சென்றுவிட வேண்டும். அதுக்கு வேல்முத்து அனுமதிக்கப் போவதில்லை. அதுக்கு ஒரு சண்டை இருக்கிறது.

இரண்டுபேரும் போனதும் பரிமளா முத்துவை விட்டுவிடுவாள். அவளால் இடுப்பு வளைஞ்சு எந்தக் காரியமும் செய்ய முடியாது. வேல்முத்து தனியாளாகிப் போய்விடுவான்.

உங்கப்பனை நம்பாதே என்று அம்மா எதற்காகச் சொன்னாள்?

இப்போது வேல்முத்து எப்படி மாறிப்போய்விட்டான்?

சம்மதமாகவே என்னைக் கல்யாணம் கட்டிக் கொடுக்க விரும்புகிறான். மாறித்தான் போய்விட்டான்.

வேணி இருட்டுவதற்குமுன், ஆனந்தின் புன்னகையை ஞாபகப்படுத்திக்கொண்டாள்.



# 15

மறுதினம் காலை ஆனந்த் வராததால், வேணி வண்டி தள்ளிக்கொண்டு கிளம்பும்வரை காத்திருந்து பார்த்தாள்.

பரிமளா வந்து "என்னாடி வளியை வளியை பார்த்துகிட்டே இருக்க? உம் புருசன் வரானா என்றா?" என்று கேட்டாள்.

"பாவா எங்க?"

"ராத்திரி தோஸ்துங்களோடு வெளியே போயிருந்தாரு. லேட்டா வந்தாரில்லை? படுத்துத் தூங்கிட்டு இருக்காரு. நீ போய் கடையைத் தொடங்கி வையி."

"ஒத்தாசைக்கு?" என்றாள், வேணி.

"நான் குட்டியை அனுப்பறேன்."

அதுகூட சவுகரியம்தான். கடையாண்ட ஆனந்தை தனியாகச் சந்திக்கலாம் என்று உற்சாகமாகவே வேணி கிளம்பினாள்.

ஆனந்தைக் காணவில்லை. குட்டி வந்ததும் "அக்கா! அவரு வரலை?" என்றாள்.

"வருவாரு வருவாரு" என்றபோது முனியப்பா வந்தான். "எங்க அவங்கல்லாம்?"

"யாரு?"

"உங்கப்பா, ராசு?"

"பாவா தூங்கறாரு. ராசுவைப்பத்தித் தெரியாது."

"ஆனந்த் வந்தானா?"

"இல்லையே."

"வர்றதா சொல்லிட்டுப் போனானே?"

"எப்ப?"

"காலையில."

"அவரை எங்க வெச்சுப் பாத்திங்க?"

"நாஷ்தாவுக்காக இங்கதான் காத்துகிட்டு இருந்தாப்பல. நீ வரலைன்னு போயிட்டாப்பல."

"அடடா. எப்ப திரும்பி வர்றதா சொன்னாரு?"

"எங்கேயோ டூர் போறதாவோ என்னவோ சொன்னான். சரியா காதில கேட்டு வாங்கிக்கலை."

வேணிக்கு சுருக்கென்றது. டூர் போறாரா? என்னிடம் சொல்லவே இல்லையே. அவசரமாக 'டூர்' வந்திருக்கும். முதலாளி திடீர் திடீர் என்று 'டூர்' அனுப்புவார் என்றுதானே சொல்லியிருக்காரு. இருந்தாலும் அவர் என்னிடம் சொல்லிக்கொள்ளாமல் 'லாங் டூர்' போகமாட்டார். வந்துவிடுவார்.

ஆனந்த் இதோ இதோ என்று நாள் பூராவும் மைதானத்தையும் தார் சாலையையும் பார்த்த வண்ணமே இருந்தாள். யார் யாரோ வந்து போனார்கள். வியாபாரம் எத்தனை ஆச்சு? மிச்சம் மீதாரி உண்டா? எண்ணெய் தேறுமா? தேங்காய் வெங்காயம் வாங்க வேண்டுமா எதையும் கவனிக்காமல் ரோட்டைப் பார்த்த வண்ணமே வாணலியைக் கிளறிக்கொண்டிருந்தாள்.

குட்டியை இஸ்கோலுக்கு அனுப்பிவிட்டு மாலை திரும்பி வரும் போது வரச் சொல்லியிருந்தாள்.

சூரியன் விழுவதற்குள் குட்டியும் வந்தாகிவிட்டது.

ஆனந்த்தான் வரவில்லை. இருட்டும்போது ஓர் இளைஞன் வந்தான். அசப்பில், ஆனந்த் போல இருந்ததால் ஏமாந்துபோய் அவனிடம் "ஏன்யா! உனக்காக எத்தினி நேரம் காத்திருக்கிறதாம்?" என்றாள் வேணி. கிட்டே வந்தபோதுதான் அவன் ஆனந்த் இல்லை என்பது தெரிந்துபோய் நாக்கைக் கடித்துக்கொண்டு "சாரிங்க" என்றாள்.

அவன் "பரவாயில்லை! ஒரு நிமிஷம், நீங்க சொன்னதை நம்பக்கூட நம்பிட்டேன். நமக்கும் ஒருத்தர் காத்திருக்காங்கன்னு உச்சி குளுந்து போச்சு. உடனே கலைச்சுட்டிங்க, பரவாயில்லை."

"அய்யா! உங்களுக்கு மைதானத்தில் ஆனந்து என்கிறவரைத் தெரியுமா?"

"வெட வெடன்னு மீசை வெச்சுகிட்டு?"

"ஆமா. டிரைவர்."

"டிரைவரா? எனக்குத் தெரியாதுங்க. நான் சொல்ற ஆளு டிரைவர் இல்லை."

"பேர் ஆனந்தா?"

"பேர் ஆனந்தா இருக்கலாம்."

அவன் அவளுடன் தொடர்ந்து பேசும் சந்தர்ப்பத்துக்காக இப்படியெல்லாம் பதில் தருகிறான் என்பது வேணிக்கு விளங்கிட, "சரிங்க" என்று வெட்டிக்கொண்டாள்.



குட்டியுடன் வீட்டுக்குத் திரும்பியபோது இன்னமும் வேல்முத்து தூங்கிக்கொண்டிருந்தான்.

"அதென்னவோம்மா, உங்கப்பன் நாள் பூரா தூங்கறான்" என்றாள் பரிமளா.

"உடம்பு சரியில்லையோ?"

"அப்படியெல்லாம் இல்லை. சோம்பேறித்தனம், அவ்வளவுதான்."

தூக்கத்தில் எழுந்து புரண்டு படுத்து விழித்த வேல்முத்து கைக் கடிகாரத்தைப் பாாத்து "என்ன மணி ஆறுதானா?" என்றான்.

"ஆமா, சாயங்காலம் ஆறு."

"அய்யோ" என்று எழுந்து வேணியைப் பார்த்தான். "வேணி! அவன் வந்தானா?"

"யாரு?"

"ஆனந்த்."

"வரலையே. ஏன்யா, ராத்திரி பூரா எங்க போயிருந்தீங்க, குடியா? சீட்டா? இல்லை வேற எங்கயாவதா?" பரிமளா கேட்டாள்.

"வேற எங்க? என்ன சொல்றே?"

"ஆளை ஏன் ஒண்ணரை மணி வரையிலும் காணுமே?"

"ஜோலி இருந்தது."

"ஜோலி. ராத்திரியில."

"என்னா ஜோலி. ராத்திரியில."

"செகண்டு ஷோ போயிருந்தோம்."

"ஒண்ணு கெடக்க ஒண்ணு எதாவது சொல்லு. எனக்கென்னவோ நீ சிக்கபேட்டை தேவடியாளுங்களைத் தேடிக்கிட்டு போயிருப்பன்னு தோணுது."

"வீட்டிலேயே ஒண்ணு போதாதா?"

"என்னா சொன்னே?"

"ஒண்ணுமில்லை."

"உனக்கு மாடா உளைச்சு உம்புள்ளையைப் பெத்ததுக்கு பட்டம் கொடுக்கிறாயா? இம்மா நேரமாகும்யா, இம்மா நேரம்?"

"பொலம்பாதே. வேணிக்கண்ணு, வியாபாரத்தைப் பாத்துக்கிட்டியா. இன்னைக்கு? ஒண்டியா நீ இல்லாம நான் எப்படிம்மா இருக்கப் போறேன்? ஆனந்து வந்து கொத்திக்கிட்டு போகப் போறானே. ஆத்து ஆத்து போகுது எனக்கு."

"வரட்டும் அவரு."

"ஏன் அப்படிச் சொல்ற?" என்றான் கவலையுடன்.

"காலையோ, இல்லை மாலையோ கட்டாயம் வந்து பார்க்கறன்னு சொல்லிட்டு, நாள் பூரா வரலை பாவா, இந்தாளு."

"போய் வெசாரிக்கலாம்."

"வெசாரிக்கலாம்னா பாழாப்போன வெலாசத்தை சொல்லித் தொலைச்சிருந்தாலும் பரவால்லை."

"எடம் தெரியுமில்லை?"

"அதுவும் தெரியாது, பாவா."

"நல்லா காதல் பண்ணிருக்க நீ."

"காதலுக்குக் கண்ணில்லைங்க" என்றாள் பரிமளா.

"நீ முன்ன பின்ன பண்ணியிருந்தாத்தானே தெரியும்?"

"உன்னைக் காதல் பண்ணதில்லையா நானு?"

"என்ன காதல் பண்ணின, ராப்பகலா? புள்ளையைக் கொடுத்த என் பருவமெல்லாம் போச்சு. கண்ணாடி பாத்தா பயமா இருக்குது."

"வேணி. ஓர் பாட்டில் நம்பர் டென் வாங்கியாந்துரு. மசால் வடை பாக்கி ஒண்ணு ரெண்டு இருக்குதில்லை, லேசா ஒரு அடி அடிச்சுட்டுப் படுத்துர்றேனே."

"உனக்கு என்னவோ ஆயிருச்சுய்யா" என்றாள் பரிமளா.

"சும்மாரு" என்று அதட்டினான்.

"இதென்ன மூட்டை?" என்றாள்.

"அது முனியப்பாது, தொடாத" என்று பிடுங்கிக்கொண்டான். அவசரமாக கொசகொசவென்று கட்டப்பட்டிருந்த துணி மூட்டை அது.

வேணிக்கு ராத்திரி படுத்துக்கொண்டபோது கலவரமாக இருந்தது. இனம் தெரியாத பயம் வயிற்றைப் பிசைந்தது. காலையில் ஆனந்த் வரவில்லையென்றால் தேடிக்கொண்டு சதாசிவ நகர் போய்விடலாம்.

"வந்துருவாக்கா. நான் வேணா போய்ப் பார்க்கவா?" என்றாள் குட்டி, மறுதினம் காலை.

"விலாசம் தெரிஞ்சா நானே போய்ப் பார்க்க மாட்டனாடி. பைத்தியம்."

"சதாசிவ நகரை ஒரு ரவுண்டு அடிச்சுரலாம். வீடு முகப்பு ஞாபகம் இருக்குமில்லை."

"இருக்கு."

காலை பரிமளா வெளியே போயிருக்கும்போது, வேல்முத்து இன்னமும் தூங்கிக்கொண்டிருந்தான். ஏதோ ஜுரம்தான் போலிருக்கிறது.

குட்டியை அழைத்துக்கொண்டு சுபாஷ் நகர் பஸ் ஸ்டாப்பில் பஸ் பிடித்து சதாசிவ நகரில் காவேரி தியேட்டராண்டை இறங்கிக் கொண்டார்கள். அங்கிருந்து இடப் பக்கம் திரும்பி மெல்ல நடந்தார்கள்.



இருட்டில் வந்தேனா, எந்த சந்தில நுழைஞ்சோம்னு ஞாபகமே இல்லை."

"இந்தப் பக்கமா? எதிர்ப்பக்கமா?"

"அதுகூட சரியா ஞாபகம் இல்லை."

"அந்த மெயின்ரோடா?"

"இல்லை அதிலருந்து ஒரு தெருவில திரும்பினோம். அது ஞாபகம் இருக்குது."

பள்ளிப் பிள்ளைகள் ஆரஞ்சு வண்ண சீருடை அணிந்து கும்பலா ய் போய்க்கொண்டிருந்தார்கள். போகன்வில்லா மலிந்த பார்க்கில் ஒரு பசுமாடு சுவரின்மேல் முதுகு தேய்த்துக்கொண்டிருக்க, சிமெண்ட் பெஞ்சில் தாத்தா ஒருவர் பேப்பர் படித்துக்கொண்டிருந்தார்.

"இந்த வீடா?"

"அவுட் அவுஸ்போல இருக்கும்டி."

"எல்லா வீட்டிலயும்தான் இருக்குது."

"மேடு ஏறினாப்ல ஞாபகம்."

"ஏரி தெரிஞ்சுதா? தண்ணி?"

"பார்த்ததா ஞாபகமில்லை, அப்ப."

"அப்ப இங்கயாகத்தான் இருக்கும். இங்கதான் இருக்கணும். மொத்தம் எத்தனை வீடு இருக்குதோ? ஒவ்வொண்ணா பார்த்துரலாம். என்ன?"

குட்டியின் உற்சாகம் அவளுக்கு பலம் கொடுத்தாலும், வயிற்றில் இருந்த திகில் அவளுக்கு விலகவே இல்லை.

"ஆனந்த் ஏமாற்றிவிட்டானா?"

"சே, அப்படிப்பட்ட ஆள் இல்லை."

"அக்கா! ஐஸ்கிரீம் அக்கா!"

"காலைலயா? வேண்டாம். தொண்டை கட்டிக்கும். ஆனந்தைக் கண்டுபிடி. முப்பது நாளைக்கும் ஐஸ்கிரீம் வாங்கித் தருவேன்."

"அட்ரஸ் இல்லாமே கண்டுபிடின்னா எப்படி? இவரை வேணா விசாரிச்சுப் பார்க்கலாமா, அய்யா, இங்க ஆனந்துன்னு ஒரு டிரைவரு மாருதி ஓட்டிக்கிட்டு வருவாரே."

"நேராப் போய் பீச்சாங்கைப் பக்கம் திரும்பு. கொயம் வரும். பக்கத்துல."

# 16

நடுத்தெருவில் வேணியும் குட்டியும் நின்றுகொண்டிருக்க –

'சாங்கே' குளத்தில் கலர் கலராகப் போட்டு ஓட்டிக் கொண்டிருந் தார்கள். கரையோரமாக கார்கள் விரைந்துகொண்டிருக்க, அத்தனை வீடுகளும் ஆனந்தின் வீடு போல தோன்றின. இதில் எங்கேயென்று ஆனந்தைத் தேடுவது?

"அக்கா, இதோ பாரு மாருதி!"

"அட, இந்த மாதிரி காரு இந்த ஏரியாவில ஏராளத்துக்கு இருக்குது குட்டி."

"அப்ப ஆனந்து வரமாட்டாரா?"

"வந்துருவாரு."

"பணம் வாங்கிவரப் போயிருக்காரா?"

"எதுக்கு?"

"கல்யாணத்துக்கு."

"முதல்ல அவர் வரட்டும் குட்டி." பாஷ்யம் வட்டத்தில் மரத்தடி யில் பிள்ளையாரை மனசுக்குள் கேட்டுக்கொண்டாள். "அய்யா, பிள்ளையாரே! அவரு கடவுள் நம்பிக்கை இல்லைன்னு சொன்னாலும் நான் நம்பறேன். எப்படியாச்சும் எங்க ரெண்டு பேத்தையும் சேத்துரு."

திரும்பி வீட்டுக்குப் போனபோது பரிமளா "என்னாடி எங்க உன் ஆனந்து?"

"இன்னும் அவரைக் காணம்."

"வருவான், வருவான்! வராம எங்க போறான்? உன் ஞாபகம் வந்தா வந்துருவான். எங்கயாச்சும் டிரிப்புன்னு போயிருப்பான்" என்றாள் பரிமளா.

கோவிந்தராசு கழுத்தில் துண்டு சுற்றிக்கொண்டு, தலையில் கம்பளி முண்டாசு கட்டிக் கொண்டு வந்து "என்ன பரி, வேல்முத்து எங்க?" என்றான்.

"தூங்கறாரு."



"இன்னும் எழுந்திருக்கலை?"

"ஒருக்கா எந்திரிச்சாரு. சாப்பிட்டாரு. திரியும் படுத்துக்கிட்டாரு."

"ராத்திரி தண்ணி அதிகமோ?"

"அப்படி ஒண்ணுமில்லையே. உங்க கூடத்தான் இருந்தாப்பல."

"அந்தப்பய ஆனந்து வந்தானா? வேணிக்கண்ணு! எப்படிம்மா இருக்கிறே? உன்னைக் கல்யாணம் கட்டிக்க அத்தனை தவிப்பா இருக்கிறேன். நீ இந்த அராத்துப் பயலைப்போய் விரும்பறியேம்மா! நாயமா? அது வரலைதானே?"

வேணி பேசாமலிருக்க –

"அவன் ஏன் வரான்" என்றான்.

"வந்துருவாரு."

"வரலைன்னா?" என்றாள் ராசு.

"அந்தப் பேச்சே இல்லை."

"வரலைன்னா என்னைக் கட்டிக்கிறியா? அந்த சான்சையாவது தரியா? காத்திருக்கேன், ஒரு வருஷம். ரெண்டு வருஷம், நீ எத்தனை சொல்றியோ அத்தனை. அதுவரைக்கும் உனக்கு இழைச்சுப்போட நகை பண்ணி சேத்துக்கறேன். அவன் எங்க வரப்போறான்? எனக் கென்னவோ வரமாட்டான்னு தோணுது."

"மூணு மாதம் விட்டுட்டுத்தான் திரும்ப வந்தார்."

"இந்த முறை வரமாட்டான்."

"எப்படி அத்தனை நிச்சயமா சொல்றீங்க?" என்றாள் பரிமளா.

"அவன் அப்படியாப்பட்ட ஆளு."

"எப்படியாப்பட்ட ஆளு? அவரைப்பத்தி உனக்கு இன்னா தெரியும்" என்றாள் வேணி கோபத்துடன்.

"உனக்குத் தெரியாதது எனக்குத் தெரியும், வேணி. அதைச் சொன்னா பொறாமைம்பே. உன்மேல ஆசையினால அப்படி சொல் றேன்பே. ஆனந்து எந்த எடத்தில எப்படியாப்பட்ட சகவாசங்கள்ளாம் வெச்சிருக்கான்னு எனக்கு நல்லாவே தெரியும். வேல்முத்துதான் வெசாரிச்சு வெச்சிருந்தான். உனக்கா ஒரு தடவை தெரிஞ்சுகிட்டா, அப்பறம் ராசு சொன்னது உண்மைதான்னு தெரிஞ்சுப்ப. வரட்டுமா பரிமளா! முத்துவை எழுப்பிரு. தூங்கினது போதும், இனிமே கொண் டாட வேண்டிய வேளைன்னு சொல்லு. புரிஞ்சுப்பாரு."

வேணிக்கு அப்போதே இருட்டாக இருந்தாற்போலத் தோன்றியது. "மணி என்ன" என்றாள்.

குட்டி வீட்டுப் பாடம் எழுதிக்கொண்டிருக்க –

குழந்தை பாயில் படுத்துக்கொண்டு சைக்கிள் ஓட்டுவதுபோல காலை உதறிக்கொண்டிருந்தது.

பரிமளா அவனை எழுப்பப் போய் கழுத்தைத் தொட்டுப் பார்க்க, "சுடுது. காய்ச்சலா?" என்றாள். "ராத்திரி எங்க போயிருந்தீங்க மூணு பேரும்? என்ன எளவத் தின்னிங்க சொல்லுங்க."

வேல்முத்து நடுங்கினான். "மண்ணு மண்ணு" என்று பிதற்றினான்.

வேணி கார்ப்பரேஷன் குழாய்க்குப் போய் பிளாஸ்டிக் குடத்தில் தண்ணீர் நிரப்பிக்கொண்டு வந்தாள்.

இன்னும் எத்தனை நாள்? நாளை வந்துவிடுவார். நிச்சயம், நாளை பொழுது விடிந்ததும் வந்துவிடுவார் என்று வேணிக்குக் கணக்குத் தெரியவில்லை!

குட்டி பள்ளிக்கூடம்போய் பரீட்சை எழுதினபின் அழுது கொண்டே வந்தது.

வேல்முத்துவுக்கு சுரம் வடிந்த மறுபடியும் வந்து மல்லேசுவரம் ஆஸ்பத்திரியில் சீட்டுக் கொடுத்து, ஊசி குத்தினார்கள். ஏதோ விஷ சுரமாம். இதெல்லாம் பரிமாளவுக்குக் கவலை இல்லைபோல அவள் பாட்டுக்கு இஷ்டத்துக்கு சுதந்திரமாக அலைந்து கொண்டிருந்தாள்.

வேணிக்கு எதிலும் கவனமில்லை. வழியையே, தெரு மூலையையே பார்த்துக்கொண்டிருப்பதைக் கூட நிறுத்திவிட்டாள். எப்போதாவது சட்டென்று பார்ப்பாள். ஆனந்த் தோன்றுவான் என்கிற எதிர்பார்ப்புடன்.

ஆனந்த் வரவில்லை. அவன் வீட்டையும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனந்துக்கு பதில் ஒரு நாள் மாலை ஒரு பெண்தான் விசாரித்துக்கொண்டு வந்தாள்.

"ஆமாம்" என்றாள். "நீங்க யாரு?"

"வேல்முத்துங்கறவர்வீடு இதாங்களே?"

அந்தப் பெண் வயசுக்குத் தகுதியில்லாமல் பாவாடை தாவணி. சரியாக மறைக்கவில்லை. பெரிசாக மை தீட்டி, பவுடர் அப்பி கறுப்பாக இருந்தது, பார்த்தாலே 'கேசு' என்று சொல்லும்படியாக.

பரிமளாவுக்கு பிரண்டாக இருக்கும் என்று எண்ணி, "பரிமளா இல்லிங்களே" என்றாள் வேணி.

"பரிமளாவைத் தேடிக்கிட்டு வரலை நானு. இந்த ஆனந்த் வந்தாரா இங்க."

"ஆனந்தா! அவரை எப்படித் தெரியும் உங்களுக்கு?"

"தெரியும்" அவள் கண்கள் அலைந்தன. "வந்தாரா இல்லையா?"

"வரலைங்க."

"எத்தினி நாளா?"

"ஏறக்குறைய பதினஞ்சு நாளா."



வேணியை முதன்முறை முழுசாகப் பார்த்து "உங்கிட்ட பணம் வாங்கினாரா?"

"இல்லை."

"நகை ஏதாவது கொடுத்தாரா?"

"இல்லை."

"இதப் பாரு, ஆனந்து கிட்ட எதாவது சகவாசம் வெச்சுக்கிட்ட, திருகிப் போட்டுருவேன். அந்தாளுக்குக் கல்யாணம் ஆயிருச்சு தெரியுமில்லை? வெளிய ஒரு புள்ளை, வவுத்தில ஒரு புள்ளை இருக்குது" என்று தன் அடிவயிற்றைத் தட்டிக் காட்டினாள். "அந்தாளைக் கல்யாணம் கட்டிக்கிட்ட அப்பாவி நான்தான். அவன் எது கொடுத்தாலும் வாங்காதே. வாய்ச்சாலாக்கா பேசினா எதையும் நம்பாதே. நான் அந்தப் பேச்சைக் கேட்டுத்தான் இந்தக் கதியில இருக்கேன். புருசனையும் காணல. பெத்தவங்க கூடவும் சண்டை. ஆனந்து இங்க வரலைதானே?"

வேணி பதில் சொல்லவில்லை. அவள் கன்னங்களில் இயல்பாகக் கண்ணீர் வடிந்தது.

அந்தப் பெண் வாயிற்படியில் கீழே உட்கார்ந்துகொண்டு ஒப்பாரி வைத்தாள்: "எலுமிச்சம் பழமின்னு ஏந்தினேன் கையாலே இருமனசுக் காரருன்னு எனக்கு இருந்த சனம் சொல்லலியே."

வேணிக்கு பிரமிப்பாக இருந்தது.

அந்தப் பெண் எழுந்துபோனதும், பரிமளாவும் வேல் முத்துவும் ஆஸ்பத்திரியில் இருந்து திரும்ப வந்தார்கள்.

"என்னா சொன்னாங்க" என்று வேணி கேட்டாள்.

"நாற்பது நாளைக்கு தவறாம வரணுமாம். அப்புறம் டபுள் ரோடில கடைசியில இருக்குது பாரு அந்த ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகணுமாம். பயந்திருக்காரு. முனியப்பன் கோயில்ல வெள்ளை கட்டிப் போட்டுட்டு வந்திருக்கேன். அது யாரு?"

"பொம்பளை! ஆனந்தை வெசாரிச்சுக்கிட்டு வந்தது."

"அட அந்தப் பொம்பளை இங்கயும் வந்திருச்சா" என்ற கோவிந்த ராசுவின் குரல் கேட்டது. "வேணி. நான் சொல்லலே, அந்தக் கேஸ்தான். இவ மட்டும்இல்லை, சீராமபுரத்தில இன்னொரு பொம்பளை கதை கதையா சொல்லுது. நல்லவேளை அவங்கிட்ட ஆப்பிட்டுக் காம தப்பிச்ச நீ. உங்கப்பனுக்கு உடம்பு சரியானப்புறம் வெச்சுக்கலாமா?"

வேணி சும்மா இருக்க –

"என்ன வேல்முத்து?" என்றான்.

வேல்முத்து "மண்ணு மண்ணு" என்றான் கொஞ்ச நாளாகவே.

வேல்முத்து அதிகம் பேசவில்லை.

"தனக்குள்ளேயே பேசிக்கொண்டு உள்ளங்கையைப் பார்த்துக் கொண்டு இருக்காரு. தேச்சுக்கிட்டே இருக்காரு. சிலநேரம் பயமாகக் கூட இருக்கு ராசு" என்றாள் பரிமளா.

"அது வந்து ஒரு மாதிரி கிலியில இருக்காரு. எதாவது காத்து கறுப்பு அடிச்சிருக்கும், கொஞ்ச நாள்ள சரியாகப் போயிரும். வேணி! எங்கூட வா. பணம் கேட்டுச்சு உங்கப்பன்."

வேணி அவன் பின்னால் சென்றாள்.

கோவிந்தராசு ஒரு கடையில் நின்று அவளுக்கு ஐஸ்பால் வாங்கிக் கொடுத்தான்.

"எதுக்காக அந்த ஆளையே வெச்சு உருகிக்கிட்டு இருக்க? அவன் வேசம்தான் இப்ப கரைஞ்சு போச்சில்லை?"

"அய்யா! அவரை எப்பனாச்சியும் ஒரு முறையாவது பார்த்துட்டு ஒரு வார்த்தை கேட்டுட்டா சமாதானமாயிரும்."

"பாத்தா. கேட்டா என்ன சொல்வாங்கறே. அவங்க சொல்றதெல்லாம் பொய்யிம்பான்."

"ஏன் இத்தனை? நாளையே கேட்டுறப் போறேன்."

"அதுக்கும் எதாவது ஷ்டாக்கா பதில் வெச்சிருப்பான். கோவா போனேன், பாம்பே போனேன்னு. அவன் வாய்ச்சாலாக்குகாரன், யசவந்தபுரத்தில ஒரு மலையாளப் பொம்பளைய வேற வச்சிருக்கான். குடையைப் புடிச்சுக்கிட்டு அழுதது. கதை கதையா சொல்லிச்சு. இதெல்லாம் சொல்ல வேண்டாம்னு பார்த்தேன். பாரு, உங்கப்பனுக்கும் உடல்நிலை சரியில்லை. குடிச்சுக் குடிச்சு குடல் சல்லடையா இருக்குதுன்னு டாக்டர் சொல்லியிருக்காரு. உங்கப்பன் போயிட்டா பரிமளா உனக்குக் கல்யாணம் கட்டி வெப்பாங்கறே?"

"நீங்க என்ன சொல்றீங்க?"

"உன்னை யாரு வேணி காப்பாத்தப் போறாங்க, சொல்லு? உங்கப்பனா, பரிமளாவா, இந்த கோவிந்தராசுவா, யார் சொல்லு? அதனால நான் சொல்றதைக் கேளு. ஒரு வார்த்தை சொல்லு, 'சரி'ன்னு. அப்புறம் ஆகவேண்டியதையெல்லாம் கோலாகலமா கல்யாணத்தை நடத்துறேன் பாரு: சொல்லு."

வேணி "சரி" என்றாள்.



# 17

**வே**ணி சரி என்று சொன்னதும் ராசு சந்தோசப் பிரவாகத்தில் "அடி சக்கை, இப்பவே வா 'லேக்வ்யூ' போய் எல்லாரும் ஐஸ்கிரீம் சாப்பிடலாம்" என்று அவள் கையைப் பற்றி இழுத்தான்.

"அதுக்குள்ள கையெல்லாம் புடிக்கக் கூடாது" என்றாள் வேணி.

இருவரும் திரும்பும்போது வேணிக்கு கனகாம்பரமும் குண்டு மல்லிகையும் வாங்கிக் கொடுத்தான். இந்தக் கணமே ஒரு சேலை வாங்கித் தருவேன் என்று அடம் பிடித்தான். வேணிதான் வேண்டாம் என்று தடுத்தாள். தனது மடியில் கட்டிவைத்திருந்த கறுப்பு பர்சில் திணித்திருந்த நூறு ரூபாய் நோட்டுகளை அவளிடம் அடிக்கடி காட்டிக்கொண்டான்.

"ஐநூறு ரூபா நோட்டு இருக்கு தெரியுமில்லை?"

"அப்படியா?" என்றாள். சாலையில் நடந்து செல்பவர்களிடம் அந்த முகத்தைத் தேடினாள். ஆனந்தாவது இனி வருவதாவது!

வீட்டுக்குப் போனபோது பரிமளாவை ஏறக்குறைய கட்டிக் கொண்டே விட்டான் ராசு. குட்டியை மேலே தூக்கி பந்தாடினான். வேல்முத்து தாடியும் விபூதியுமாக சாமியார்போல இருந்தான். இன்னமும் "மண்ணு மண்ணு" என்றுதான் சொல்லிக் கொண்டிருந்தான்.

"எப்படி இருக்கிறே வேல்முத்து?"

"மண்ணு."

"இப்பல்லாம் பரவாயில்லை. அடிக்கடி கைகழுவறதை வுட்டுட்டாரு. மருந்து காட்டமா இருக்குதா, அடிச்சுப் போட்டாப்பல தூங்கறாரு. வண்டி தள்ளிக்கிட்டு காலையில போறாரே அதுவே பெரிசு."

"வேணி சம்மதிச்சுருச்சு வேலு!" என்றான் ராசு, உற்சாகமாக.

"அப்படியா?" என்று நிமிர்ந்து வேணியைப் பார்த்தான் வேல்முத்து. அவளுடைய நேர்ப்பார்வையைத் தவிர்க்க கண்களை உடனே தழைத்துக்கொண்டான்.

"அம்மா வேணி! நீ செய்யறது நல்ல காரியம். உங்கப்பன் கடன் தீர சம்மதிச்சிருக்க பாரு, அதை நாங்க எப்பவும் மறக்க மாட்டோம்."

"கடனுக்காக சம்மதிக்கலை. அப்படித்தானே வேணி? என் நல்ல குணம் பார்த்துத்தானே சம்மதிச்ச?"

வேணி "எதுக்காகச் சம்மதிச்சேன்னு எனக்கே தெரியலை" என்றாள்.

"வாங்க எல்லாரும் எம்.ஜி.ரோடு போவலாம். தின்னுட்டு சினிமாப் பார்த்துட்டு வரலாம்."

பஸ் பிடித்து சிவாஜி நகர் போய் பஸ் மாறி எம்.ஜி.ரோட்டின் நியான் விளக்குகளினிடையில் நடந்தார்கள். குட்டி இருக்கிற சட்டையெல்லாம் எனக்கு எனக்கு என்றது. இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் பின்னால் பெண்களை வைத்துக்கொண்டு தடதடவென்று இடிஇடிக்கிறாற்போல சென்றார்கள்.

பெண்கள் பிளாட்பாரத் தடுப்பின்மேல் உட்கார்ந்து கொண்டு, சோளக்கொண்டை கடித்துக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொருமாதிரி அலங்காரம் பண்ணிக்கொண்டே கடந்து செல்லும்போது வாசனை வீசியது.

"இவங்களுக்கெல்லாம் என் பெண்டாட்டி எந்தவகையிலும் குறைஞ்சவ இல்லை" என்றான் ராசு.

வேல்முத்து புதுச்சட்டையிலும் பழைய தாடியிலும் ஒரு மாதிரியாக இருந்தான். ஒரு சந்தர்ப்பத்தில் அவளுடன் தனியாகப் பேச முடிந்த போது "வேணி! என்னை மன்னிச்சுரும்மா. நீ மன்னிச்சாலும் கடவுள் மன்னிக்க மாட்டாரு."

"பாவா, அதையெல்லாம் இனிமே பேசிப் பயனில்லை. இந்தாளு எங்கிட்ட வாக்கு கொடுத்துட்டு வரவே இல்லை. பாத்தீங்களா? பாவா, அதுதான் எனக்கு வருத்தம்."

"யாரும்மா?"

"ஆனந்துதான்."

"ஆனந்து வரமாட்டான்மா" என்று கையைப் பார்த்துக்கொண்டான். "ரொம்ப நாளா அரிக்குது. தேச்சு தேச்சு பிரயோசனமில்லை."

குட்டி இன்னொரு ப்ரூட் சாக்லேட் கேட்டது.

ராத்திரி திரும்பும்போது, ராசு வேணியின் கையைப் பற்றி இழுத்தான்.

"என்னய்யா?"

"வா, நம்ம ரூமுக்குப் போயிரலாம்."

"வுடுய்யா. அப்பறம்."

"அவரைத்தான் கல்யாணம் செய்துக்கப்போற இல்லை. பரவால்லை போம்மா" என்றாள் பரிமளா.



"எங்க போறாங்க?" என்றது குட்டி.

"போய்ப்படு, முண்டை" என்று அவளை பரிமளா திட்ட, வேல்முத்து தன்னைச் சுற்றி எதுவுமே நடக்கவில்லைபோல சுவரை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

கோவிந்தராசு வேணியின் இடுப்பைத் தடவிக் கொடுத்தான். "வந்துரு சந்திரலோகம் போயிரலாம்" என்றான்.

"அப்பொறம்" என்றாள்.

"எப்பொறம்" என்றான்.

"கல்யாணம் ஆனப்புறம்."

கோவிந்தராசுவின் விரல்கள் தைரியம் பெற்று தன்னைப் பல இடங்களில் தடவுவதை வேணி விரும்பாமல் கையை அகற்ற, அவன் பிடிவாதம் அதிகமாயிற்று.

"பரிமளா சொல்லுங்க, இப்ப வேணாம்னு சொல்லுங்க" என்றாள்.

குட்டி புரிந்தும் புரியாமலும் பயந்துபோய் ஓரத்தில் எல்லாவற்றையும் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருக்க –

"பாவா, வேணாம் பாவா" என்று வேணி அழுதாள்.

திடீர் என்று வேல்முத்து எழுந்து "யோவ், அத்தை விடு" என்றான்.

அவன் குரலில் இருந்த வன்முறை ராசுவைத் தயங்க வைத்தது.

"என்ன வேலு?"

"ஆமய்யா. கடன் கொடுத்த. அதுக்காக இந்த மாதிரி அந்தப் பொண்ணை இஷ்டமில்லாதப்ப கட்டாயப்படுத்துவியா? அது என்னா நியாயம்?"

"நாமல்லாம் என்னவெல்லாம் செஞ்சிருக்கோம். ஞாபகம் இருக்கட்டும்."

"கல்யாணம் ஆவட்டும்யா. அப்புறம் எங்க வேணாலும் இழுத்துக் கிட்டுப்போ. என்ன வேணாலும் செய்யி. என்னா பொண்ணு தெரியுமா, அது? அது சாமர்த்தியம் அது அழகு, அந்த ஒழுங்கு உனக்கு வருமா? வாம்மா, வேணி. உன் இஷ்டம் இல்லாம எதும் நடக்காது தெரியுல்லை?" என்று அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

வேணிக்கும் கோவிந்தராசுக்கும் கல்யாணம் புல்டெம்பிள் ரோட்டில் ஒரு கோயிலில் நடந்தது. குடை பிடித்து தலைப்பாகை அணிந்து கொண்டு, பீப்பி வாத்தியத்துடன் ராசு நண்பர்களுடன் வலம் வர, வேணிக்கு கட்டம்போட்ட சேலையும் தாழம்பூ பின்னலுமாக நெற்றியில் சுட்டியெல்லாம் வைத்து அலங்கரித்திருந்தார்கள். துணிப் பந்தலில் பெஞ்ச் போட்டு இருந்தார்கள்.

வேல்முத்து அகலமான அலுமினியப் பாத்திரத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். அதில் சோறு தளதளவென்று பொங்கிக்கொண்டிருக்க, மற்றொரு பாத்திரத்தில் எண்ணெயும் மசாலாவுமாக கோழிக்கறி மிதந்தது.

குட்டி முதன்முறை தாவணி போட்டிருந்தது. பெரிய பெண் போல பேசிக்கொண்டு லிப்ஸ்டிக் தீட்டியிருந்தது.

பரிமளா பெண் வீட்டுப் பக்கம் எல்லாக் காரியங்களையும் கவனித்துக்கொண்டிருந்தாள்.

வேல்முத்து சந்தனத்தை அடிக்கடி கையில் தேய்த்துக்கொண்டிருக்க, கோவிந்தராக பணத்தை வாரியிறைத்து செலவழித்த அந்தக் கல்யாணத்தில் அவன் மனிதர்கள் அதிகம் வரவில்லை. முனியப்பா தான் வந்துவிட்டு மொய் எழுதிவிட்டு காண்டிராக்டுக்குப் போய்விட்டான்.

பிற்பகல் சாப்பாடு முடிந்த கையோடு கல்யாணப் பந்தல் காலியாகிவிட்டது. அவ்வப்போது ஓரிரு நண்பர்கள் வந்து விசாரித்துவிட்டுப்போக, "இன்னா ராக இது எத்தினியாவது" என்று ஒருத்தன் கேட்க, ராக அவசரமாக வேணியைப் பார்த்தான். "அப்படியெல்லாம் கேட்காத நாணா! இது எதாவது தப்பா நெனைச்சுக்கப் போவுது" என்றான்.

நாணா என்பவன் விடுவதாக இல்லை. "இத பாரம்மா, இவன் பொளப்பய, மண்டியாவில எத்தினி வெச்சிருக்கான்னு வொசாரிச்சு பாரு."

"நாணா இப்ப போறியா இல்லையா?"

"உண்மையைச் சொன்னா, அதான் ஆகும். இன்னா, வேல்முத்து. கடனுக்கா பொண்ணை விலைக்கு வித்திட்ட? போயும்போயும் இவனுக்கு வித்தியே! இவன வெச்சு சம்பாதிப்பானே."

ராக நேராக வந்து நாணா என்பவனின் கழுத்துச் சட்டையைப் பிடித்து அவனைத் தரதரவென்று இழுத்து இரண்டு கன்னத்திலும் அடித்துத் துரத்தினான்.

"கத்த அராத்துங்க அராத்து."

வேணியை பரிமளா அன்று ராத்திரிக்கு அலங்கரித்தாள். குட்டியை மரத்தடி கிழவி வீட்டுக்கு அனுப்பிவிட, முன்பக்கம் சுவரோரமாக வேல்முத்து வழக்கம்போல வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்க, தரையில் அகல் விளக்கு வைத்து புதுசாகப் பாய்போட்டு அதில் முழங்காலைக் கட்டிக்கொண்டு வேணி உட்கார்ந்திருக்கும்போது, பந்தாக மல்லிகைப்பூ கொண்டுவந்து ராக சாக்குத்திரையை விலக்கி உள்ளே வந்தான்.

"உன்னை கடைசியில அடைஞ்சுட்டேன் இல்லை!" என்று அவள் அருகில் உட்கார்ந்தான். கையை விலக்கினாள். மறுபடி முழங்காலைக் கட்டிக்கொண்டாள்.



"இப்ப என்ன வெக்கம்!"

"பாவா, பரி எல்லாம் முழிச்சிக்கிட்டு இருக்காங்க."

"அவங்க அப்பவே மரத்தடிக்குப் போயாச்சு. இப்ப நானும் நீயுந்தான்" என்று அவள் சேலையை விலக்கினான்.

"இருங்க."

"நம்ம ரெண்டுபேத்துக்கும் கல்யாணம் ஆயிருச்சி."

"அந்தாளு யாரு!"

"எந்தாளு!"

"மத்தியானம் வந்து சத்தம் போட்டாரே."

"அவனா? அவன் இறுக்கன்."

"என்னைப் பார்த்து நேரா சொல்லு. உனக்கு வேற யாரும் இல்லையே!"

"ஏ, என்ன வேணி நீ! உனக்காகவே நான் கல்யாணம் செய்துக்காம வருசக்கணக்கில காத்துகிட்டு இருந்திருக்கேன்."

"பின்னே அந்தாளு ஏன் அப்படிக் கேட்டான்!"

"அதான் சொன்னேனே, இறுக்கன். அவன் கடன் வாங்கியிருந்தான். கேஸ் கோர்ட்ல போட்டு கடையே அட்டாச்ச பண்ணிட்டேன். அதுதான் கோவம். வேணி! நீ ரொம்ப ரொம்ப சந்தோசமா இருக்கப்போற."

"பாவாவை நெனைச்சா கவலையா இருக்குது. அவரு உடம்பு சரியில்லை. என்னவோ பினாத்தறாரு."

"பயந்திருக்கான். எல்லாம் சரியாயிரும்."

"எதுக்காக பயம்?"

"அப்புறம் வேணா வர்றப்ப சொல்றேன். மண்டியால நம்ம ஊட்ல டிவி எல்லாம் இருக்கு, தெரியுமில்லை?"

வேணியின் கைகளை இப்போது முழுவதும் விலக்கிவிட்டு, அவள் மூடியிருந்த கால்களை விலக்க, அவள் மேல் முகம் பதித்தான்.

அவனிடம் வெளிநாட்டுத் தைலத்தையும் மீறி வியர்வை வீச்சம் இருந்தது. அவன் கைகள் முரட்டுத்தனமாக அவள் மென்மையான உடலில் உலவ –

"வெளக்கை அணைச்சுருங்க" என்றாள்.

வேணி இருட்டில் யாருக்கோ ஏதோ நடப்பதுபோல உணர்ந்தாள். மூச்சுத் திணறியது. கண்களில் இயல்பாகக் கண்ணீர் வடிந்தது. கண்ணாடி வளையல்கள் நொறுங்கின. வேணி தூங்கிப்போய்விட்டாள்.

# 18

**வெ**ள்ளிக்கிழமை மாலை பஸ் ஏறி வேணி தன் கணவன் கோவிந்த ராசுவுடன் மண்டியாவுக்குப் புறப்பட்டாள்.

முத்துவும் பரிமளாவும் குட்டியும் வழியனுப்ப வந்திருந்தார்கள். முனியப்பா ஒரு பெரிய பொட்டலத்தை அவள் கையில் கொண்டுவந்து கொடுத்துவிட்டு "ஒரு நாள் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கலாம்னு எனக்கும் யோசனை இருந்தது, வேணி! இந்த ராசுப்பயல் முந்திக் கிட்டான்" என்றான். "எதாவது தகராறு பண்ணினானா, அடிக்க கிடிக்கச் செஞ்சானா? பேசாம என் வூட்டுக்கு வந்துரு. என்ன ராசு! என் செல்லப் பொண்ணை சரியா வெச்சுப்பியா?" முனியப்பா கேட்டான்.

வேல்முத்துவும் அதற்கு ஆமாம் போட்டான்.

குட்டியைப் பார்க்கத்தான் பரிதாபமாக இருந்தது. குட்டி இப்போது வளர்ந்துவிட்டது. எப்போதும் தாவணி போடத் தொடங்கிவிட்டது. கன்னங்கள் வீங்கிக் கண் சிவந்து அழுதுகொண்டிருந்தாள். "அக்கா! என்னையும் கூட்டிப்போ அக்கா. என்னையும் கூட்டிப் போயிரு அக்கா. இங்க என்னை வேலை வாங்கி நிமித்திருவாங்கக்கா."

"விடுமுறைக்கு வரலாம் குட்டி, எங்கேயும் போகலை நானு. இதோ மண்டியாதான்."

வேல்முத்து வேணியை நேராகப் பார்க்க பயப்பட்டான்.

"பாவா! உன்னை எல்லாரும் என்னதான் சொன்னாலும் நான் உன்னை வெறுக்கலை பாவா" என்றாள் வேணி.

அவன், "வேணி! நான் உனக்கு செய்த தப்புக்கெல்லாம் ரொம்ப திண்டாடப் போறேன்மா. முனிலிங்கசுவாமி என்ன சும்மாவிடாது" என்றான்.

"அதெல்லாம் மறந்து போச்சு வேலு" என்றாள் பரிமளா.

"எம் பொண்ணு எத்தனை அழகா இருக்குது. யோவ்! நீ பண்ண அதிர்ஷ்டம். அந்த ஆனந்து கடைசி வரைக்கும் வரவே இல்லை."

"அவன் வரமாட்டான் பரி, வரவே மாட்டான்" என்றான்



...இப்ப வந்து கேட்டாலும், அய்யா ரொம்ப லேட்டாயிருச்சுன்னு ...விப்போட்டுரலாம்."

"வரமாட்டான்னு சொன்னனில்லை" என்றான் வேல்முத்து.

"எப்படிச் சொல்ற? திடுதிப்புன்னு வந்து கேட்டா?"

"அட, வரமாட்டான்" என்று வேல்முத்துவும் ராசுவும் பார்த்துக் கொண்டார்கள்.

"சரி, சரி. பஸ்சு புறப்படப்போவுது. வேலு! அப்பறம் மண்டியா வரியா?"

"பணம் வாங்க வாரா வாரம் வந்தாகணுமில்லை?" என்றாள் பரிமளா.

"அதுக்குன்னு வரவேண்டாம். நானே அனுப்பிச்சுடுறேன்" என்ற ராசு, பஸ் புறப்பட, வேணியின் அருகில் வந்து உட்கார்ந்துகொண்டு, சிகரெட் பற்றவைத்துக்கொண்டான்.

"பஸ்சுக்குள்ள அடிக்கக் கூடாதுய்யா" என்றாள் வேணி.

"யார் சொன்னா, இது நம்ப பஸ்சு."

"எனக்கு இந்தப் பொகை ஆகாது."

"நீ சொன்னா சரி" என்று அதை வீசி எறிந்தான். வேணிக்கு ...று சந்தோசமாக இருந்தது. இருந்தும் இந்த வேளையிலும் ஆனந்தின் முகம் அவ்வப்போது மனசில் குறுக்கிட்டது. ஆனந்துக்கு என்ன ஆச்சு? ஏன்... வரவில்லை...?

தொடர்ந்து கரும்புத் தோட்டங்களும் நெல்வயல்களுமாக இருந்தது. டிராக்டர்கள் உலாவரும்தெருவில், பஞ்சாயத்துக் கூட்டத்தின் சுவரில் குடும்பக் கட்டுப்பாடு எழுதியிருக்க, தியேட்டரில் ராஜ்குமார் ...ட்டுக்கு காய்ந்த மாலைகள் போட்டிருந்தார்கள். அருகே, மாட்டைப் படுக்க வைத்து லாடம் அடித்துக்கொண்டிருக்க சர்பத் கடையில், பச்சையில் ரோஸ் கலரில் பானங்கள் ததும்பின.

ராசுவும் வேணியும் இறங்கிக்கொண்டார்கள். எதிரே ஒரு காப்பி ...ளப்பில் போய் காப்பி பருகினார்கள். வீட்டிலிருந்து பஸ் நிலையத்துக்கு மாட்டுவண்டி கொண்டுவந்திருந்தார்கள்.

ராசுவுக்கு செல்வாக்கு அதிகமிருந்தது. பல பேர் ராசுவை அடையாளம் கண்டுகொண்டு சிரித்துப் பேசினார்கள்.

ராசுவின் வீடு, ஓடுவேய்ந்து பச்சை பெயிண்ட் பூசப்பட்டிருந்தது. ...கம்பத்தில் கன்றுக்குட்டி கட்டியிருந்தது. அதை மாடு நக்கிக் கொண்டிருந்தது.

"ராசு! ராசு" பெண்கள் எல்லாம் வேணியைச் சூழ்ந்துகொண்டு ...சேலையையும் பின்னலையும் இழுத்துப் பார்த்தார்கள். அவர்கள் பேசும் கன்னடம் கடுமையாக இருந்தாலும், புரிந்தது. எல்லாவற்றிற்கும்

சிரிப்பே பதிலாக வைத்திருந்தாள் வேணி.

"அவ்வா அவ்வா" என்று பலபேர் அழைத்தார்கள்.

நாற்காலி போட்டு உட்கார்த்தி வைத்து முகத்தருகில் மின்விசிறி வைத்தார்கள். சுண்டக் காய்ச்சின பால் கொண்டுவந்து கொடுத்தார்கள்.

அந்தப் பெண் வேணியை கவலையுடன் பார்த்தாள். நிறைய குங்குமத்தில் பொட்டு இட்டிருந்தாள். "நீதானா அது?" என்றாள.

வேணிக்கு எது என்று தெரியவில்லை.

ராசு வந்தபோது எல்லாரும் பெட்டிப் பாம்பாகிவிட்டார்கள்.

வேணிக்கு எந்த அறை கொடுப்பது என்று அவர்களுக்குள் வாக்கு வாதம் நடந்தது.

அந்தப் பெண்ணுக்கு முப்பது வயசிருக்கலாம். பரிமளா போலத் தான் வயசிருக்கும் என்று தோன்றியது. சேலைத்தலைப்பில் சாவிக் கொத்து வைத்திருந்தாள்.

வேணியை அழைத்து என்ன என்னவோ கேட்டாள். சரியாகப் புரியவில்லை. ராசு வந்து, "இப்போதுதான் வந்திருக்கிறாள். தொந்தரவு செய்யாதே" என்றான்.

வேணி அந்தப் பாதியிருட்டுஅறையில் சாப்பிட்டுவிட்டு தரையில் பாய் போட்டு படுத்துவிட்டாள். நேரம் போனது தெரியவில்லை. என்ன என்னவோ கனாக் கண்டாள். ஆனந்து வந்து, "என்ன வேணி? ஒரு நிமிடம் வெயிட் பண்ணமாட்டியா?" என்று கேட்க—

"ஒரு நிமிடம் என்ன? ரெண்டு வருடம் வெயிட் பண்ணினனே ஆனந்து! நீ வரவே இல்லையே" என்றாள்.

"வந்தனே வந்தனே..."

"எப்ப வந்தே?"

"அன்னைக்கு."

"எங்க வந்த?"

"உன்னைப் பாக்கத்தானே வந்தேன். பொய் சொல்ற பாரு, நான் வரல வரலை நான் வரலை என்று!" திருப்பி திருப்பி கேட்டபோது எழுந்திருந்தாள். கரண்ட் போய் மின் விசிறி நின்றிருந்தது. வியர்வை வெள்ளம் கழுத்தில் ஓடியது. கூடத்தில் பேச்சுக்குரல் கேட்டது. கவனித்துப் பார்த்ததில், அது அழுகைக் குரல் போலத் தோன்றியது.

ராசு சமாதானமாக ஏதேதோ பேசுவது கேட்டது.

இரண்டு பேரும் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பது புரியாமல், மெல்ல அவள் அழுவதும் சட்டென்று அவளைப் பிடித்து அடிக்கும் சத்தமும், அவள் "அய்யோ" என்று ஒரு முறை கூவிவிட்டு, தொடர்ந்து அதிகம் சத்தம் போடாமல் அழுவதும் கேட்டது.

வேணிக்கு நடுக்கமாக இருந்தது. சற்று நேரத்தில் அந்த அறை வாசலில் தொங்கிய கண்ணாடி மணிகள் புலம்பின.



...ாவித்தாராக உள்ளே வந்து கதவைத் தாளிட்டான்.

...வணி சட்டென்று கண்களை இறுக மூடிக்கொண்டு, முழங்காலுக்

...இரண்டு கைகளையும் நுழைத்துக்கொண்டு சுருட்டிப் படுத்துக்

...கொண்டாள்.

"வேணி! வேணி" என்று, அவள்மேல் சவுகரியமாகப் படர்ந்தான்.

...கத்தில் தனது சவரம் செய்யாத முகத்தால் தேய்த்தான். அவன்

...ச்சில், சாராயம், சிகரெட் எல்லா வாசனையும் அடித்தது. "வேணி!

...வேணி கண்ணே! என் பொண்டாட்டியே, இனிமே என்ன வெட்கம்?"

என்றான்.

வேணி பதில் பேசவில்லை.

"நான் உன்னை பாக்கணுமில்லை" அவளை லேசாக உலுக்கினான்.

...தன்பின் "ஏய்! எந்திரின்னா என்னா பிகு பண்ணிக்கிட்டு" என்றான்.

வேணிக்கு எழுந்திருக்க வேண்டியது கட்டாயமாகிவிட்டது.

"என்னவாம்" என்றாள்.

"என்னவாம்? தெரியாத மாதிரி கேட்கறதைப் பாரு..."

"என்னவாம்? தெரியாத மாதிரி..."

"யாரு அழுதாங்க."

"கேட்டுருச்சா? எல்லாம் அந்த மூதேவிதான். அப்பறம் சொல்றேன்.

இப்ப அதைப் பத்தி பேசவே வேண்டாம். கொஞ்ச நேரம் ஜாலியா

இருக்கலாம் வா, உட்காரு! உன்னை வெளிச்சத்தில பாக்கணுமில்லை."

"லைட் போட்டா நான் வரலை" என்றாள்.

"லேசா இருக்கட்டும். அட, நான் பார்க்க என்ன வெட்கமாம்?"

"வேண்டாம் வேண்டாம்."

வேணியின் முழங்கால்களைப் பிரித்தான். சேலையை உருவினான்.

அவள் முகத்தைப் பொத்திக்கொண்டாள்.

"முகத்தை மறைச்சுக்க பரவாயில்லை. இதை மட்டும்... இதை மட்டும்..."

"போய்யா வேண்டாம்னா."

"அவ்வளவு சுலபத்தில உன்ன வுட்டுருவாங்களா?" என்று அவளை வீழ்த்தினான், குஸ்தி பயில்வானைப் போல.

அவள் கைகளை தரையில் வைத்து அழுத்தினான். வேணி இந்தப் பக்கம் அந்தப் பக்கம் திரும்ப முயற்சி செய்தாள். அவன், அவள் தலையை நிலைப்படுத்தி, உதட்டில் தன் உதட்டை வைத்து அழுத்தினான். அவள் மேல் படுத்துக்கொண்டான். மூச்சு அழுத்தியது.

வேணி தன்மேல் நிகழ்ந்த அந்தப் படையெடுப்பை, ஆக்கிரமிப்பை இந்த உலகத்தில் கோடிக்கணக்கான பெண்களைப் போல சகித்துக் கொண்டாள்.

அவனது வியர்வையின் ஈரமும், மூச்சின் உஷ்ணமும் தேவையின் அவசரமும் அவள் நெஞ்சை அடைத்தது. எங்கே எப்படி வலிக்கிறது

என்று இனம் காணாத வேதனையை அனுபவித்தாள். கண்களோரம் கண்ணீர் வழிந்தது. வாயைத் திறந்து பெரிசாக மூச்சுவிட்டு, மெல்லிய குரலில் "போதும் போதும்" என்றாள். அந்த மூன்று நிமிடமும் அவளுக்கு மூன்று நாள் போல இருந்தது.

திடீர் என்று, அவன் பாரம் அத்தனையும் விலகி மூச்சுவிட முடிந்தபோது, வேணி அந்தப் பக்கம் திரும்பிப் படுத்துக்கொண்டாள். அழுதாள். கலைந்த உடையைச் சரிசெய்துகொள்வதில் கவனமில்லாமல் மவுனமாக அழுதாள்.

ராசு சற்றுநேரம் மல்லாந்து படுத்திருந்தவன் எழுந்து பானையில் இருந்து தண்ணீரை சரித்துக் குடித்துவிட்டு சன்னலருகே போய் ஒரு சிகரெட் பற்றவைத்துக்கொண்டான்.

விளக்கைப் போட்டுப் போட்டு அணைத்தான்.

"நல்லா இருந்திச்சா?" என்றான்.

வேணி பதில் சொல்லவில்லை.

மறுதினம் காலையில் புதிய சத்தங்களுக்கு எழுந்தாள்.

பறவைகள் கூக்குரல் புதுசாக இருந்தது. தொழுவத்தில் மாடு கத்தியது. கோழி கூவியது. பாத்திரங்கள் சலசலத்தன.

வேணி பக்கத்தில் பார்த்தபோது, ராசு இல்லை.

நிலைப்படியில், அவள் வேணியைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"எழு" என்றாள்.

வேணி எழுந்திருந்தாள். "பல் தேய்க்கணும்" என்றாள்.

"என்ன" என்று புரியாமல் அவள் கேட்க, "பல்லு பல்லு" என்று சாடை காட்டினாள்.

அவள் போய் செம்பில் நீர் கொண்டுவந்தாள்.

"கன்னடா வருமா?" என்றாள்.

"புரியும்" என்று அவள் சிரித்தாள். "நான் யார்" என்றாள்.

"தெரியாது. கொத்தில்லா."

"கொத்தில்லா? ராசு சொல்லலியா? நானு ராசு எண்டத்தி. பெண்டாட்டி..."



# 19

'எண்டத்தி' என்றால் பெண்டாட்டி என்பது வேணிக்குத் தெரியும். இந்தப் பெண் தான்தான் ராசுவுக்குப் பெண்டாட்டி என்று சொன்னது அவளுக்கு அத்தனை அதிர்ச்சி தரவில்லை. ஒருவிதத்தில் நேற்றிரவு சம்பவங்களில் இருந்தே இதை வேணி யூகித்திருந்தாள்.

அந்தப் பெண், வேணிக்கு மிக அருகில் வந்து, "நீதான் என்னைவிட ரொம்ப ரூபவதியோ? உன்னைப்போய்த்தான் என் புருஷன் தேர்ந்தெடுத்தானோ? எனக்கு என்ன குறை? என்னைப் பாரு. நான் பெண்ணில்லையா? எனக்கிருக்கிறதுதானேடி உனக்கும் இருக்கு? நீ எதாவது ஸ்பெஷலா வைத்திருக்கிறாயா? சொல். சொல்" என்று அவளை பயமுறுத்தினாள். அருகே வந்தபோது அவள் காளி மாதிரி இருந்தாள். மார்பும் கண்களும் பெரிசாக இருந்தன.

"எனக்கு எதும் தெரியாது. அவரைக் கேட்டுக்க. என்னைத் தொந்தரவு செய்யாதே. நானே நொந்து போயிருக்கிறேன்... போதாக்குறைக்கு நீ வேற" என்றாள் வேணி.

"உனக்கு என்ன இருக்கிறதுன்னு ரெண்டாம் கல்யாணம் கட்டிக் கொண்டாந்திருக்கான்?"

"தெரியாதுன்னு சொன்னனில்லை, ஆளைவிடு."

அவளருகில் வந்து கன்னத்தைத் தொட்டாள்.

"தொட்டா, பல்லைப் பேத்துருவேன்."

"என்னாடி சொன்னே?"

"எங்கிட்ட அதெல்லாம் வெச்சுக்காதே" என்றாள்.

அப்போது ராசு வந்து அந்தப் பெண்ணைப் பிரித்து அழைத்துச் சென்றான்.

வேணி வெறுப்புடன் வாசல் திண்ணையில் உட்கார்ந்தாள்.

யாரோ ஒரு வேலைக்காரப் பெண் வந்து காப்பித் தம்ளரைக் கொண்டுவந்து அவள் அருகில் வைத்தாள். அவள் அதைத் தள்ளினாள். அந்தப் பெண் பயந்துபோய் ஓடி மறைந்தாள்.

சற்று நேரத்திற்குப் பின் ராசு வந்தான். "என்ன கோபமாம்?

"காப்பி குடிக்க மாட்டியா?"

"என்னையும் எங்கப்பாவையும் எப்படி ஏமாத்திருக்கீங்க" என்றாள்.

"என்ன ஏமாத்தினனாம்?"

"உங்களுக்குக் கல்யாணம் ஆயிருச்சு என்கிறதை சொல்லவே இல்லையே?"

"சொல்லலையா? இதென்ன பொல்லாப்பு... உங்கப்பனுக்கு நல்லாவே தெரியும். நானே சொல்லியிருக்கிறேன். பரிமளாவுக்கும் தெரியும்."

"எனக்குத் தெரியாம பண்ணிட்டாங்களே."

"அவங்க சொல்லலைன்னா நான் என்ன செய்யறதாம்?"

"இப்படின்னு தெரிஞ்சிருந்தா நான் கல்யாணத்துக்கு சம்மதிச்சிருக்கவே மாட்டேன்."

"இப்ப என்ன ஆயிருச்சாம்?"

"என்னய்யா இப்படி கேக்கறே. ரெண்டு கல்யாணம் பண்ணிக்கிட்டுருக்கே எங்கிட்ட சொல்லாம என்னை ஏமாத்தி கொண்டாந்திருக்க. நான் மாட்டேன். என்னை எங்க வீட்டில கொண்டு வுட்டுரு. எனக்கு இதில இஷ்டம் இல்லை. எனக்கு கொஞ்சம் கூடப் பிடிக்கலை. அடுத்த பஸ்சு எப்பன்னு பார்த்து கொண்டு விட்டுரு."

"அவ்வளவு சுலபமில்லை கண்ணு."

"என்னா பண்ணுவே, நான் ஓடிப்போயிருவேன்."

"அதுவும் சுலபமில்லை வேணி. எதுக்காக அனாவசியத்துக்கு அல்லாடறே? ரெண்டு பெண்டாட்டியா இருந்தா என்ன வந்தது உனக்கு? எதுத்தாப்பல இருக்குது பாரு ஒட்டு வீடு, அதுவும் நம்மது தான். அங்க உன்னை தனியா வெக்கிறேன். கூடமாட வேலை செய்ய ஆள் தர்றேன். டிவி, பேன், ஐஸ் பொட்டி எல்லா வசதியும் இருக்குது. நீ பாட்டுக்கு சும்மா வேளா வேளைக்கு தின்னுகிட்டே கிட. பாலு தயிரு எல்லாம் நெறையவே இருக்குது. கரும்பு ஏராளமா இருக்குது. எல்லா வசதியும் இருக்குது. அந்த மூதேவிகூட பேசவே வேணாம். நீ பாட்டுக்கு ஜம்முன்னு இரு. உனக்கு என்ன குறை? எனக்கு ரெண்டு கல்யாணமா இருந்தா என்ன, மூணு கல்யாணமா இருந்தா என்ன? வாரத்துக்கு ஒருமுறை கூட உன்னை தொந்தரவு செய்ய மாட்டேன். இதைவிட சுகவாசம் உனக்குக் கிடைக்குமா? யோசிச்சுப்பாரு?"

வேணி அவன் சொன்னதை எதையும் கவனிக்காமல் "போய்யா" என்று எரிந்து விழுந்துவிட்டு, தன் பெட்டி படுக்கைகளை சேகரிக்க ஆரம்பித்தாள்.

"என்னாது; நான் சொல்லிக்கிட்டே வர்றேன். அவ்வளவு திமிரா உனக்கு? டேய் கேஞ்சா" என்று கறுப்பாக ஒரு மாட்டுக்காரப் பையனைக் கூப்பிட்டான்.



...ஊமை போல இருந்தான். நேராக வாசலை மறைத்துக் ...டு சிரிப்பில்லாமல் அவளை முறைத்துப் பார்த்தான். ...க்கு பயமாக இருந்தது.

"...னே போ" என்றான் ராசு.

"...ட்டேன்."

"...னே போ" என்று தன் மேல்துண்டை முண்டாசு கட்டிக்கொண் ... ராசு.

"...ய்யா பண்ணுவே. அடிக்கத்தானே செய்வ. அடி பரவால்லை" ...றாள் வேணி.

"அடிக்க மாட்டேன்" என்று சொல்லிவிட்டுப் போனான், ராசு.

அந்த கேஞ்சா என்கிறவன் வாசலில் கண்காணிப்பாக உட்கார்ந் ...தான்.

அந்த வேலைக்காரப் பெண் மறுபடி காப்பி கொண்டுவந்தது. வேணிக்கு அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது. தரையில் உட்கார்ந்து கொண்டு அழுதாள். அவள் அழுவதையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு, அந்தப் பெண் "அக்கா காப்பி" என்றது. அதன் முகத்தில் அனுதாபம் உண்மையாக இருந்தது. "அண்ணன் ரொம்ப நல்லவரு" என்றது.

ராசுவைத்தான் சொல்லியிருக்க வேண்டும். அந்தப் பெண்ணின் பெயர் மாதவியாம். பல்லாங்குழி எடுத்து வந்து "ஆடலாமா?" என்றது. சினிமா பாட்டு பாடிக் காட்டியது. எத்தனையோ விதங்களில் வேணியை சந்தோசப்படுத்த முயற்சி செய்தது.

வேணி முதல் தினம் ராத்திரி வரைக்கும் பட்டினியாகவே இருந்தாள்.

ராத்திரி ராசுவின் முதல் மனைவி பால் கொண்டுவந்து கொடுத்தாள். தரையில் வைத்துவிட்டு, வேணியை தலையைத் தடவிக் கொடுத்துவிட்டுப் போனாள். "நாம் இரண்டு பேரும் ஒற்றுமையாக இருக்கலாம்" என்றாள்.

"எனக்கு ஓர் உதவி செய்வாயா?" என்றாள் வேணி கண்ணைத் துடைத்துக்கொண்டு.

"என்ன?"

"எப்படியாவது எனக்கு ராசுவுக்கு தெரியாமல் பஸ் டிக்கெட் வாங்கிக் கொடுத்துவிடு. பங்களூருக்கு பஸ் ஏற்றிவிடு."

"அய்யோ! ராசு என்னைக் கொன்றுவிடுவார்."

"உங்கபேரு என்ன?"

"ரத்னம்மா."

"ரத்னம்மா! ராசுவுக்கு கல்யாணம் ஆகியிருக்கிறது எனக்குத் தெரியவே தெரியாது. எங்கப்பாவுக்குக் கடன் கொடுத்து அதை

காப்பி குடிக்க மாட்டியா?"

"என்னையும் எங்கப்பாவையும் எப்படி ஏமாத்திருக்கீங்க" என்றாள்.

"என்ன ஏமாத்தினனாம்?"

"உங்களுக்குக் கல்யாணம் ஆயிருச்சு என்கிறதை சொல்லவே இல்லையே?"

"சொல்லலையா? இதென்ன பொல்லாப்பு... உங்கப்பனுக்கு நல்லாவே தெரியும். நானே சொல்லியிருக்கிறேன். பரிமளாவுக்கும் தெரியும்."

"எனக்குத் தெரியாம பண்ணிட்டாங்களே."

"அவங்க சொல்லலைன்னா நான் என்ன செய்யறதாம்?"

"இப்படின்னு தெரிஞ்சிருந்தா நான் கல்யாணத்துக்கு சம்மதிச்சிருக்கவே மாட்டேன்."

"இப்ப என்ன ஆயிருச்சாம்?"

"என்னய்யா இப்படி கேக்கறே. ரெண்டு கல்யாணம் பண்ணிக்கிட்டுக்கே எங்கிட்ட சொல்லாம என்னை ஏமாத்தி கொண்டாந்திருக்க. நான் மாட்டேன். என்னை எங்க வீட்டில கொண்டு வுட்டுரு. எனக்கு இதில இஷ்டம் இல்லை. எனக்கு கொஞ்சம் கூடப் பிடிக்கலை. அடுத்த பஸ்சு எப்பன்னு பார்த்து கொண்டு விட்டுரு."

"அவ்வளவு சுலபமில்லை கண்ணு."

"என்னா பண்ணுவே, நான் ஓடிப்போயிருவேன்."

"அதுவும் சுலபமில்லை வேணி. எதுக்காக அனாவசியத்துக்கு அல்லாடறே? ரெண்டு பெண்டாட்டியா இருந்தா என்ன வந்தது உனக்கு? எதுத்தாப்பல இருக்குது பாரு ஓட்டு வீடு, அதுவும் நம்மது தான். அங்க உன்னை தனியா வெக்கிறேன். கூடமாட வேலை செய்ய ஆள் தர்றேன். டி.வி., பேன், ஐஸ் பொட்டி எல்லா வசதியும் இருக்குது. நீ பாட்டுக்கு சும்மா வேளா வேளைக்கு தின்னுகிட்டே கிட. பாலு தயிரு எல்லாம் நெறையவே இருக்குது. கரும்பு ஏராளமா இருக்குது. எல்லா வசதியும் இருக்குது. அந்த மூதேவிகூட பேசவே வேணாம். நீ பாட்டுக்கு ஜம்முன்னு இரு. உனக்கு என்ன குறை? எனக்கு ரெண்டு கல்யாணமா இருந்தா என்ன, மூணு கல்யாணமா இருந்தா என்ன? வாரத்துக்கு ஒருமுறை கூட உன்னை தொந்தரவு செய்ய மாட்டேன். இதைவிட சுகவாசம் உனக்குக் கிடைக்குமா? யோசிச்சுப்பாரு?"

வேணி அவன் சொன்னதை எதையும் கவனிக்காமல் "போய்யா" என்று எரிந்து விழுந்துவிட்டு, தன் பெட்டி படுக்கைகளை சேகரிக்க ஆரம்பித்தாள்.

"என்னாது; நான் சொல்லிக்கிட்டே வர்றேன். அவ்வளவு திமிரா உனக்கு? டேய் கேஞ்ச்சா" என்று கறுப்பாக ஒரு மாட்டுக்காரப் பையனைக் கூப்பிட்டான்.



...மை போல இருந்தான். நேராக வாசலை மறைத்துக் ...சிரிப்பில்லாமல் அவளை முறைத்துப் பார்த்தான்.

...க்கு பயமாக இருந்தது.

...னே போ" என்றான் ராசு.

...ட்டேன்."

...னே போ" என்று தன் மேல்துண்டை முண்டாசு கட்டிக்கொண் ...ராசு.

...ய்யா பண்ணுவே. அடிக்கத்தானே செய்வ. அடி பரவாயில்லை" ...வேணி.

...மாட்டேன்" என்று சொல்லிவிட்டுப் போனான், ராசு. ...கேஞ்ச்சா என்கிறவன் வாசலில் கண்காணிப்பாக உட்கார்ந் ...

அந்த வேலைக்காரப் பெண் மறுபடி காப்பி கொண்டுவந்தது. ...க்கு அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது. தரையில் உட்கார்ந்து ...ண்டு அழுதாள். அவள் அழுவதையே பார்த்துக் கொண்டிருந்து ...டு. அந்தப் பெண் "அக்கா காப்பி" என்றது. அதன் முகத்தில் ...தாபம் உண்மையாக இருந்தது. "அண்ணன் ரொம்ப நல்லவரு" என்றது. ராசுவைத்தான் சொல்லியிருக்க வேண்டும். அந்தப் பெண்ணின் ...ர் மாதவியாம். பல்லாங்குழி எடுத்து வந்து "ஆடலாமா?" என்றது. ...மா பாட்டு பாடிக் காட்டியது. எத்தனையோ விதங்களில் வேணியை சந்தோசப்படுத்த முயற்சி செய்தது.

வேணி முதல் தினம் ராத்திரி வரைக்கும் பட்டினியாகவே இருந்தாள்.

ராத்திரி ராசுவின் முதல் மனைவி பால் கொண்டுவந்து கொடுத்...ள். தரையில் வைத்துவிட்டு, வேணியை தலையைத் தடவிக் கொடுத்துவிட்டுப் போனாள். "நாம் இரண்டு பேரும் ஒற்றுமையாக இருக்கலாம்" என்றாள்.

"எனக்கு ஓர் உதவி செய்வாயா?" என்றாள் வேணி கண்ணைத் துடைத்துக்கொண்டு.

"என்ன?"

"எப்படியாவது எனக்கு ராசுவுக்கு தெரியாமல் பஸ் டிக்கெட் வாங்கிக் கொடுத்துவிடு. பங்களூருக்கு பஸ் ஏற்றிவிடு."

"அய்யோ! ராசு என்னைக் கொன்றுவிடுவார்."

"உங்கபேரு என்ன?"

"ரத்னம்மா."

"ரத்னம்மா! ராசுவுக்கு கல்யாணம் ஆகியிருக்கிறது எனக்குத் தெரியவே தெரியாது. எங்கப்பாவுக்குக் கடன் கொடுத்து அதை

அவர் திருப்பித் தர முடியாமல், என்னை ஏறக்குறைய விற்றிருக்கிறார். என் சம்மதமே கேட்கவில்லை."

"அய்யோ பாவம்" என்று வேணியின் தலையை அனுசரணையாகத் தடவிக் கொடுத்தாள். ராத்திரி தன் படுக்கையருகே படுக்கை போட்டாள். முகத்தைத் துடைத்து பவுடர் கொடுத்து புதிய சேலை கொடுத்து அலங்காரம் செய்தாள். "மகாலட்சுமி மாதிரி இருக்கிறே. பதினெட்டு வயசுகூட இல்லைதானே?" கேட்டாள்.

"தெரியாது."

"எனக்குப் பிள்ளை பொறக்கலை. உனக்காவது பிள்ளை பொறக்கும்னுட்டுதான் கல்யாணம் கட்டிக்கொண்டு வந்திருக்கிறான்."

"ரத்னம்மா! என்னை எப்படியாவது பஸ் ஏற்றி அனுப்பிவிடுங்கள்."

ராத்திரி டிராக்டர் சத்தம் கேட்டது. வாசல் பந்தலில் சாய்வு நாற்காலி போட்டு ராசு காலை நீட்டிக்கொண்டிருக்க, சிலர் கை கால் பிடித்துவிட்டார்கள்.

"இன்னிக்கு எப்படி நம்ம ரெண்டாவது பெண்டாட்டி மூடு?" என்றவன் –

"ஏய் வேணி! எங்கிருக்கே?" என்று குரல் கொடுக்க –

ரத்னம்மா "கூப்பிடுறாரில்லை, போ" என்றாள்.

"நீங்களும் வாங்க."

இரண்டு பேரும் வாசலை விட்டு வெளியே வருவதைப் பார்த்து ராசு ஆச்சரியத்துடன் "அட, அதுக்குள்ள இரண்டு பேரும் சேர்ந்துட்டீங்களா? ஒரு வாரமாவது ஆகும்னு நெனைச்சேன். மூதேவி உனக்கு சொக்குப்பொடி போட்டுட்டாள். இந்தப் பெண்ணுக்கு எப்பேர்ப்பட்ட சாமர்த்தியம் பாரு" என்றான்.

"ரொம்ப சின்னப் பெண்ணு, அய்யா" என்றான், கால் பிடித்துவிட்ட ஒருவன்.

"பெங்களூர் மல்லிகை" என்றான். "வா. வந்து கிட்ட உக்காரு. நீயும் வாடி. இந்தப் பக்கம் ஒரு பெண்டாட்டி, அந்தப் பக்கம் ஒண்ணு."

அதற்குள் குத்தகைக்காரர்களும் காண்ட்ராக்டுகாரர்களும் வந்து விட, வேணியும் ரத்னம்மாவும் திண்ணையில் நிலவில் உட்கார்ந்து கொண்டார்கள். வேணியிடம் ரத்னா மெல்லப் பேசினாள். "இப்பவே, இன்னைக்கே எதும் ஓடிப் போயிராதே! ஒரு வாரம் பொறுத்திரு இப்ப. காவல் அதிகமாகவே வச்சிருக்காரு. கேஞ்ச்சா, கலியா ரெண்டு பேரும் முரட்டுப் பசங்க. அவங்க காவலை விட்டுப் போக முடியாது."

"ராத்திரி?"

"ராத்திரிகூட கண் மூட மாட்டாங்க. ஒரு வாரம் நிச்சயம் கண்காணிப்பாங்க. அதுக்கப்புறம்தான் நீ தப்பிச்சுப் போக முடியும்.



அதுவரைக்கும் சிரிச்சு பேசிக்கிட்டே இரு. பணம்கேட்டு வாங்கி வெச்சுக்க. எதுக்குன்னா, அக்கா கூட, அதான் நானு... என்னை அக்கான்னே கூப்பிடு. எனக்கு சேலை எடுக்கணும்னு எதாவது சொல்லு. இல்லை, நகை கட்டிக்கப் போறன்னு சொல்லு. புது மோகத்தில என்ன கேட்டாலும் கொடுப்பாரு."

"அக்கா! நான் என் கதையைச் சொல்லட்டுமா?"

"காலைல சொல்லு. உன் முகத்தைப் பார்க்கவே பரிதாபமா இருக்கு. அங்கயும் சுகமில்லையா?"

"அம்மா போயிட்டாங்க. அப்பா ரெண்டாம் கல்யாணம் செய்துட்டாரு. தங்கச்சி படிக்குது. நான் படிக்காம இருந்தேன். இப்படி ஆயிருச்சு."

"எவனையாவது நெனைச்சியா?"

"ஆமாம்."

"கண்ல தெரியுது. ஏன் அவனைக் கட்டிக்க முடியலியா?"

"ஆளையே காணம்."

"என்ன பேரு?"

"ஆனந்து."

"என்னடி ரெண்டு பொண்டாட்டிகளும் கிசுகிசுன்னு?"

"என்னடி ரெண்டு பொண்டாட்டிகளும் கிசுகிசுன்னு?"

"இல்லை. உங்களுக்கு டிஷ்டர்பா இருக்குமேன்னு..."

"என்னா பேசிக்கிட்டிருந்தீங்க?"

"சும்மா சினிமாக் கதை சொல்லிக்கிட்டு இருந்தது."

"அவ்வளவுதானே! புருஷனைப் பற்றி அவதூறு இல்லையே?" என்றபடி வேணியின் அருகில் உட்கார்ந்து அவள் முதுகைத் தடவிக் கொடுத்து, "எப்படி நம்ம தேர்வு?" என்றான்.

"உனக்கு என்னய்யா!"

"வேணி! வருத்தம் எல்லாம் தீர்ந்துபோச்சில்லை?"

"வேணிக்கு நகை வேணுமாம்."

"அதுக்கென்ன! நாளைக்கு அம்பாலால் கடைக்குக் கூட்டிப் போ. அப்புறம் நல்லசேலையா எடுத்துக் கொடு."

"பணம் அதுட்டயே கொடுத்துரு, என்ன!"

"சினிமா பேரு என்ன?"

"ஆனந்து" என்றாள் ரத்னம்மா.

வேணி அவளைத் திடுக்கிட்டுப் பார்த்தாள்.

# 20

கேஞ்ச்சா, கலியா இரண்டுபேருக்குள் ஒருத்தன் எப்போதும் வேணியைக் கண்காணித்துக்கொண்டிருந்தான்.

ராசுவின் முதல் மனைவி ரத்னம்மா உதவி செய்கிறேன் என்று சொன்னாளே தவிர, எதுவும் தீர்மானமாகச் செய்யக் காணோம்.

ராசுவைப் பார்க்க ரொம்ப பேர் வந்து போய்க்கொண்டிருந்தார்கள். ராசு வாரத்தில் இரண்டு அல்லது மூன்று முறைதான் அவளை நாடி வந்தான். அவன் தேவைகள் எல்லாம் சுருக்கமாக இருந்ததால், வேணியால் அந்த அசவுகரியத்தை சமாளிக்க முடிந்தது. மற்ற நேரங்களில் வீட்டு ஆட்கள், வேளைக்கு வேளை ஏதாவது தின்னக் கொடுக்க –

உட்கார்ந்து சாப்பிட்டாள் வேணி.

ஆனந்தை மறந்து போகவில்லை. அவ்வப்போது கோல்ப் மைதானமும் தள்ளு வண்டியும் பெங்களூர் மேகங்களும் ஆனந்தின் மாருதி காரின் உள்ளடக்கமும் வாசனையும் அவளை அலைக்கழித்தன. அவுட் அவுசும் ஞாபகம் வந்துகொண்டே இருக்கும்.

ராசு பலமுறை பெங்களூர் போய்விட்டு வந்தபின் "இன்னைக்கு பெங்களூர் போயிருந்தேன்" என்று ராத்திரி சொல்வான்.

"ஏன்யா என்னையும் கூட்டிட்டு போகக்கூடாதா?"

"அதுக்கு இன்னும் வேளை வரலை."

"எப்பதான் வருமாம்?"

"நீ ஓடிப் போயிரமாட்டன்னு எனக்கு நம்பிக்கை வரவரைக்கும்."

"நான் எங்கய்யா ஓடுவேன்? எனக்கு ஓட இடம் ஏது? மாண்டியா இல்லாட்டா, பெங்களூர்."

"எனக்கென்னவோ இன்னும் நம்பிக்கை வரவில்லை."

இதை, மத்தியானம் ரத்னம்மாவிடம் பல்லாங்குழி ஆடிக்கொண்டிருக்கும்போது வேணி சொன்னாள்.

"பொறு பொறு. இவனுக்கு ஒரு புள்ளையைப் பெத்து என் கையில் குடுத்துட்டு அப்புறம் ஓடிப் போயிரு. நானே உனக்கு உதவி



செய்யறேன்!" என்றாள்.

"அப்படியா சேதி!"

காளி கோயில் பண்டிகை வந்தது. காவு கொடுத்தார்கள். கோழி தலையின்றி அபத்தமாக ரத்தக் கோலம் போட்டுக்கொண்டு ஓடியது. டெம்போவில் அம்மனை வைத்து ஜெனரேட்டர் போட்டு, பீப்பி ஊதி விழா எடுத்தார்கள்.

முண்டாசு கட்டின கரிய இளைஞன் வேணியைப் பார்த்துக் கொண்டே, வீர விளையாட்டுகள் எல்லாம் செய்து காட்டினான்.

ராசு எல்லாருக்கும் பரிசு கொடுத்தான்.

அந்த இளைஞன் பேர் மஞ்சு என்றும், ரத்னம்மாவுக்கு உறவு என்றும் தெரிந்தது. அந்த வீட்டில் தங்கினதாகவும் தெரிந்தது.

மஞ்சுவிடம் "என்ன சோக்கா இருக்குது பாத்தியா?" என்றாள் ரத்னம்மா.

மஞ்சு வேணியைப் பார்த்து "ஆமா ஆமா" என்றான்.

ராத்திரி, வேணிக்கு சொம்பில் பாலும் பச்சைவாழைப் பழமும் கொண்டு வந்து கொடுத்து, திண்ணையில் உட்கார்ந்தான் மஞ்சு.

"என்ன பயப்படறே? ராசுவுக்கு எம்மேல நம்பிக்கை. ஒண்ணும் சொல்ல மாட்டாரு எங்கூட பேசலாம்."

"உனக்கு எந்த ஊரு?"

"கோலாரு. திருவிழாவுக்கு வந்தேன். எங்கப்பாவுக்கு உடம்பு சவுகரியமில்லை. மூணு வருசமா நான்தான் வர்றேன். உன்னைப் பார்க்கவும் இனிமே அடிக்கடி வரலாம்னு எனக்குத் தோணுது. எங்கபோய் உன்னப் புடிச்சாரு, ராசு? ஆச்சரியமா இருக்குது, நானும் ஊர் ஊரா தேடிக்கிட்டு இருக்கேன். ஊகூம், ஏதும் கிடைக்கலை."

வேணி சிரிக்காமல் இருந்தாள். "உனக்கு எதும் சங்கடமா?"

"எதில?"

"என்கூட பேசறதில. பதில் சொல்ல ராசு அண்ணன்கிட்ட பர்மிசன் வாங்கணுமா? அப்படின்னா, அவர்கிட்ட கேட்டுரலாம் என்ன?"

"இதற்கும் சிரிக்க மாட்டியா?" என்றான் ஒரு மாதிரி.

இவர்கள் எல்லாருமே ஆனந்த் மாதிரிதான் பேசுகிறார்கள். இதுதான் தந்திரம் போலும்.

இவனைப் பயன்படுத்தினால் என்ன என்று அவளுக்கு சட்டென்று தோன்றியது.

"மஞ்சு" என்றாள்.

கிளம்ப இருந்த மஞ்சு, ஆச்சரியமாக திரும்பிப் பார்த்தான்.

"என்னையா!"

"ஆமாம். உங்களைத்தான். எனக்கு ஓர் உதவி செய்யணும்."

"என்ன?"

"ஒரு கார்டு எடுத்துட்டு வரணும், காலைல."

"அதுக்கென்ன? ராசு அண்ணன் ஒரு கார்டுகூட கொடுக்காமலா வெச்சிருக்காரு?"

"எத்தனையோ காயிதம் போட்டும், ஊர்லருந்து பதில் வரலை. போஸ்ட் ஆவுறதில்லையோன்னு சந்தேகமா இருக்குது. அதுக்காகத் தான் உங்க மூலமா..."

"பெங்களூர் வீட்டிலயே கொண்டுபோய்ச் சேர்ப்பிச்சுர்றேன்" என்றான். "வேற ஏதாவது வேணுமா?"

"நாளைக்குச் சொல்றேன்" என்றாள் புன்னகையுடன்.

"இன்னைக்கு இந்த நம்பிக்கையே போதும்" என்றான். புறப்பட்டு தெருவில் போகும்போதே ஒரு பல்டி அடித்துவிட்டுப் போனான்.

வேணி அவன் போனபின்னும் கொஞ்சநேரம் யோசித்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு கொஞ்சம் பயமாகவும் நம்பிக்கையாகவும் இருந்தது.

மறுநாள் காலை சரியாக மஞ்சு ஆஜராகிவிட்டான்.

வேணி அவனை அழைத்துக்கொண்டு ரத்னம்மா வீட்டுக்குப் போனாள். ரொம்ப பவ்யமாக, "ரத்னம்மா! இந்தாளு நம்பிக்கையுள்ள வரா?" என்று கேட்டாள்.

"மஞ்சுவா? அவன் தங்கமானபிள்ளை."

"இவர்கூட பேசினா ராசு எதும் தப்பா நெனைக்க மாட்டாரே?"

"சேச்சே. ராசுவையே கேட்டுறேன்."

"நீங்க கேட்டு சொல்லுங்க" என்றாள்.

ராத்திரி ராசு படுத்துக்கொள்ள வரும்போது மஞ்சுவோடுதான் வந்தான். "வேணி! ரத்னாகிட்ட சந்தேகம் கேட்டியாமே" என்றவன், மஞ்சுவைத் தட்டிக் கொடுத்து "மஞ்சுவை யாருன்னு நெனைச்சுகிட்டிருக்கே? இவங்கப்பா கோலார்லே பெரிய லாயர். பரம்பரையா இந்தத் திருவிழாவை எடுத்து நடத்தறதால இங்கே வந்தான். பெரிய குடும்பம். மஞ்சு அமெரிக்காவெல்லாம் போவான். அப்படித்தானே மஞ்சு?"

மஞ்சு அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

"மஞ்சுகூட பேசலாமான்னு கேட்டியாம். தாராளமா பேசு. அதில எதும் தப்பில்லை. இந்த வீட்டில பேசறது தப்பில்லை. துரோகம் தப்பு. ஓடிப்போயிர்றது தப்பு" என்றான்.

"ஓடினாகூட, நான் கூட ஓடிர்றேன்" என்று மஞ்சு சிரித்தான். அவன் பார்வையில் கட்டாயமாக சகோதரபாசம் இல்லை.



"மஞ்சுவை பிரதர் மாதிரி நெனைச்சுக்க. உனக்கு பிரதர்ங்க இல்லைல்ல?"

சாயங்காலம் மஞ்சு வண்டி எடுத்து வந்தான். அவனே ஓட்டினான். வேணியை அழைத்துக்கொண்டு மைசூர்ரோட்டில் இருந்த கடைத் தெருவுக்குப் போனான்.

"என்னா வேணும் உனக்கு?" என்றான்.

வேணி தீர்மானித்தாள். "எனக்கு உன்னைத் தவிர எதும் வேண்டாம்யா."

"என்னது திரும்பச் சொல்லு" என்று ஒருமுறை காதைக் குடைந்து தூர்த்துக்கொண்டான்.

"எனக்கு நீ வேணும்" என்றாள், கடையில் இருந்த சன்னல் சாமான்களைப் பார்த்துக்கொண்டு.

"இதுக்கு அர்த்தம் நான் புரிஞ்சுக்கிட்ட அர்த்தம்தானா?"

"அதேதான்" என்றாள்.

"கதை வசனம் போற போக்கு நல்லாயிருக்கே."

"அப்படித்தான்" என்றாள். "அதுக்குத்தான் ராசுகிட்டகேட்டு வெச்சுக்கிட்டேன். உங்கூடபேசலாமான்னு. அவர்தான் பர்மிசன் கொடுத்துட்டாரே."

"இப்ப என்னதான் சொல்ற வேணி?"

"உன்னைத் திருவிழாவில பார்த்தப்பவே எனக்கு ஒரு மாதிரி ஆயிருச்சு. உனக்கும்தானே?"

"எனக்கு வந்து அப்படி..."

"இல்லை. உண்மையை ஒப்புக்க. என்னை ஒரு மாதிரி பார்த்தல்ல. அந்தப் பார்வையிலேயே அர்த்தம் புரிஞ்சுக்கிட்டேன்."

"வேணி, இத பாரு. எனக்குக் கையெல்லாம் நடுங்குது."

"அமெரிக்காவெல்லாம் போகப் போற. இதுக்குப் போய் நடுங்குவியா?"

"நான் அமெரிக்கா போகலை. எல்லாம் புழுகு."

"அப்படியா" என்று சிரித்தாள் வேணி.

"நான் எங்கயும் போவலை."

"ஏன்?"

"இந்த ஒரு வார்த்தை கேட்டப்புறம் நான் எப்படி மண்டியாவை விட்டு போகமுடியும்?"

"எந்த வார்த்தை?"

"உனக்கு என்னைத்தான் வேணும்னே பாரு..."

"என்னவோ வாய் தவறி வந்துருச்சு."

"சில வார்த்தைகள் வாய் தவறி வரும். சிலது மனம் தவறி. இது, மனம் தவறி வந்த வார்த்தை" என்று அவள் கையைப் பற்றினான்.

வேணி பேசாமல் இருந்தாள்.

கையைத் தன் மேல் வைத்துக்கொண்டான்.

"கையைத் தொட்டா பரவாயில்லை. அதுக்கு மேல அலோவுடு இல்லை."

"ஏன்?"

"சனங்கள் பார்க்கிறாங்க இல்லை."

"அப்ப எப்ப அலோவுடு?"

"அப்பறம் சந்தர்ப்பம் வர்றப்ப."

அவன் மகிழ்ச்சியில் அங்கேயே குட்டிக் கரணம் போடுவதற்காக முஸ்தீபு செய்யத் தொடங்க "வேண்டாம்" என்று சிரித்தாள்.

பழரசம் வாங்கிக் கொடுத்தான்.

போலீஸ்காரர்களிடம் மிகையாக நடந்துகொண்டான். பஸ்ஸில் அவளை அணைத்து ஏற்றி அது புறப்படும்வரை காத்திருந்து தொத்தினான்.

பற்பல சின்ன விஷயங்களில் தன் வீரத்தைக் காட்டினான்.

"அப்பறம் எப்ப சந்தர்ப்பம்?" என்றான்.

ராத்திரி ஏழரை மணி வரைக்கும் அவள் வீட்டுத் திண்ணையிலேயே உட்கார்ந்து இருந்தான். அதன்பின் பற்பல காரியங்களுக்காக வீட்டுக்கு வந்தான். பாலுக்காக, படுக்கை விரிப்புக்காக, தண்ணீர் செம்புக்காக.

"தேன் குடிச்ச நரி மாதிரி இருக்குது" என்றாள்.

வேணி ஒருமுறை அவனைப் பார்த்து சிரித்தாள்.

ராசு காண்டிராக்ட் வேலைக்காக மறுதினம் மைசூர் போயிருந்தபோது, மஞ்சு காலையில் கதவைத் தட்டினான்.

வேணி பின்புறத்தில் பல் தேய்த்துக்கொண்டிருந்தாள்.

வேலைக்காரப் பெண் காப்பி கொண்டுவந்து கொடுத்துவிட்டு வேணியின் காது லோலாக்கை வியந்து பாத்துக்கொண்டிருந்தது.

"யாரு பாரு. கதவைத் திற."

மஞ்சுதான். புதுசாக பாரின் சட்டை, செண்டெல்லாம் போட்டுக்கொண்டு "அலோ வேணி" என்றான்.

"இது யாரு? பொண்ணு! நேரா கடைக்குப் போய் ஒரு பாக்கெட் சிகரெட்டு வாங்கிட்டு வா" என்று அவளை அனுப்பி வைத்துவிட்டு, கதவைச் சாத்தினான்.

"சொல்லு வேணி! இப்ப முழுக்க அணைச்சுக்கலாமில்லை" என்றான்.



# 21

மஞ்சு அவளை மெல்ல சுவர்ப்புறமாகக் கொண்டுசென்று முகத்தில் மூக்கால் தீற்றினான்.

வேணி தலையைக் குனிந்துகொண்டு அவன் மார்பில் கைவைத்து விலக்கினாள்.

"ஏன் வேணி, இஷ்டமில்லையா?"

"இப்ப வேண்டாம்னுதான் பார்க்கறேன்."

"எப்பத்தான்?"

"ஒருமுறை பெங்களூருக்கு என்னை எப்படியாவது கூட்டிப் போயிரு. அங்க போய் கட்டுப்பாடில்லாம இருக்கலாம்."

"வேணும்னா லாட்ஜில ஒரு ரூம் போட்டுரலாம்."

"அதுகூட சரிதான்."

"அடாடா அந்த நினைப்பே துடிப்பா இருக்குது. வேணி! ஒரே ஒரு தடவை உன்னைத் தொட்டுட்டா இன்னைய பொழுது பயனுள்ளதாயிரும் வேணி."

"அதுக்கென்ன, தொட்டுக்க" என்றாள்.

மஞ்சு மகிழ்ச்சியுடன் அவள் கையைப் பற்றி வளையல் மாட்டுவது போல மணிக்கட்டை சைஸ் பஸ் பார்த்து முழுங்கையைப் பிடித்துப் பார்த்து, தோள்பட்டையைத் தடவிப் பார்த்து, கழுத்துப் பட்டையில் அவள் ரவிக்கையின் வரிவிளிம்பில் விரல்விட்டு நீவி..."

"போதும், இப்போதைக்கு."

"இப்பதானே ஆரம்பிச்சேன் வேணி" என்றான் அவன். முகத்தில் முத்துமுத்தாக வியர்த்திருந்தது.

"மிச்சத்தை பெங்களூர்ல வெச்சுக்கலாம். அவர் மைசூர்லருந்து வர்ற சமயம்."

"பொய்யி. ரத்னம்மா சொல்லிச்சு. சாயங்காலம்தான் வருவாராம்."

மஞ்சு மேலும் தைரியம் பெற்று அவள் இடுப்பின் உடுப்பைக் கலைக்கத் தலைப்பட்டான்.

“பாத்தியா, கொஞ்சம் இடம் கொடுத்தால் ரொம்ப முன்னேர்றியே.”

“வேணி, எனக்கு உம்மேலே காதல் வேணி! கடுமையான காதல். எப்ப முதல் முதல் உன்னைப் பார்த்தேனோ அப்பவே, அந்தக் கணமே காதல், வேணி! எனக்கு பசி தாகம் எதுவுமே இல்லை. இப்ப எப்ப பாத்தாலும் வேணி...வேணிதான்.”

“அப்படியா?”

“நீ அப்படியான்னு கேக்றதே எத்தனை அழகா இருக்குது தெரியுமா?”

“எல்லாமே அழகாகத்தான் இருக்கும் அதுவரைக்கும்...”

“எதுவரைக்கும்?”

“தெரியாத மாதிரி கேக்கற இப்ப நீ போ” என்றாள்.

வேணியை அவன் இப்போது ஒரு மாதிரி பலாத்காரமே செய்ய ஆரம்பித்துவிட, அவனைக் கடுமையாகத் தள்ளிப் பார்த்தாள். ஓர் எல்லைக்கப்புறம் “இது போதும். இனிமே எதாவது செஞ்ச, கூப்பாடு போடுவேன்” என்றாள்.

அவன் அவளை முறைத்துப் பார்த்துவிட்டு “வா, இப்பவே பெங்களூர் போயிரலாம்” என்றான்.

“சமயம் வரட்டும். நீ இப்ப போயிரு.”

அதற்குள் அந்த வேலைக்காரப் பெண் சிகரெட் பாக்கெட் வாங்கிக் கொண்டு வந்துவிட, மஞ்சு ஏமாற்றத்துடன்தான் புறப்பட்டான்.

அவன் போனதும் வேணி சற்று நேரம் சுவரை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

“என்ன அக்கா ஒரு மாதிரி இருக்கிற? அந்தாளு மஞ்சு தொந்தரவு செய்யறாரில்லை?”

“இல்லை, நான்தான் தொந்தரவு செய்ய... போ போ” என்று விரட்டினாள்.

ராத்திரி ராசு வந்தபோது “என்ன, மஞ்சுகிட்ட ரப்பா பேசினியாமே?” என்றான்.

“இல்லையே” என்றாள் வேணி.

ராசு வாசலில் சாய்வு நாற்காலி போட்டுக்கொண்டு சட்டையை நீக்கிவிட்டு இருந்தான்.

உடம்புக்கு ஒருத்தன் விசிற, ரத்னம்மா வெற்றிலை மடித்துக் கொடுக்க, கூரைக்கு மேல் தொங்கிய பவுர்ணமி நிலாவைப் பார்த்து “அழகா இல்லை?” என்று வேணியைக் கேட்டான்.

“எப்படியாவது இந்தாளுக்கு ஒரு புள்ளையைப் பெத்துக் கொடுத்துரு வேணி” என்றாள் ரத்னம்மா.

“நானும்தான் முயற்சி பண்ணிக்கிட்டிருக்கேன்” என்றான் ராசு.

“இவள்தான் ஒத்துழைக்கலை. இந்தப் பொண்ணுடைய அழகும்



என்னுடைய உடம்பு வாகும் இருந்தா...”

“நீயும்தான் எங்கிட்ட எத்தனையோ முயற்சி செய்து பார்த்திருக்கே.”

“உனக்கு கோளாறுன்னா நான் என்ன செய்வனாம்?”

“பாத்துறலாம். இந்தப் பொண்ணுகிட்டயாவது எதாவது பத்து தான்னு பார்க்கலாம். வாடி சக்களத்தி பாட்டுப் பாடலாம்” என்று பாட்டுப் பாடினாள் ரத்னம்மா.

மஞ்சு எதிரில் உட்கார்ந்துகொண்டு, வேணியைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான். அவனைக் கவனித்த ராசு, “என்ன மஞ்சு, எப்படி இருக்கிறே?”என்று கேட்டான்.

“ஒண்ணும் புரியலை மாமா” என்றான்.

“ஏண்டா?”

“ஜனங்கள் நம்மைக் கண்டுக்க மாட்டங்குது. பேசாம கோலார் திரும்பிரலாம்னு தோணுது. நாளைக்கே போயிரலாமான்னு தோணுது.”

“ஏண்டா? பத்து நாள் இருந்துட்டுப் போயேன்.”

“பெங்களூர்ல கொஞ்சம் சோலி இருக்குது. அதை முடிச்சிட்டு போகலாம்னு இருக்கேன்.”

“என்ன வேலைடா பெங்களூர்ல?”

“நமக்குத் தெரிஞ்சவங்க ஒரு பொருள் தர்றேன்னு சொன்னாங்க. அதை வாங்கிக்கணும்” என்றான், இரைச்சலாக. இருட்டில் அவன் தன்னைப் பார்ப்பது வேணிக்குத் தெரிந்தது.

“என்னடா பொருள்?”

“விலை உயர்ந்த பொருள்.”

“புதிர்போட்டுப் பேசறான், பாரு.”

தன் கையைப் பார்த்துக்கொண்டே அதைக் கேட்டுக் கொண்டிருந்த வேணி, இருட்டில் சிரித்துக்கொண்டாள்.

மறுநாள் நிஜமாகவே அந்த மஞ்சு என்கிறவன் கிளம்பிப் போய் விட்டான். ஊரிலிருந்து யாருக்கோ உடம்பு சரியில்லை என்று டிரங்க் கால் வந்திருந்ததால் வேணியிடம் சொல்லிக் கொள்ளாமல் கூடப் புறப்பட்டுப் போய்விட்டான் என்பது தெரிந்தது.

வேணிக்கு ஒருவகையில் ஆதங்கமாக இருந்தது. அடடா, இன்னமும் கொஞ்சம் அவனிடம் நைசாகப் பேசியிருக்கலாமே என்று தோன்றியது. ஒரு சந்தர்ப்பத்தை இழந்ததுபோலத்தான் உணர்ந்தாள்.

ராசு மத்தியான வேளையில் திடுமென்று வந்து தொந்தரவு செய்தான். தண்ணீர் குடித்ததும் அலுப்பாக இருந்தது. கழுத்தில் தகர மணி கட்டிய மாடுகள் வீடு திரும்பும் வரை படுத்திருந்தாள்.

உடம்பு பூராவும் அலுப்பால் உருகிவிட்டாற்போல இருந்தது. தாகத்துக்கு எழுந்தபோது, காலையா மாலையா என்று தெரியவில்லை.

"பாத்தியா, கொஞ்சம் இடம் கொடுத்தால் ரொம்ப முன்னேர்றியே."

"வேணி, எனக்கு உம்மேலே காதல் வேணி! கடுமையான காதல். எப்ப முதல் முதல் உன்னைப் பார்த்தேனோ அப்பவே, அந்தக் கணமே காதல், வேணி! எனக்கு பசி தாகம் எதுவுமே இல்லை. இப்ப எப்ப பாத்தாலும் வேணி. . .வேணிதான்."

"அப்படியா ?"

"நீ அப்படியான்னு கேக்றதே எத்தனை அழகா இருக்குது தெரியுமா ?"

"எல்லாமே அழகாகத்தான் இருக்கும் அதுவரைக்கும். . ."

"எதுவரைக்கும் ?"

"தெரியாத மாதிரி கேக்கற இப்ப நீ போ" என்றாள்.

வேணியை அவன் இப்போது ஒரு மாதிரி பலாத்காரமே செய்ய ஆரம்பித்துவிட, அவனைக் கடுமையாகத் தள்ளிப் பார்த்தாள். ஓர் எல்லைக்கப்புறம் "இது போதும். இனிமே எதாவது செஞ்ச, கூப்பாடு போடுவேன்" என்றாள்.

அவன் அவளை முறைத்துப் பார்த்துவிட்டு "வா, இப்பவே பெங்களூர் போயிரலாம்" என்றான்.

"சமயம் வரட்டும். நீ இப்ப போயிரு."

அதற்குள் அந்த வேலைக்காரப் பெண் சிகரெட் பாக்கெட் வாங்கிக் கொண்டு வந்துவிட, மஞ்சு ஏமாற்றத்துடன்தான் புறப்பட்டான்.

அவன் போனதும் வேணி சற்று நேரம் சுவரை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"என்ன அக்கா ஒரு மாதிரி இருக்கிற? அந்தாளு மஞ்சு தொந்தரவு செய்யறாரில்லை ?"

"இல்லை, நான்தான் தொந்தரவு செய்ய. . . போ போ" என்று விரட்டினாள்.

ராத்திரி ராசு வந்தபோது "என்ன, மஞ்சுகிட்ட ரப்பா பேசினியாமே ?" என்றான்.

"இல்லையே" என்றாள் வேணி.

ராசு வாசலில் சாய்வு நாற்காலி போட்டுக்கொண்டு சட்டையை நீக்கிவிட்டு இருந்தான்.

உடம்புக்கு ஒருத்தன் விசிற, ரத்னம்மா வெற்றிலை மடித்துக் கொடுக்க, கூரைக்கு மேல் தொங்கிய பவுர்ணமி நிலாவைப் பார்த்து "அழகா இல்லை ?" என்று வேணியைக் கேட்டான்.

"எப்படியாவது இந்தாளுக்கு ஒரு புள்ளையைப் பெத்துக் கொடுத்துரு வேணி" என்றாள் ரத்னம்மா.

"நானும்தான் முயற்சி பண்ணிக்கிட்டிருக்கேன்" என்றான் ராசு.

"இவள்தான் ஒத்துழைக்கலை. இந்தப் பொண்ணுடைய அழகும்



என்னுடைய உடம்பு வாகும் இருந்தா. . ."

"நீயும்தான் எங்கிட்ட எத்தனையோ முயற்சி செய்து பார்த்திருக்கே."

"உனக்கு கோளாறுன்னா நான் என்ன செய்வனாம் ?"

"பாத்துறலாம். இந்தப் பொண்ணுகிட்டயாவது எதாவது பத்து தான்னு பார்க்கலாம். வாடி சக்களத்தி பாட்டுப் பாடலாம்" என்று பாட்டுப் பாடினாள் ரத்னம்மா.

மஞ்சு எதிரில் உட்கார்ந்துகொண்டு, வேணியைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான். அவனைக் கவனித்த ராசு, "என்ன மஞ்சு, எப்படி இருக்கிறே ?" என்று கேட்டான்.

"ஒண்ணும் புரியலை மாமா" என்றான்.

"ஏண்டா ?"

"ஜனங்கள் நம்மைக் கண்டுக்க மாட்டங்குது. பேசாம கோலார் திரும்பிரலாம்னு தோணுது. நாளைக்கே போயிரலாமான்னு தோணுது."

"ஏண்டா ? பத்து நாள் இருந்துட்டுப் போயேன்."

"பெங்களூர்ல கொஞ்சம் சோலி இருக்குது. அதை முடிச்சிட்டு போகலாம்னு இருக்கேன்."

"என்ன வேலைடா பெங்களூர்ல ?"

"நமக்குத் தெரிஞ்சவங்க ஒரு பொருள் தர்றேன்னு சொன்னாங்க. அதை வாங்கிக்கணும்" என்றான், இரைச்சலாக. இருட்டில் அவன் தன்னைப் பார்ப்பது வேணிக்குத் தெரிந்தது.

"என்னடா பொருள் ?"

"விலை உயர்ந்த பொருள்."

"புதிர்போட்டுப் பேசறான், பாரு."

தன் கையைப் பார்த்துக்கொண்டே அதைக் கேட்டுக் கொண்டிருந்த வேணி, இருட்டில் சிரித்துக்கொண்டாள்.

மறுநாள் நிஜமாகவே அந்த மஞ்சு என்கிறவன் கிளம்பிப் போய் விட்டான். ஊரிலிருந்து யாருக்கோ உடம்பு சரியில்லை என்று டிரங்க் கால் வந்திருந்ததால் வேணியிடம் சொல்லிக் கொள்ளாமல் கூடப் புறப்பட்டுப் போய்விட்டான் என்பது தெரிந்தது.

வேணிக்கு ஒருவகையில் ஆதங்கமாக இருந்தது. அடடா, இன்னமும் கொஞ்சம் அவனிடம் நைசாகப் பேசியிருக்கலாமே என்று தோன்றியது. ஒரு சந்தர்ப்பத்தை இழந்ததுபோலத்தான் உணர்ந்தாள்.

ராசு மத்தியான வேளையில் திடுமென்று வந்து தொந்தரவு செய்தான். தண்ணீர் குடித்ததும் அலுப்பாக இருந்தது. கழுத்தில் தகர மணி கட்டிய மாடுகள் வீடு திரும்பும் வரை படுத்திருந்தாள்.

உடம்பு பூராவும் அலுப்பால் உருகிவிட்டாற்போல இருந்தது. தாகத்துக்கு எழுந்தபோது, காலையா மாலையா என்று தெரியவில்லை.

இருட்டாக இருந்தது. வேணி குழப்பமாக இருந்தாள்.

அடுத்த மாதத்துக்கு அடுத்த மாதம் அவள் கர்ப்பமாக இருக்கிறாள் என்று லேடி டாக்டர் சேதி சொன்னதும், ராசு சந்தோசத்தில் வாயில் விரல் வைத்து ரவுடி சீட்டி அடித்தான். அன்றைக்கு வருகிற பேருக்கெல்லாம் சாப்பாடு, இனிப்புப் பலகாரம் கொடுத்தான். பேருக்குப் பேர் வந்து விசாரித்தார்கள்.

ரத்னம்மா கண்ணில் கண்ணீர் கரை கட்டியது. புதுசாக சேலை வாங்கிக் கொடுத்தாள்.

"வேணி! இனிமே நீ கண்ணாடி மாதிரி. பத்திரமா இருக்கணும். புள்ளை பொறக்கற வரைக்கும் ரொம்ப சாக்கிரதையா இருக்கணும். உனக்கு எதாவதுன்னா ராசு என்னைக் கொன்னு போட்டுரும். தெரியுமில்லை?"

"எனக்கென்னவோ லேடி டாக்டர் சரியா சொல்லலைன்னு தோணுது ரத்னம்மா."

"ஏன் அப்படிச் சொல்லுறே?"

"சில வேளையில் இந்த மாதிரி தள்ளிப்போறதும் உண்டு."

"அதெல்லாம் இல்லை. இவங்க ரொம்ப கெட்டிக்காரங்கம்மா. ஒரு நாளைக்கு மூணு அபார்சன் செய்றாங்க தெரியுமில்லை?"

"குமட்டலோ புளிப்பு திங்கணும்னு விருப்பமோ எதும் இல்லையே. அதெல்லாம் இருக்கும்னு சொல்லுவாங்களே?"

"சில பேருக்கு அது கிடையாதும்பாங்க."

"ரத்னம்மா. எனக்கு பயமா இருக்குது. என்னை பெங்களூர் கொண்டு விட்டிருங்க. எங்க அப்பா வூட்டில பெத்துக்கறேன்."

"அதுக்கெல்லாம் சமயம் இருக்குது."

ராசு ஒருமுறை பெங்களூர் போய் இந்த விவரத்தை வேல்முத்துவிடம் சொன்னானாம். அவன் வெறுமனே தலையாட்டினதோடு சரி. பரிமளாதான் லெட்டர் கொடுத்திருந்தாள். குட்டி எழுதியிருந்தது. "என் அருமை மகள் வேணிக்கு பரிமளா எழுதிக்கொண்டது என்னவென்றால், இப்பவும் உன் அப்பா ரொம்ப உடம்பு சரியில்லாமல் இருக்கிறபடியினால் கூடிய சீக்கிரம் எங்களை வந்து பார்க்கும்படி எழுதச் சொன்னார். நீ கர்ப்பமாகி இருக்கிற நல்லசெய்தி கேட்டு சந்தோசம். குட்டி பாவாடை தாவணி போட்டுக்கொண்டு ரொம்ப அழகாக இருக்கிறது வயசுக்கு வந்துவிட்டதால் வீட்டுவேலைகளை நிறைய செய்கிறது. உன்னைப் போலவே இருக்கிறது. எனக்கு இடுப்பு பிடித்துக்கொண்டு நகரவே முடியவில்லை. தமிழு கான்வெண்டில் சேர்ந்து இங்கிலீஷ் பேசுகிறான். என்னை மம்மி என்றுதான் கூப்பிடுகிறான். பிரசவத்துக்கு உன்னை இங்கே கட்டாயம் அனுப்பும்படி



சொல்லிவிட்டேன்."

கடிதத்தைப் படித்ததும் வேணிக்கு அழுகை வந்தது.

மாலை மஞ்சு வந்திருந்தான். "வேணி சவுக்கியமா?" என்று கேட்டான்.

"சுமாரா இருக்கிறேன், மஞ்சு! எப்ப வந்த?"

"வேணி! உன்னைக் கூட்டிப்போக வந்திருக்கேன்."

"எங்க?"

"பெங்களூருக்கு. மூணுமாசம் முன்னாடி, போனமுறை வந்தபோது பேசி வெச்சிருந்தோமே ஞாபகம் இல்லை."

"இருக்குது மஞ்சு."

"வா வேணி போகலாம்."

"மூணு மாசத்துக்குள்ள நெறைய நடந்துபோச்சு, மஞ்சு."

"பரவால்லை. கேள்விப்பட்டேன். அதனால என் காதல் ஒரு மாத்துக்குகூட குறையாது வேணி."

"நான் இப்ப உன்கூட வர்றாப்பல இல்லையே மஞ்சு."

"காலையில யோசிச்சுச் சொல்லு."

"ஓடி வந்துரணும்னா சொல்றே?"

"இல்லை வேணி. உங்கப்பாவுக்கு உடம்பு சரியில்லைன்னாங்களே. ஒருவாட்டி மஞ்சுகூட போய்ப் பார்த்துட்டு வந்துர்றேன்னு ராசுகிட்ட சொல்லிரு. அவரு ஒத்துப்பாரு. உன்னைக் கூட்டிக்கிட்டுப் போயிர்றேன்" என்றான் மஞ்சு.

ராசுவிடம் சொன்னபோது "தாராளமா போய் வா. மஞ்சுகூட போறதில என்ன தயக்கம்?" என்றான்.

# 22

மஞ்சுவோடு பஸ் ஏறி பெங்களூர் வந்தபோது இருட்டிக்கொண்டிருந்தது.

ஸ்டேஷன் பக்கமாக நடந்துபோய் ஓட்டுக் குடிசைகளைக் கடந்து, பழைய அரசமரம், அதன் அடிவாரத்தில் கிழவி, சாராயக்கடை, கேரம்போர்டு எல்லாவற்றையும் மறுபடி பல மாதங்கள் – ஏன், ஏறக்குறைய ஒரு வருடம் கழித்துப் பார்த்தபோது வேணிக்கு அழுகை வந்துவிட்டது.

வேணியைப் பார்த்தவுடனே கண் கசக்க ஆரம்பித்தாள் பரிமளா.

"வேணி! என் செல்வமே வந்து சேர்ந்தியா? எனக்கு என்ன சந்தோசம் தெரியுமா? தமிழு இப்பல்லாம் பேச ஆரம்பிச்சுட்டுது."

"குட்டி எங்கே பரிமளா?"

"வெளியே போயிருக்குது. குட்டியைப் பார்த்தா இப்ப நம்ப மாட்டே."

"பாவா உடம்பு எப்படி இருக்கு?"

"அதேபோலத்தான், அதிகம் குணமாகலை."

"கடை?"

"ஒருநாள் கடைக்குப் போறாரு. ஒருநாள் போகலை. வாடிக்கைகாரங்கள்ளாம் விலகிப் போயிட்டாங்க. அப்புறம் அங்கயே மேட்டாண்டை கோஆப்பரேட்டிவ்னு டெம்போவில் கொண்டுவிக்கிறானா, நம்ம கடை ரொம்ப நஷ்டமாயிருச்சு."

"பணம் யாரு அனுப்பறாங்க?"

"எல்லாம் உன் புருசன்தான் அனுப்பிச்சுக்கிட்டு இருக்கான்."

"எனக்குத் தெரியவே தெரியாதே."

"சொல்லவாண்டாம்னு எழுதியிருந்தோம். இது யாரு?"

"அக்கா! எம்பேரு மஞ்சு. வேணியைப் பத்திரமா கொண்டுவிடறதுக்கு அண்ணன் ராசு அனுப்பிச்சாரு."

"அப்படியா? ராசு எத்தனை கரிசனம் பாத்தியா. எத்தனை அன்பு,



...லை பாத்தியா, வேணி?"

"நல்லா இருக்காங்களா பாவா?"

"ஆமாம்."

உள்ளே இருட்டில் விளக்கு வைத்திருந்தது. சாக்குத் திரையை விலக்கி அப்பனைப் பார்த்துத் திடுக்கிட்டாள் வேணி. இடுப்பு வேஷ்டி நழுவியது தெரியாமல், அசிங்கம் தெரியாமல் சுவரைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்து இருந்தான்.

"பாவா" என்றாள்.

திரும்பி "யாரு, வேணியா?" என்றான். குரல் என்னவோ சன்னமாகி விட்டது. மூச்சுபோல கேட்டது.

"ஆமா பாவா."

"எப்ப வந்த?"

"சரியா பேசறாரு இல்லை? முன்னைக்கு இப்ப அதான் வளர்ச்சி. சரியா கேள்வி கேக்கறாரு, சாப்பிடறாரு. பாக்கி எல்லாம் நாமதான் செய்யணும். கக்கூஸ் போகக்கூட ஒத்தாசைன்னா பாத்துக்க வேணி. எத்தனை கஷ்டம் பாத்தியா?"

"பாவா, உனக்கு என்ன உடம்புக்கு?"

"ஒண்ணுமில்லை. கைதான் அழுக்கா இருக்குது" என்றான் வேல்முத்து.

"என்ன இப்படிப் பேசறாரு? ஆல் இண்டியா இன்ஸ்டிட்யூட்ல காட்டினா மருந்து கொடுப்பாங்க இல்லை?"

"எல்லா வைத்தியமும் பாத்தாச்சுப்பா. இப்ப ஹோமியோபதி பண்ணிக்கிட்டு இருக்கோம். அப்புறம் சாமியார்கிட்ட மந்திரிச்ச தேவாங்கு கயிறு கட்டினதில், கொஞ்சம் குணம் ஆகி இருக்குது."

"குழந்தை அழுது" என்றான் வேல்முத்து.

"பாவா" என்று, வேணி அவன் கன்னத்தைப் பிடித்துப் பார்த்தாள்.

அவளை அவன் நேராகப் பார்க்க விரும்பவில்லை போல முகத்தைத் தழைத்துக்கொண்டான்.

வெளியே மஞ்சுவுடன் வந்த வேணிக்குக் குழப்பமாக இருந்தது.

"வா வேணி! லாட்ஜுக்குப் போயிரலாம். இங்கயா படுத்துப்ப!"

அப்போது அந்த சந்தில சின்னப் பையன்கள் தொடர ஒரு ஸ்கூட்டர் வண்டி வந்து நின்றது. அதன் பின் சீட்டில் ஒயிலாக ஒரு பெண் உட்கார்ந்து வேணியைப் பார்த்து "அக்கா எப்ப வந்திங்க!" என்றாள்.

"குட்டி? நீயா?"

"ஆமாக்கா" என்றாள் குட்டி. தலை மயிரை குட்டையாக வெட்டி விட்டுக்கொண்டு ஆண்பிள்ளை சட்டை தொளதொளவென்று

போட்டிருந்தாள். வெளிர் நீல நிற பாண்ட் போட்டு, அதை மடக்கியிருந்தாள். படா ஸ்டைலாக இருந்தாள்.

"ஸி யூ லேட்டர்" என்று அந்தப் பையன் உட்கார்ந்தவாறே ஸ்கூட்டரை உதைத்துப் புறப்பட்டான்.

"பை மோகன்" என்று அவனுக்கு டாட்டா காட்டிவிட, மஞ்சு அவளை ஆச்சரியத்துடன் பார்த்து "வேணி இது உன் தங்கச்சியா?" என்றான்.

"ஆமாம், எப்படி மாறிட்டுது இல்லை?" என்று அவள் தலையைக் கோதிவிட்டாள். "நல்லா படிக்கிறாயா?" என்று கேட்டாள். குட்டி பரிமளாவைப் பார்த்தது.

"இந்த முறை பயங்கரமா இவளுக்கு ஆஸ்த்துமா வந்து, படிப்பை பாதில நிறுத்தியாச்சு."

"என்னது?"

"நான்கூட சொல்லிப்பாத்தேன் அக்கா கோவிச்சுப்பாங்கன்னு. டாக்டர்தான் பள்ளிக்கூடம் போகக்கூடாதுன்னுட்டாரு" என்றாள் குட்டி.

"அந்தப் பையன் யாருடி?"

"மோகன்னு தெரிஞ்ச பையன். பணக்காரங்க அக்கா."

"எங்க போயிருந்த?"

"அடுத்த வருசத்துக்கு நோட்ஸ் தர்றன்னான்."

"அப்படியா?" என்று அவளைக் கன்னத்தில் ஓர் அறை அறைந்தாள்.

"ஏண்டி நான் உனக்காக மாடாட்டம் உழைச்சு பணம் கட்டி வருசா வருசம் பள்ளிக்கூடத்துக்கு துரத்தி இந்த வயசில கல்யாணம் கட்டிட்டு நாய் படாதபாடு படறேன், உன் படிப்புக்காக, அதை நீ தான் ஊரைவிட்டு புறப்பட்ட உடனே விட்டுட்டியே."

"என்ன பண்றது அக்கா? உடம்பு சரியில்லையே."

"உனக்கா? உடம்பு சரியில்லையா? உடம்பில திமிர்தான் ஏறிக் கிடக்கு. பாவா! பாவா!"

"பாவா எதுவும் சொல்லலை" என்றாள் குட்டி.

"சொல்லாது. அதுக்குப் பைத்தியம் புடிச்சாச்சில்ல. நான் போறேன். நான் ஊருக்குப் போன உடனே முதல் காரியமா என் புருசன்கிட்ட சொல்றேன். ஒரு சல்லிக்காசு அனுப்பக்கூடாதுன்னு..."

"அனுப்பாட்டிப் போயேன். எனக்கு சம்பாதிக்கத் தெரியும்" என்று தன் சட்டைப் பையிலிருந்து நூறுரூபாய் எடுத்துக் காட்டினாள் குட்டி.

"ஏதுடி, இது?"

"மோகன் கொடுத்தான்."



"அதுக்கு நீ என்ன கொடுத்த?"

"இன்னும் இல்லை. கொடுக்கிறதா சொல்லியிருக்கேன்" என்று குட்டி ஆணவத்துடன் பார்த்துவிட்டு அந்த இடத்தை விட்டு விலக –

மஞ்சு "எனக்கு தலை சுத்துது. வா வேணி போயிரலாம்" என்றான். மஞ்சு அவளை ஓட்டலுக்கு அழைத்துப் போவதிலேயே இருந்தான்.

வேணி சற்று யோசித்துப் பார்த்தாள்.

"மஞ்சு! எனக்கு ஓர் உதவி செய்வாயா?"

"என்ன கேள்வி இது வேணி? என்ன வேணும் சொல்லு. கோலார்ல அத்தனையும் விட்டுட்டு உன்னக்கூட்டி வரதுக்கே வந்திருக்கேன், சொல்லு வேணி."

"ஒரு வீட்டைத் தேடணும்."

"யார் வீடு?"

"எனக்குத் தெரிஞ்சவங்க வீடு. பாலன் ஆச்சர்டுல."

"விலாசம் தெரியாதா?"

"தெரியாது. வீட்டு முகப்பு ஞாபகம் இருக்குது. இதுக்கு முந்தி குட்டிகூட வந்து ரெண்டுமுறை தேடியிருக்கேன். கிடைக்கலை. எப்படியாவது தேடிக் கண்டுபிடிச்சு ஓர் ஆளை சந்திச்சு ஒரு சமாசாரம் கேட்டுட்டா அதுக்கப்புறம் நம்ம ரெண்டு பேரும் எப்படி சிநேகிதமா இருக்கலாம்ங்கறது தீர்மானமாகும்."

"புதிரா பேசற வேணி! பரவால்லை. உங்கூட வர்றதே எனக்கு சந்தோசம். சொல்லு, ஆட்டோவில போகலாமா? டாக்சியில போகலாமா?"

ஆட்டோவில்தான் போனார்கள். "இதுதான் மந்திரி வீடு. இது பெரிய ஆட்கள் பெசலிஸ்டு வீடு. அப்படியே போனா எக்டே வீடு வரும்" என்று காட்டிக்கொண்டே வந்தான் மஞ்சு.

வேணிக்கு அதெல்லாம் உறைக்கவில்லை.

ஆனந்த் அன்று அழைத்துச் சென்ற வீட்டின் முகப்பும் அதன் கேட்டும் அவுட் அவுசும் அவள் நினைவைவிட்டு இன்னமும் விலக வில்லை. அங்குமிங்கும் பார்த்துக்கொண்டே வந்தாள். இருட்டுவதற்குள் எப்படியாவது கண்டுபிடித்துவிடவேண்டும். இத்தனை நாள் கழித்து ஆனந்தை சந்திக்க முடியுமா? முடிந்தாலும் என்ன சாதிக்க முடியும்? வேணிக்குக் கல்யாணம் ஆகி கர்ப்பமாக இருக்கிறபோது ஆனந்த் அவளை முதலில் அடையாளம் கண்டுகொள்வானோ இல்லையோ! முதலில் அந்த வீடு கிடைக்கட்டும்.

"இந்த ஏரியாவில் உள்ள அத்தனை தெருவையும் பார்த்தாச்சு. வையாளிக்காவல் பக்கம் போகலாமா இல்லை காவேரி தியேட்டர் பக்கம்?" மஞ்சு கேட்டாள்.

“இங்கதான் மஞ்சு.”

“ஒண்ணே ஒண்ணு, ஓர்அரை சந்து பாக்கியிருக்குது. அதைப் பார்த்துரலாம் கடைசியா” என்றாள் வேணி.

அந்தத் தெருவுக்குள் நுழைந்ததுமே, வேணிக்கு சட்டென்று எல்லாம் அதனதன் இடத்தில் விழுந்ததுபோல உணர்ச்சி ஏற்பட்டது. “இதான் மஞ்சு! பள்ளத்தில் கிரிக்கெட் மைதானம். இந்த வீடுதான். இந்த கேட்டுதான். இந்த அவுட்அவுஸ்தான். நாய் கூட இதுதான்.”

“யாரு?” என்ற குரல் கேட்டது. கேட்டைத் தட்டினபோது “ஆனந்தை பார்க்க வந்திருக்கேன்யா?”

“ஆனந்தா? கேக்கிறது யாரு?”

“ஆனந்துக்கு உறவுமுறைங்க.”

“கொஞ்சம் இரு! சீசர் கெடாவுட்” என்று நாயை அடக்கிவிட்டு அந்தப் பெரியவர் கதவைத் திறந்தார். அவரை முன்பே பார்த்த மாதிரித்தான் இருந்தது.

“அய்யா, எம்பேரு வேணி. ஒருமுறை ஆனந்துகூட இந்த வூட்டுக்கு வந்திருக்கேன். எப்ப தெரியுமா? ஒண்ணரை வருஷம் இருக்கும் தெளிவாயிருச்சு. நாய்கூட இதேதான், அய்யா! அய்யா!”

“யாரு?” என்று வயசான குரல் உள்ளேயிருந்து கேட்டது.

“ஒண்ணரை வருடமா? இருக்கலாம். எனக்கு ஞாபகம் இல்லைம்மா.”

“அய்யா அன்றைக்கு உங்க மகன்கூட ஏர்போர்ட்டிலயிருந்து வந்தாங்க. ஆனந்துதான் பிக்அப் பண்ணிகிட்டு வந்தாரு. மாருதி கூட வெச்சிருப்பீங்க. மைதானத்தில வந்து வெள்ளைப் பந்தாட்டம் ஆடுவிங்க.”

“எல்லாம் சரிதான். வா, உள்ளே” என்று கிறீச்சிட்ட கதவைத் திறந்து நாயை பட்டைபோட்டுக் கட்டிவிட்டு “வாப்பா” என்று மஞ்சுவையும் கூப்பிட்டார்.

இருவரும்அவரைத் தொடர்ந்து உள்ளே போக, உள்ளிருந்து ‘யாரு?’ என்ற குரல் மறுபடிகேட்க –

“ஆனந்த் வேணுமாம்” என்றார்.

“ஆனந்தா?” என்று ஆச்சரியமான பதிலோடு ஓர் அம்மாள் சேலைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக்கொண்டு வெளியே வந்து வேணியையும் மஞ்சுவையும் பார்த்து –

“உம்பேர் என்ன?”

“வேணிம்மா.”

“உன்னைப்பத்தி ஆனந்து சொல்லியிருக்கான்.”

“அப்படிங்களா?”



“உன்னைத்தான கல்யாணம் கட்டிக்கிட்டான்?”

வேணி தலைகுனிய –

“கல்யாணம் கட்டிக்கிட்டானா?” என்று கேட்டாள்.

“இல்லைம்மா. எனக்கு வேற எடத்தில கல்யாணம் ஆயிருச்சு” வேணியால் கண்ணீரை நிறுத்தமுடியவில்லை.

“பின்ன எதுக்கு இப்ப வந்தே?”

“ஆனந்தைப் பார்க்கணும்.”

அந்தப் பெரியவரும் அந்த அம்மாளும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

“ஆனந்த் எங்கேன்னு உன்னைத்தான் நாங்க கேட்கணும்.”

# 23

“ஆனந்து உன்னைக் கல்யாணம் செய்துக்கலை?” என்று வீட்டுக்கார அம்மா கேட்டபோது, வேணிக்கு வியப்பாக இருந்தது.

“ஏம்மா அப்படி ஆனந்து சொன்னாரா?”

“ஆமாம் பெண்ணே. உன்னைக் கல்யாணம் செய்துக்கத்தானே போனான்.”

“எங்கே போனாரு?”

“உங்க வீட்டுக்குத்தான். உம்பேரு வேணிதானே? நீதானே இங்க ஒருமுறை ஆனந்துகூட வந்திருக்கே?”

“ஆமாம்மா.”

“உன்னைக் கல்யாணம் கட்டிக்க ஆனந்து வரலை?”

“அம்மா! நீங்க என்ன சொல்றீங்க? சற்று விளக்கமா சொல்லுங்க.”

“பெண்ணே! அன்னைக்கு ஆனந்து புதுசா சேலை எடுத்தான். தங்கத்தில தாலி எடுத்தான். அப்புறம் பர்மா பஜார்போய் பாரின் சோப்பு, டிரான்சிஸ்டர் எல்லாம் எடுத்து வச்சிருந்தான். உனக்குக் கொடுக்கத்தானே வாங்கி வெச்சிருந்தான். அதையெல்லாம் எடுத்துக்கிட்டு உன்னைப் பாக்கப் போறதாப் பொறப்பட்டுப் போனவன் திரும்பியே வரல்லை. எங்களுக்கு வீடு தெரியாது. உங்க விலாசம் தெரியாது. வருவான் வருவான்னு காத்திருந்தோம். உன்னைக்கூடத் திட்டினோம். ‘இந்தப் பாழாய்ப் போன பெண் ஆனந்தை இந்த மாதிரி மறக்க வெச்சிட்டா பாத்தியா’ன்னு. கடைசியில் நீயும் அவனைக் கல்யாணம் கட்டிக்கவில்லையா?”

“இல்லைம்மா. நான் அவருக்காகக் காத்திருந்து காத்திருந்து கண்ணு பூத்துப் போச்சு. பலநாள் அவரைப் பார்க்க இந்தப் பேட்டையில தேடி அலைஞ்சேன். அவர் சிக்கவே இல்லை. ஏமாத்திட்டுப் போயிருப்பாருன்னு ரொம்ப வருத்தமாப் போச்சு. அப்புறம் வேறொரு ஆளைக் கல்யாணம் கட்டிக்கச் சம்மதிச்சேன்.”

“இவர்தானா?”



“இல்லைங்க. அவரு வேற. வயசானவரு. ரெண்டாவது பெண்டாட்டி.”

“அடப்பாவமே. ஆனந்து உன்னைப் பார்க்கத்தானே வந்தான், அன்னைக்கு! பொய் சொல்லவே மாட்டானே. தாலிச் சங்கிலி பொடவை எல்லாம் எடுத்துக்கிட்டுத்தானே போனான். அதெல்லாம் எங்கே?”

“அந்த ஆள் எங்கே மறைஞ்சுட்டாருன்னு தெரியலைம்மா.”

“என்ன இது மர்மமா இருக்குது? பொடவை சங்கிலி எல்லாம் கொடுக்கலை உங்கிட்ட?”

“எங்க கொடுக்கறது? ஆளைப் பாத்தாத்தானே கொடுக்க முடியும்? கொடுக்கவே இல்லையே.”

“அடடா! பளிச்சுன்னு பச்சைக் கலர்லே ஒரு சேலை, அப்பறம் கெட்டியா சங்கிலியில தாலி எல்லாத்தையும் என்ன செய்தான்? அவன் நிச்சயமா உங்கிட்ட வரலையா?”

“இல்லைம்மா. சாமி சாட்சியா.”

“பின் எங்க போயிருப்பான், அவன்?”

“தெரியலைங்களே” என்றாள் வேணி.

அவள் கண்களில் கண்ணீர் கரையிட “ஆனந்து எங்க போனாலும் உங்ககிட்ட சொல்லாம போவாரா அய்யா?”

“பின்னே என்ன ஆயிருக்கும்ங்கறே?”

“தெரியலிங்களே.”

“உட்காருங்க. என்ன சாப்பிடறீங்க?”

“ஆனந்தை அதுக்கப்பறம் நீங்க பார்க்கவே இல்லைங்களா?” என்று மஞ்சு கேட்டான்.

“இல்லைப்பா.”

“போலீசுல தகவல் கொடுத்திங்களா?”

“இல்லைப்பா. ஆனந்தை நாங்க பரிபூர்ணமா நம்பினோம். அவன் விட்டுட்டு ஓடிப்போற ஜாதியில்லை. கொடுத்த வாக்கை மீற மாட்டான். தான் உண்டு தன் வேலை உண்டு அவ்வளவுதான். ரொம்ப நாளைக்கப்புறம் அவன் மனசில ஒருவிதமான ஆசையை ஏற்படுத்தின உன்னைப்பத்தி நிறைய சொல்லியிருக்கான். தாய் இல்லாதவள். சித்திக்கிட்ட வாழ்றவள். நல்லபொண்ணு. அழகான பொண்ணு. இப்படியெல்லாம் சொல்லியிருக்கான். கல்யாணம் முடிஞ்சதும் ரிசப்ஷனுக்கு நிச்சயம் வர்றேன்னு சொல்லி வச்சேன். என்னடான்னா...”

மஞ்சு வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த வேணியை உசுப்பி “வா போகலாம்” என்றான்.

“எங்க போறது?”

"ஒட்டல் ரூமுக்குப் போய் முகம் கழுவிட்டு..."

"அதெல்லாம் வேண்டாம். வாங்க போகலாம்" என்றாள் தீர்மானமாக.

"என்ன வேணி"

"வாயேன் சொல்றேன்"

இருவரும் வேக வேகமாக வேல்முத்துவின் குடிசைக்குச் சென்றனர். படக்கென்று வீட்டுக் கதவை உதைத்துத் தள்ளிவிட்டு நுழைந்து "அய்யா! பாவா!" என்றாள்.

வேல்முத்து மெல்லத் திரும்பினான். அவன் முகத்தில் அழுதது போல கவலைப் பாளங்கள் தோன்றின. "பாவா! சொல்லு பாவா. அன்னைக்கு ஆனந்து வந்தாரா, என்னைப் பார்க்கறதுக்கு? ஏன் எங்கிட்ட சொல்லலை பாவா?" என்று அவன் மார்பில் குத்த முற்பட்டாள்.

பரிமளாதான் சமாதானப்படுத்தினாள். "கவலைப்படாத வேணி கண்ணு. நிச்சயம் ஆனந்த் கெடைச்சுருவான்."

வேணி அதைப் பொருட்படுத்தாமல் "பாவா! பாவா! நிசத்தை சொல்லுங்க; பாவா! அன்னைக்கு ஆனந்து வந்தாரா இல்லையா?"

வேல்முத்து அவளை அன்னிய ஆளைப் போலப் பார்த்தான்.

"சொல்லு பாவா, சொல்லு பாவா."

பரிமளா குறுக்கிட்டு, "வேண்டாம் வேணி. சொல்றதைக் கேளு. உங்க அப்பாரை இந்த நெலமையில தொந்தரவு பண்ணாதே."

மஞ்சு "வேணி, வா போகலாம்" என்றான்.

"இரு மஞ்சு. இந்த வெவகாரம் ஒண்ணில்லை ஒண்ணு தீர்ந்துதான் ஆகணும். பாவா சொல்லு பாவா" என்று வேல்முத்துவின் தோள்களைப் பிடித்துக் கொண்டு அவனருகில் உட்கார்ந்து குலுக்கினாள்.

வேல்முத்து ஏதும் பேசாமல் வெறிச்சிட்டுப் பார்த்தான்.

பரிமளா "அதான் சொல்றேனில்லை. அவரைத் தொந்தரவு செய்யாதேன்னுட்டு" என்றாள்.

"உங்க எல்லாருக்கும் தெரியுமில்லை. ஆனந்து வந்தது? தெரியுமில்லை?"

"எனக்கு ஒண்ணுமே தெரியாது."

"ஏம்மா பொய் சொல்றீங்க! பாவா, நீங்க சொல்லுங்க."

"பாவாதான் பேசறதில்லையே."

பரிமளா அவளருகில் வந்து "என்ன வேணி இப்படிக் குழப்புறே? ஏன்யா மஞ்சு என்னதான் ஆச்சு?" என்று கேட்டாள்.

வேணி வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்க, மஞ்சு சொன்னான். "அம்மா! எனக்கு முழு விவரமும் தெரியலைதான். ஆனா, வேணிகூட



பாலன் ஆர்ச்சர்டுல ஒரு வீட்டுக்குப் போனமே, அங்கே சொன்னாங்க, 'ஆனந்து உன்னைப் பார்க்கத்தான். அன்னைக்குக் கிளம்பிப் போனவன் ஆளைக் காணவே இல்லை'ன்னு சொன்னாங்க. இவங்களுக்கு சேலை, தாலி எல்லாம் எடுத்துக்கிட்டுப் போனதா சொன்னாங்க."

"அப்படியா? ஆச்சரியமா இருக்குதே. அன்னைக்கு பொறப்பட்டவன் ஏன் இன்னும் வரவேயில்லை?"

"பொய்! வந்திருக்காரு. அவரை ஏதோ சாக்கு போக்குச் சொல்லி எனக்குத் தெரியாம அனுப்பிச்சுட்டிங்க. அவங்க அவங்க சுயநலத்துக்காக என்னைப் பழிவாங்கிட்டிங்க. ஆனந்து வந்திருக்காரு. அவரை அனுப்பிச்சுட்டிங்க. துரத்தி அனுப்பிச்சிங்களா? ஆள் வெச்சு அடிச்சிங்களா? எப்படி?" என்றாள் வேணி.

"சேச்சே. அப்படியெல்லாம் ஒண்ணுமில்லைம்மா. இப்ப மட்டும் என்ன? அந்த ஆனந்துங்கறவன கூட்டிவா."

"கூட்டி வந்தா கல்யாணம் செய்து வைப்பிங்களா, பரிமளா."

"வச்சா என்ன? அதில என்ன தப்பு?"

"என்னை எதுக்காக ராசுவுக்குக் கல்யாணம் கட்டிக் கொடுத்தீங்க?"

பரிமளா சும்மா இருக்க, வேணி "பணங்காசுக்காக! என்ன பாழாப்போற பணம்! நிம்மதி இல்லாத பணம். என் தங்கச்சியாவது ஒழுங்கா இஸ்கோல் போய்க்கிட்டு இருந்தா, அதையும் கெடுத்தாச்சு. ஆனந்தை என்னவோ சாக்கு சொல்லி அனுப்பிச்சாச்சு. என்னையும் கொன்னுருங்களேன்."

இது அத்தனையையும் மவுனமாகக் கவனித்துக்கொண்டிருந்த வேல்முத்து, மவுனமாக வேணியை அழைத்துச் சென்றான்.

"நானும் வரணுமா முத்து?" என்றாள் பரிமளா.

வேல்முத்து பலவந்தமாக தலையாட்டினான்.

முத்து வேணியை அடுத்த அறைக்கு அழைத்துச் சென்றான். வேணியை உற்றுப் பார்த்து அவள் தலையைத் தடவிக் கொடுக்கும் போது அவன் உடல் நடுங்கியது. மெல்ல சன்னமான குரலில் பேசத் தலைப்பட்டான்.

"இத்தினி நாளு சும்மா இருந்தேன், வேணி! இப்ப உண்மையைச் சொல்லவேண்டிய கட்டம் வந்துருச்சு. அதனாலதான் உன்னைத் தனியா கூட்டிகிட்டு வந்திருக்கேன்."

வேணி அவனை சந்தேகமாகப் பார்த்துக்கொண்டு மவுனமாக இருந்தாள்.

"வேணி! அன்னைக்கு ஆனந்து சாயங்காலம் கடைக்கு வந்தான். உன்னைக் கல்யாணம் செய்துக்கப் போற சந்தோசத்தில் இருந்தான். கோவா போறதாகவும் எஸ்டேட் பங்களாவில் தேனிலவுக்கு உன்னைய அழைச்சுட்டுப் போறதாகவும் உனக்கு சீலை எடுத்திருந்ததைக் காட்டினான். தாலியைக் காட்டினான். ரொக்கமா பணம் வெச்சிருக்கிற

பாங்கி பாஸ்புக்கைக் காட்டினான். எசமானரு கல்யாணத்துக்குக் காசு கொடுக்கப்போறது எல்லாம் சொன்னான்."

"பாவா சொல்லுங்க பாவா! என்ன சொல்லி அவரை அனுப்பிச் சிங்க... என்ன சொல்லி?"

"ஒண்ணும் சொல்லலை வேணி, ஒண்ணுமே சொல்லலை."

"பின்ன ஏன் அந்த ஆளு திடுதிப்புன்னு புறப்பட்டுப் போயிட்டார்? என்ன சொன்னிங்க பாவா? எனக்கு ஏற்கனவே கல்யாணம் ஆகியிருக்கிறதா சொன்னிங்களா? குழந்தை இருக்கிறதா சொன்னிங்களா?"

"இல்லை வேணி."

"குழந்தை இருக்கிறதா சொன்னிங்களா? கெட்டுப்போன பொண்ணு னிங்களா? என்ன விஷம் வெச்சிங்க எம்பேர்ல? அத்தனை ஆசையோட கல்யாணம் கட்டிக்க வந்தவரு திடீர்னு எப்படி மனசு மாறியிருக்க முடியும்? சொல்லுங்க பாவா சொல்லுங்க, என்ன சொல்லி அனுப்பினிங்க?"

"ஒண்ணும் சொல்லலை வேணி! ஒண்ணும் சொல்லாமயே அனுப்பிட்டோம். ஆட்டம் குளோஸ்" வேல்முத்து கைதட்டிவிட்டு மிரளப் பார்த்து கண்ணில் கண்ணீர் விட்டான். "கைகழுவ முடியல. அழுக்குப் போகலை தேச்சு தேச்சு..."

வேணி சற்று நேரம் பிரமிப்புடன் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு முதலில் புரியவில்லை. அப்புறம் புரியத் தொடங்க, "பாவா" என்று லேசாகக் கூப்பிட்டாள்.

வேல்முத்து திரும்ப –

"அனுப்பிச்சுட்டிங்களா பாவா?"

வேல்முத்து லேசாக தலையாட்டினான். அருகில் இருந்த பெட்டியைக் காட்டினான்.

வேணி சட்டென்று வெறி வந்தவள் போல அந்தத் தகரப் பெட்டியை வலுவில்லாத பூட்டை கல்லைப் போட்டுத் தட்டி, பெட்டி மூடியைத் திறந்தாள்.

பெட்டிக்குள் ஒரு சேலை, ஒரு தங்கத் தாலி, ஒரு டேப்ரிக்கார்டர், ஒரு பாரின் சோப், ஒரு கைக்கடிகாரம், ஒரு பாஸ்புக் இருந்தது.



# 24

அந்தப் பச்சைச் சேலையை வேணி கண்ணீர் பொங்க முகத்தில் தேய்த்துக்கொண்டாள். "பாவா எங்கிட்ட சொல்லவே இல்லையே பாவா அவரு வந்திருந்ததா?"

வேல்முத்து சுவரையே பார்த்துக்கொண்டிருக்க, "சொந்த மகளுக்கு துரோகம் செய்வீங்களா, பாவா! எங்கம்மா இறந்து போறப்ப சொன்னது நிசமா பாவா?"

"'உங்கப்பாவை நம்பவே நம்பாதே'ன்னு சொல்லிட்டு செத்துப் போனாங்க. அப்ப எனக்கு வெவரம் தெரியலை பாவா. இப்ப தெரியுது அந்தாளுகிட்ட என்ன சொன்னிங்க, பாவா! சொல்லுங்க."

வேல்முத்து அவளை பயத்துடன் பார்த்தான்.

"வேணி, உங்ககிட்ட சொன்னா யார்கிட்டயும் சொல்லிட மாட்டியே? உங்கப்பனைக் காட்டிக் கொடுத்துட மாட்டியே?"

"என்ன பாவா சொல்றீங்க" என்று கிறீச்சிட்டுக் கத்தினாள்.

இதைக் கேட்ட பரிமளா, உள்ளே வந்து, "என்ன இத்தனை சத்தம், அப்பனும் பெண்ணும்?" என்றவள் அந்தப் பெட்டி திறந்திருப்பதையும் வேணியின் கையில் சேலையையும் தங்கச் சங்கிலியையும் டிரான்சிஸ்டரையும் பாரின் சோப்பையும் பார்த்து "சொல்லியாச்சா" என்றாள், வேல்முத்துவைப் பார்த்து.

முத்து அவளையும் பயத்துடன் பார்த்து, "சொல்லலை. காட்டியாச்சு" என்றான்.

"அடப்பாவி" என்றாள். நேராக வேணியிடம் வந்து, அந்தப் பொருட்களைப் பிடுங்கிக்கொண்டு மறுபடி அவசரமாக பெட்டியில் திணித்து "வேணி! உங்கப்பன் வாயில வந்ததை உளறுவாரு. அதையெல்லாம் கண்டுக்காதே! வாம்மா, நாம ரெண்டு பேரும் சினிமா போகலாம்" என்றாள்.

"இல்லை இல்லை! எனக்கு உண்மை தெரிஞ்சாகணும். எங்க அவரு? எங்கே அவரு?"

"யாரு?"

"ஆனந்து."

"அதான் சொன்னனில்லை. அன்னைக்கு வந்து இதையெல்லாம் கொடுத்துட்டுப் போனப்புறம் வர்றேன்னு சொன்ன ஆளு வரவே இல்லை."

"அதை ஏன் எங்கிட்ட சொல்லலை, முன்னாடியே?"

"எதை கண்ணு?"

"ஆனந்து வந்துட்டுப் போன விவரத்தை."

"அதான் சொன்னமே கண்ணு. சொல்லலை? முத்து சொல்லலை? யோவ்! நீதானே சொன்னாப்பல."

"கிடையாது. யாரும் எங்கிட்ட சொல்லலை. ஆனந்து வந்த விவரமும் தெரியாது. அவர் வந்திருந்தாருன்னு தெரிஞ்சிருந்தா நான் சத்தியமா ராசுவைக் கல்யாணம் கட்டிக்க சம்மதிச்சிருக்க மாட்டேன்."

"அதைப் பத்தி இப்ப என்ன பேச்சு? உனக்குக் கல்யாணம் ஆயிருச்சு. புள்ளை பொறக்கப் போவுது. இப்ப என்ன, விட்டுத்தள்ளு, வேணி. இதெல்லாம் சகஜம்தான்."

"அந்தாளு எங்க? என்ன செய்தீங்க அவரை? என்ன சொன்னிங்க அவர்கிட்ட?"

"ஒண்ணும் செய்யலை, கண்ணு. அவன் பொருளைக் கொடுத்துட்டு போனவன் போனவன்தான். வரவே இல்லை, அப்படித்தானே முத்து?"

வேல்முத்து ஒரே திக்கில் பார்த்துக்கொண்டு பேசாமல் இருந்தான்.

வேணியை மஞ்சு கையைத் தொட்டு மெதுவாகக் கூப்பிட்டான். "வேணி, வா. வந்துரு. இந்த மாதிரி சண்டை போடறது நல்லதில்லை. ராசு கேட்டா கோவிச்சுப்பாரு."

வேணி அவன் சொன்னதைக் கேட்காமல் "மஞ்சு எங்கூட வா" என்றாள் தீர்மானமாக.

"எங்க போகணும்?"

"சொல்றேன் வாயேன்."

வேல்முத்துவிடமோ பரிமளாவிடமோ சொல்லிக் கொள்ளாமல் விருட்டென்று புறப்பட்டு வீட்டைவிட்டு வெளியே வந்தாள். மரத்தடியை நோக்கி நடக்கும்போது "மஞ்சு, எனக்கு ஒரு சந்தேகம்" என்றாள்.

"என்ன வேணி?" என்றான் மஞ்சு.

"ஒரு ஆளு கல்யாணம் செய்துக்கிறதா வர்றாரு. கையில சேலை, மாங்கல்யம், பாஸ்புக் எல்லாம் கொண்டு வர்றாரு. எங்கப்பனைச் சந்திச்சு காட்டுறாரு. அவ்வளவு ஆசையா ஓடிவந்தவரு சொல்லாம கொள்ளாமப் போயிடறாருன்னா என்ன அர்த்தம்?"



"என்னா அர்த்தம்! அவருக்கு திடுதிப்புன்னு வேற சோலி எதோ வந்திருக்கும்."

"இல்லை, மஞ்சு இல்லை! விசயம் அத்தனை சின்ன விசயமில்லை. மஞ்சு. இப்ப என்னை நீ ஓர் எடத்துக்கு அழைச்சுக்கிட்டுப் போயி, அந்த எடத்தில புகார் கொடுக்க என்ன வெல்லாம் செய்யணும்னு சொல்லிக் கொடுக்கணும்."

"என்ன இடம், வேணி?"

"போலீஸ் ஸ்டேசன்."

அந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் மீண்டும் வேணியை கண்கொட்டாமல் பார்த்து "என்ன பேரு சொன்னிங்க?" என்றார்.

"ஆனந்து."

"டிரைவர்! பாலஸ் ஆர்ச்சர்டில நம்ம சின்னையச் செட்டி வீட்டில டிரைவர்."

"அவர் எஜமானர் பேரு தெரியாதுங்க. பாலஸ் ஆர்ச்சர்ட்டில வீடுங்க. கோல்ப் பந்தாட வருவாரு எசமானரு."

"அவர்தான் சொல்லும்மா. ஆனந்தை எங்கயாவது பாத்தியா?"

"இல்லைங்க. பாக்கலைங்க. ஒண்ணரை வருசமா பாக்கலைங்க."

"ஒண்ணரை வருசமா மிஸ்ஸிங் ரிப்போர்ட் ஒண்ணு இருக்குது. கான்ஸ்டபிள்! அந்த 'எப்' ஸ்டேசன் டயரியை எடுங்க."

"ஆனந்தைப் பத்தி எதாவது தகவல் தெரியுமாம்மா உங்களுக்கு?"

"ஆளைப் பார்க்கலைங்க. உடைமைகள் சிலதைப் பார்த்தேன்."

"புரியும்படி சொல்லுங்க."

வேணி முதலில் இருந்து ஆரம்பித்துச் சொன்னாள். அதைக் கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்தவர், உடனே எழுந்து "வேல்முத்துங் கறது உங்கப்பாவா?" என்று கேட்டார்.

"ஆமாங்க. அவருகூட என் புருசன் கோவிந்தராஜு. அப்பறம் முனியப்பான்னு ஒருத்தரு. அப்பறம் எங்க சின்னம்மா பரிமளா, அப்பறம் இன்னொருத்தரு 'வெட வெட'ன்னு வருவாரு. அவர் பேர் மறந்து போச்சு..."

"எத்தினி கடன் வாங்கியிருக்காரு உங்கப்பா?"

"நிறைய."

"அந்தக் கடனைப்பத்தி ஆனந்துகிட்ட பேசினீங்களா?"

"ஒருமுறை சொல்லியிருக்கிறேன்."

"உங்கப்பாருக்கு என்ன வேலை?"

"மைதானத்து பக்கத்துல பலகாரக்கடை வெச்சிருந்தாரு."

"இப்ப இல்லையா?"

"உடம்பு சரியில்லாம இருக்காரு."

"என்ன உடம்பு?"

"ஒரு மாதிரி பிரமை பிடிச்சாப்பல எப்பப் பாத்தாலும் கையை பாத்துக்கிட்டு இருந்தாரு. 'மண்ணு மண்ணு'ன்னு சொல்லிக் கிட்டே இருந்தாரு. இப்ப கொஞ்சம் பரவால்லை."

"எப்பலேர்ந்து இந்த மாதிரி இருக்குது?"

வேணி யோசித்து, "ஆனந்து காணாமல்போன அந்த சமயத்தில இருந்துங்க."

"அதாவது ஆனந்து வந்துட்டுப் போனதில இருந்து?"

"ஆமாங்க."

"ஆனந்தைப் பற்றி அதுக்கப்புறம் எந்தத் தகவலுமே இல்லையா?"

"இல்லைங்க."

"இன்டரஸ்டிங்" என்று அவர் பைக்குள்ளிருந்து எதையோ எடுத்து வாயில் போட்டுக்கொண்டு "வாங்க போகலாம்" என்றார்.

"எங்க?"

"முதல்ல உங்க உங்கப்பாவை சந்திக்கலாம்."

"நான் வரலைங்க. எனக்கு அந்தாளைப் பார்க்கவே இஷ்ட மில்லைங்க."

"சரி, நான் போய் விசாரிக்கிறேன். நீங்க அப்புறம் வாங்க."

**போ**லீஸ் நிலையத்தை விட்டு வெளியே வந்தபோது முழுவதும் இருட்டிவிட, "வேணி! நீ மனசுக்குள்ள என்ன நெனைச்சுக்கிட்டு இருக்கே?" என்றான் மஞ்சு.

"மஞ்சு! நான் மனசுக்குள்ள நெனைச்சுக்கிட்டு இருக்கிறது நடந்திடக் கூடாது, மஞ்சு. அப்பதான் எனக்கு ஆறுதல், நிம்மதி."

"நீ ரொம்ப களைச்சிருக்கே"

"மஞ்சு நீ எனக்கு இத்தனை உதவி செய்திருக்க. இன்னும் ஓர் உதவி."

"அதுக்கென்ன வேணி, சொல்லு."

"மஞ்சு நீ ரொம்ப நல்லவன். உனக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலை."

"பரவால்லை வேணி. நீ ஒருத்தனை காதலிச்சு, ஒருத்தனை கல்யாணம் செய்துகிட்டே. இருந்தாலும் உன் மனசில எனக்கு ஒரு மூலையில எங்கயாச்சும் சின்னதா இடம் இருந்தாகூட போதும்."



"மஞ்சு! என்னை டாக்டர் அம்மாகிட்ட அழைச்சுகிட்டு போகணும்."

"சரி வேணி."

**டா**க்டர் காமேசுவரி அவளைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு "வேணி, யார் சொன்னா நீ கர்ப்பமா இருக்கிறதா?"

"மாண்டியாவில ஒரு டாக்டர் சொன்னாங்க."

"தப்பு தப்பா சொல்லியிருக்காங்க. எதுக்கும் யூரின் பரிசோதனை செய்திடலாம். நாளைக்கு காலையில வந்தியானா யூரின், பிளட் டெஸ்ட் எடுக்கலாம். கொஞ்சம் அனீமிக்கா இருக்கிறே."

வேணிக்கு இத்தனை நாட்களுக்குப் பின் லேசாக சந்தோசமாக இருந்தது. "ரொம்ப தாங்ஸ் டாக்டர்! எனக்கு உள்ளுக்குள்ள துரு துருன்னு எதோ சொல்லிச்சு. ஒருநாள் மாத்திரையை விட்டுட்ட மோன்னு பயமாயிருச்சு. முதல்லயே நம்பிக்கை இல்லை. உங்ககிட்ட காட்டி நிச்சயப்படுத்திக்கலாம்னு நினைச்சேன்."

வேணி வெளியே வந்ததும் "மஞ்சு! இல்லைன்னுட்டாங்க டாக்டர்" என்றாள் சந்தோஷத்துடன்.

"என்ன இல்லை?"

"நான் கர்ப்பமா இருக்கறதா மாண்டியாவில் சொன்னது தப்புன்னு சொல்லிட்டாங்க."

"அதனால?"

"அந்தாளு ராசுகிட்டயா பிள்ளை பெத்துக்குவேன்."

"ஏன் வேணி, ராசு அண்ணன் என்ன செய்துட்டாரு?"

"எல்லாம் சேர்ந்துகிட்டு... மூணு பேரும் சேர்ந்துகிட்டு."

"சேர்ந்துகிட்டு...?"

"அப்புறம் சொல்றேன். வா, இப்ப வீட்டுக்குப் போகலாம்."

"நீ நடந்துக்கிற விதமே சரியில்லை. போலீஸ் ஸ்டேஷன்ங்கிறே! லேடி டாக்டர்ங்கிறே!"

வேணியும் மஞ்சுவும் வீடு திரும்பியபோது வேல்முத்துவை போலீஸ் ஜீப்பில் ஏற்றிக்கொண்டிருந்தார்கள். முத்து களைத்ததுபோல இருந் தான். அவன் கழுத்தில துண்டு சுற்றி ஒரு கான்ஸ்டபிள் அவனை அழைத்து வந்தபோது சாதுவாக வந்தான்.

பரிமளாதான் அலறிக்கொண்டிருந்தாள். வேணியைப் பார்த்து "வாடியம்மா! பெத்த தகப்பனையே காட்டிக் கொடுத்த சிறுக்கி" என்று அவளை நோக்கித் துப்பினாள்.

# 25

வேணி விவரம்அறியாது திகைத்தாள். பாவாவை போலீசார் எங்கே அழைத்துச் செல்கிறார்கள் என்பது தெரியவில்லை.

பரிமளாதான், "கெடுத்தாயே! கெடுத்தாயே பாவி" என்று தரையில் உட்கார்ந்துகொண்டு அழுதாள்.

"மஞ்சு, என்ன ஆச்சுன்னு தெரியலை. போய் விசாரிச்சுக்கிட்டு வர்றியா?" என்றாள் வேணி.

"சரி வேணி" என்றான் மஞ்சு.

எப்போதும்போல விசுவாசத்துடன் அவன் கிளம்பிச் செல்ல; பரிமளா, "நாசமாப் போவியா நீ! நல்லா இருப்பியா நீ! பெத்த அப்பனை புகார் சொல்லி, போலீசுக்கு அனுப்பிச்சியே. சொந்தக்காரங்களே எமனா வரணுமா? நான் என்ன குற்றம் செய்தேனடி உனக்கு! என் தாலியைப் பறிக்கிறியே" என்று பலவாறு சொல்லிக்கொண்டு புலம்பி அழுதாள்.

அண்டை அசலில் வந்து விசாரித்த எல்லாரிடமும் வேணி செய்த அக்கிரமத்தைப் பற்றி புகார் சொன்னாள்.

வேணிக்கு, தான் என்ன அக்கிரமம் செய்தோம் என்பது சரியாக விளங்கவில்லை.

குட்டியை ஒரு பையன் மோட்டார் சைக்கிளில் கொண்டு விட்டுவிட்டு, "அப்புறம் பார்க்கிறேன்" என்று இங்கிலீஷில் கையசைத்து விட்டு புறப்பட்டான்.

குட்டியின் அருகே சென்ட் வாசனை அடித்தது.

"குட்டி இங்க வா" என்றாள் வேணி.

பரிமளா, "அவகிட்ட சேராதே குட்டி! அவ சொந்த அப்பாவையே காட்டிக் கொடுத்தவ... உங்க அப்பாவை ஜெயில்காரங்க பிடிச்சிக்கிட்டுப் போயிட்டாங்க" என்றாள்.

குட்டி, வேணியைப் பார்த்தாள். "அக்கா அப்படியா?"

குட்டி மார்பை பெரிசாகக் காட்டும் உத்தேசத்தில் 'பிரா' எல்லாம் போட்டுக்கொண்டிருந்தாள். உதட்டில் சாயம் போட்டிருந்தாள். கைப்பை வைத்திருந்தாள். ஒரு வருடத்தில் அவள் எட்டு வயசு தாண்டிவிட்டதுபோலத் தோன்றியது. கன்னத்தில் பருக்கள் தோன்றி



யிருந்தன. கன்னட சினிமாப் பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

"இங்க வா! உன்னைய பல கேள்விங்க கேக்கணும்" என்றாள் வேணி.

"போக்கா எப்ப பாத்தாலும் இதேதான் உனக்கு. பரிமளா, திங்கறத்துக்கு ஏதாவது வெச்சிருக்கீங்களா? ஏன் இன்னும் அழுதுகிட்டே இருக்கீங்க, தமிழு எங்கே?"

"எல்லாம் உங்க அக்கா செய்த தப்பு."

"குட்டி! நீ இதில் எல்லாம் தலையிடாதே. ஒழுங்கா படிக்காம கண்ட பையங்ககூட ஊர் சுத்துறியே, அதை எப்ப நிறுத்தப்போற, சொல்லு."

"ஆரம்பிச்சாச்சா, வேதாந்தம்."

அப்போது மஞ்சு வேகமாக ஓடி வந்தான்.

"இது மட்டும் யாராம். நீ கல்யாணம் கட்டிக்கிட்டவ... இந்தாளோட சுத்துறியே?"

"என்ன மஞ்சு?" வேணி கேட்டாள்.

"வேணி, விசயம் ரொம்ப தீவிரமாயிருச்சு."

"என்ன மஞ்சு?"

"முனியப்பான்னு ஒருத்தர் உங்கப்பா கூடவும் ராசு அண்ணன் கூடவும் சினேகிதமா இருந்தாரா?"

"என்ன மஞ்சு சொல்ற, எனக்குப் புரியவே இல்லை."

"வேணி, நீ சந்தேகப்பட்டது சரியாப் போச்சு"

"என்ன சந்தேகப்பட்டேன், எதுக்கு?"

"வேணி எங்கூட வர்றியா... அந்தக் காட்சியை தாங்கிக்க மனசில திராணி இருக்குமா உனக்கு?"

"என்ன சொல்ற மஞ்சு?"

"ஆனந்தைக் கண்டுபிடிச்சுட்டாங்க."

"எப்படி" என்றாள் வேணி உற்சாகப் பிரவாகத்துடன்.

"போலீஸ்காரங்க தோண்டிட்டாங்க."

"போலீஸ்காரங்க தோண்டிட்டாங்களா? அப்படின்னா?"

"மைதானம் இல்லே, மைதானம். அங்க வரப்புல பைப்பு போடத் தோண்டினாங்களாம் குழி. அதுக்குள்ள..."

வேணியை கோல்ப் மைதானத்தின் விளிம்புக்கு அழைத்துச் சென்றான்.

வேல்முத்துவின் கடை மூலையில் இருந்த சுமார் முன்னூறு அடி தள்ளி இருந்தது அந்த இடம்.

மைதான விளிம்பில் அடர்ந்த மரங்கள் இருந்தன. பைப்பு போடுவதற்காக வெட்டப்பட்டிருந்த குழி சமீபத்தில்தான் மூடியிருந்த

தால் அதன் சுவடு மட்டும் பழுப்பாக இருந்தது.

ஜீப் நின்றுகொண்டிருக்க அருகே அதன் மண்டை விளக்கை தரையை நோக்கித் தழைத்திருந்தார்கள். கீழே வெள்ளைத்துணி போட்டு ஓர் உடல் மூடப்பட்டிருந்தது.

வேணி அதை அணுகும்போது கை, கால்களை உதறினாள்.

ஆனந்தின் எஜமானர் வீட்டிலிருந்த பலபேர் இருந்தார்கள்.

கீழே கிடந்த உடல் மிகுதியாகக் கெட்டுப்போயிருந்த நாற்றம் அடித்தது. காது ஓட்டைகளின் வழியே பூச்சிகள் போய்க்கொண்டிருக்க கன்னம் ஒட்டியிருக்க, ஒரு பக்கமே தெரிந்தாலும் அதை அடையாளம் கண்டுகொள்வதில் வேணிக்கு சிரமம் இருக்கவில்லை.

"ஆனந்த்" என்று அப்படியே அருகில் உட்கார்ந்துகொண்டு கதறினாள்.

"ஆனந்த்! ஆனந்த்! யார் உன்னை இந்த மாதிரி செய்துட்டாங்க ஆனந்த்! ஆனந்த்!"

"உன்னைக் கல்யாணம் பண்ணிக்கத்தாம்மா போயிருந்தான். அன்றைக்கு அப்ப காணாமல் போனவனை இப்ப தாம்மா பார்க்கிறேன். பாத்தியா உன்னை ஆசைப்பட்டதுக்கு இவனுக்குக் கெடைச்ச தண்டனையை."

"இல்லை, இல்லை" என்று ஆத்திரத்துடன் போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பார்த்தாள்.

அவர், "இதான்ம்மா ஆனந்து. சந்தேகமே இல்லை. பாக்கெட்டில் சீட்டு இருந்தது. மற்ற அடையாளங்கள் பொருந்துது" என்றார்.

"இது எப்படி ஆச்சு?"

"எப்படி ஆச்சு? கொன்னு போட்டிருக்காங்க."

"யாரு, எங்கப்பனா?"

"உங்கப்பன் மட்டும் இல்லை. மூணு நாலுபேரு அதில ஈடுபட்டிருக்காங்க. முக்கியமா உன் புருசன், உன் அப்பன், அப்பறம் முனியப்பா. உன் அப்பன் எல்லாத்தையும் கக்கிட்டான். அதுக்கப்புறம் பேட்டை ரவுடி சின்னான்னு ஒருத்தன்..."

"நாலு பேரும் என்ன செஞ்சாங்க, என் ஆனந்தை?"

"உன்னைக் கல்யாணம் செய்யறதுக்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பத்தி கேக்கிறதுக்காக இவனைக் கூப்பிட்டு அனுப்பிச்சிருக்காங்க. அல்லது அவன் வந்திருக்கலாம். வந்தவனை மைதானத்தின் ஓரத்துக்கு அழைச்சிட்டுப் போயி..."

"போயி..."

"கவுத்தை வெச்சு கழுத்தை நெரிச்சுக் கொன்னுட்டு குழிக்குள்ள போட்டு மூடிட்டாங்க. இவங்க அதிர்ஷ்டத்தைப் பாரு. மறுநாளே காவேரித் தண்ணீர்த் திட்டக்காரங்க வந்து குழியை மூடிட்டாங்க."



"மூணுபேரும் சேர்ந்து சதி பண்ணியிருக்காங்க."

"ஆமாம். ஆனந்துக்கு உன்னைக் கல்யாணம் கட்டிவைக்க சம்மதமில்லையா உங்கப்பனுக்கு?"

"சம்மதம் இருந்தாலும், எங்கப்பா ராசுகிட்ட வாங்கின கடனை அடைக்கிறதுக்கு என்னைக் கல்யாணம் கட்டிக் கொடுக்கிறதா சத்தியம் கொடுத்திட்டாரு."

ஆம்புலன்ஸ் வந்தது. பரிசோதனைக்காக உடல் வண்டியில் வைக்கப்பட்டது.

வேணி கதறினாள். வண்டியில் அந்த உடலின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டாள்.

அதையே பார்ப்பதில் அவளுக்கு எந்தவிதமான அருவருப்பும் இல்லை. இத்தனை நாள்கள் புதைந்து கிடந்தும், அந்த உடல் பயங்கரமாக இல்லை. ஒரு பக்கம்தான் அதிகமாக நாசமாகி இருந்தது.

ஆனந்து அணிந்திருந்த அந்த எவர்சில்வர் மோதிரம் அவளுக்குக் கடந்த காலங்களை நினைவுபடுத்தியது.

"வேணி, ஸ்டேஷன்ல வந்து வாக்குமூலம் கொடுப்பீங்களா?"

"கொடுக்கிறேன்" என்றாள் வேணி சிறிதும் தயக்கமில்லாமல்.

"இதனால உங்கப்பாவுக்கும் புருசனுக்கும் ஆயுள் தண்டனை கிடைக்கலாம்."

"கெடைக்கட்டும்" என்றாள் விரக்தியுடன்.

அவளுடன் போலீஸ் நிலையத்தில் வேல்முத்துவும் முனியப்பாவும் உட்கார்ந்திருக்க, பரிமளா முத்துவின் முதுகைத் தடவிக்கொண்டிருந்தாள். "வர்ரா பாரு! கொள்ளிவா பிசாசு."

வேணி கவனிக்கவில்லை. பாவாவையே பார்த்தாள். அவள் கண்களில் அடிபட்ட பார்வை தெரிந்தது. "பாவா! இப்ப எல்லாருக்கும் திருப்திதானே. என் மனசைப்போட்டு உடைச்சிங்க. கடன்காரனுக்கு என்னை வித்திங்க. எங்கம்மா செத்துப்போறப்ப சொன்னதை நூற்றுக்கு நூறு மெய்யாக்கிட்டிங்களே பாவா."

"மண்ணு மண்ணு" என்றான் வேல்முத்து.

கையைத் துடைத்துக்கொண்டான். கையை வெறித்துப் பார்த்தான்.

"நீங்க என்ன செய்தாலும் உங்க கை சுத்தமாகாது பாவா. மண்ணோ ரத்தக்கறையோ விலகாது. பார்த்துக்கொண்டேயிருங்க பாவா."

முனியப்பா பெஞ்சில் தலைமேல் கைவைத்து உட்கார்ந்திருந்தான்.

"ராசுவுக்கு ஆளு போயிருக்கு, மாண்டியாவுக்கு. இந்நேரம் அரஸ்ட்டு ஆயிருக்கணும்."

"நாங்களும் எங்கல்லாம் அந்தாளைத் தேடறோம், கேசை குளோஸ் பண்ணிரலாம்னு பலமுறை தீர்மானிச்சோம். இன்ஸ்பெக்டர்தான் விடாப்பிடியா கூடவே கூடாதுன்னுட்டாரு. இப்ப தற்செயலா

கண்டுபிடிச்சுட்டமில்லை."

மஞ்சு "அப்ப ராசு அண்ணனும் இதில உண்டா வேணி?" என்று கேட்டான்.

"ஆமாம்" என்று தலையாட்டினாள் வேணி.

குட்டி அழுதுகொண்டே ஒரு மூலையிலிருந்து புறப்பட்டு, "அக்கா, பாவாவைக் கைது பெண்ணிட்டாங்கன்னா நான் எங்க போறது அக்கா? வேண்டாம்னு சொல்லிருக்கா."

"நீ சும்மாரு. உனக்குத் தெரியாது" என்று மஞ்சு அதட்டினான்.

"இந்நேரம் கிடங்குக்கு அனுப்பிச்சிருப்பாங்கல்ல?"

"யாரைச் சொல்ற வேணி?"

"ஆனந்து."

"யாருக்குத் தெரியும்? போன ஆளை யாரும் உயிர்ப்பிக்கப் போறதில்லை."

வேல்முத்து வெற்றுப் பார்வை பார்த்துக்கொண்டு பெஞ்சியில் உட்கார்ந்தவன் அருகே வேணியை அழைத்தான். "இப்படி வாம்மா."

வேணி இங்கிருந்தே சத்தம் போட்டாள். "என்ன மூஞ்சியை வைச்சுக்கிட்டு நீங்கல்லாம் என்னைக் கூப்பிட முடியும்? பரிமளா, நீயும்தானே அதில உடந்தை? குட்டியைக்கூட பயன்படுத்திக்கிட்டிங்களா?"

"அய்யோ என்ன அக்கா இது?"

"உன்னையும்கூட இந்தக் கொலையில பயன்படுத்தியிருப்பாங்க. அப்பேர்ப்பட்ட கிராதகங்க இவங்க."

"சொல்லாதே, அக்கா."

வேணி வாசலைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

இன்ஸ்பெக்டர் அவளிடம் வந்து "உனக்குத் தாலி கட்டின புருஷன், பெத்த அப்பன் ரெண்டு பேரையும் காட்டிக் கொடுக்க தைரியமா முன்வந்தியே, ரொம்ப தாங்க்ஸ். இந்தாளுங்களுக்கு தண்டனை கொடுத்துத்தான் ஆகணும். முனியப்பா சொன்னானே, ஒருத்தன் பிடிச்சுக்கிட்டானாம், இன்னொருத்தன் கயிற்றை கழுத்தில சுத்தினானாம். ரெண்டு பேர் இறுக்கினாங்களாம். கால் கையெல்லாம் துடிச்சுச்சாம். அப்புறம் மம்பட்டி கடப்பாறை கொண்டாந்திருக்காங்க. ஆனந்து உனக்காகக் கொண்டாந்திருந்த பொருட்களையும் விடாம பொறுக்கி வீட்டில் வெச்சிருக்கான் உங்கப்பன். உனக்கு சீதனமா கொடுக்கவா?"

"இந்தப் பொம்பளைகூட உண்டுபோல" என்று பரிமளாவைக் காட்டினாள், வேணி.

"எல்லா விசயமும் நாலு தட்டு தட்டினா கக்கிருவாங்க."

அப்போது ஜீப்பில் கோவிந்தராசு கொண்டுவரப்பட்டான்.



# 26

ராசு நேராக வேணிக்கு அருகில் வந்தான்.

அவள் தன் புருசனையே கண்கொட்டாமல் பார்க்க–

"வேணி என்ன இது? என்னை எதுக்காகக் கைது பண்ணியிருக்காங்க? நீதான் ஏதோ காட்டிக் கொடுத்தியாம்? விவரமே புரியலை வேணி... சொல்லு என்ன ஆச்சு?"

"தெரியாத மாதிரி கேக்காதிங்க. உங்க எல்லாருக்குமே ஒண்ணரை வருசத்துக்கு முன்னாலயே தெரிஞ்ச விசயம், எனக்கு இப்பதான் தெரிஞ்சது."

"மஞ்சு, என்ன இதெல்லாம்! நீ சொல்லிக் கொடுத்தியா?"

"இல்ல அண்ணே, அவங்களே கண்டுபிடிச்சுட்டாங்க."

"என்ன கண்டுபிடிச்சாங்க?"

வேணி தெளிவாகச் சொன்னாள். "நீ, எங்கப்பன், முனியப்பா, பரிமளா எல்லாரும் சேர்ந்துகிட்டு ஆனந்தைக் கொலை பண்ணிட்டு, அவனை மைதானத்தில் புதைச்சதைக் கண்டுகண்டுபிடிச்சாச்சு" என்றாள்.

"அய்யோ! என்ன இது அபாண்டம்! இன்ஸ்பெக்டர், இதை நீங்க நம்பறிங்களா என்ன?"

"ஆனந்தைக் கொண்டுவந்து காட்டிரு... கேசை விட்டுருவோம்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"எனக்கு அந்த ஆனந்து யாருன்னே தெரியாது அய்யா. அந்தப் பொண்ணு என் சொந்த பொண்டாட்டி. ஏதோ உளறதுன்னு..."

"உளறவே இல்லை. தெளிவாகத்தான் இருக்கிறா."

"அடி கிராதகி... கட்டின புருசனுக்கு துரோகம் பண்ணுவியா?"

வேணி அவனைப் புன்னகையுடன் பார்த்துக்கொண்டிருக்க –

இன்ஸ்பெக்டரைத் தனியாக அழைத்து ராசு பேசினான்.

"எனக்கு கங்க நஞ்சப்பாவைத் தெரியும். இந்தக் கேசு எப்படி

செல்லுபடியாகும் என்கிறிங்க? ஏதோ பிரேதமாம், எங்கேயோ கோல்ப் மைதானத்தில் இருந்திச்சாம், அதை எப்படி அந்தாளுன்னு சொல்லப் போகும்? இது நியாயமா? யோசிச்சுப் பாருங்க. கங்க நஞ்சப்பா தெரியுமில்லை? நம்ம தொகுதி எம்.எல்.ஏ."

"சரி, வர்றிங்களா" என்றார் இன்ஸ்பெக்டர் அலட்டிக்கொள்ளாமல்.

"மஞ்சு! சொல்லுடா. எங்ககிட்ட வாலாட்டினவங்கள்ளாம் என்ன ஆனாங்கன்னு..."

மஞ்சு சும்மா இருக்க –

இன்ஸ்பெக்டர் "இதோ பாருங்க, பயமுறுத்தி பிரயோசனமில்லை. உங்களை சட்டப்படி, மாஜிஸ்ட்ரேட்டு கிட்ட பர்மிசன் வாங்கி, போலீஸ் கஸ்டடியில வெச்சுறப்போறோம். நீங்க லாயரைப் பார்க்க அனுமதி தர்றோம். அந்தாளுகிட்ட விவரமா சொல்லுங்க. டேய் என்னடா சும்மா பாத்துக்கிட்டு இருக்குற.. விலங்கு மாட்டுடா..."

"எல்லாருக்குங்களா?"

"ஆமாடா."

பரிமளா கதறினாள். "அய்யா, அய்யா! கைல புள்ளைய்யா... கைல புள்ளைய்யா. வேணி வேணி சொல்லும்மா, என்னை வுட்டுரும் படியா..."

தமிழும் கதறினான். குட்டியும் கதறினாள். "அக்கா சொல்லுக்கா... வுட்டுரும்படியா சொல்லுங்கக்கா..."

"போலீஸ்காரங்க கேக்க மாட்டாங்கம்மா. குட்டி உனக்குத் தெரியாது. இப்ப இவங்களைப் பாத்தா பரிதாபமாகத்தான் இருக்கும். ஆனந்து ஞாபகம் இருக்குதில்லை?"

"இருக்குக்கா..."

"அந்தாளை இவங்க எல்லாரும்சேர்ந்து பேசி வெச்சுக்கிட்டு, உயிரு துடிக்கத் துடிக்க – கழுத்தை நெரிச்சு, கொலை செஞ்சு, புதைச்சிருக்காங்க தெரியுமில்லை?"

குட்டி பேசாமலிருக்க –

பரிமளா "அய்யோ நான் அதில சேரவே இல்லைங்க. என் குழந்தையைக் காப்பாற்றுங்க. நான் அதில இல்லவே இல்லைங்க."

"பின்ன யாரும்மா இருந்தாங்க," என்று இன்ஸ்பெக்டர் கேட்க –

"முனியப்பா, ராசு, அப்பறம் இவரு... நான் மைதானத்தில வெளியே, மூலையில யாராவது வர்றாங்களான்னு பார்த்துக்கிட்டு இருந்தேன், இவங்க புதைக்கையில..."

"பரிமளா! பாவி!" என்று கத்தினான் ராசு.

வேல்முத்து இவையனைத்தையும் பார்த்துக்கொண்டே இருந்தவன், "இன்ஸ்பெக்டர் இங்க வாங்க... நான் விவரமா சொல்றேன்" என்று சொன்னான்.



ராசுவின் கையில் விலங்கு மாட்டும்போது அவன் வேணியையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டு மெல்லப் பேசினான்.

"அப்படியா சேதி? கட்டின புருஷனையே காட்டிக் கொடுப்பியா நீ? எல்லாம் உம்மேல ஆசை வெச்சுத்தாண்டி செய்தேன். உனக்காக ஊரை விட்டு, அந்தஸ்தை விட்டு காத்திருந்தேனடி!" என்றவன், "இன்ஸ்பெக்டர்! நான் யாரு தெரியுமில்லை! மஞ்சுவைக் கேட்டுப் பாரு... மண்டியாவில எத்தனை காவு விழுந்திருக்குதுன்னு..."

"யோவ் அதெல்லாம் போலீஸ் ஸ்டேஷனாண்டை சொல்லக் கூடாதுய்யா" என்று போலீஸ் அதிகாரி அதட்டினார்.

வேல்முத்து கைவிலங்கு மாட்டும்போது கண்ணில் வெள்ளமாக கண்ணீர் உதிர, "வேணி என்னை மன்னிச்சுரும்மா" என்றான்.

பரிமளாவை ஒரு பெண் கான்ஸ்டபிள் அழைத்துச் செல்ல முற்படும்போது, "அவங்களை இப்ப வேண்டாம் சித்ராம்மா" என்றார் இன்ஸ்பெக்டர்.

வேணி காவல் நிலையத்தை விட்டு மஞ்சுவுடன் வெளியே வந்த போது, இன்ஸ்பெக்டர் கூட வந்தார். "வேணி! உன் தைரியத்தைப் பாராட்டறேன். மற்ற பெண்ணுங்க இந்த மாதிரி செய்யமாட்டாங்க. தகப்பன், புருசன் எல்லாருக்கும் விரோதமா, நியாயத்துக்கு உதவி செய்ய வந்த பார்... அது ரொம்ப பெரிய தியாகம் வேணி! உன் அவதி இத்தோட முடியறதில்லை. போலீசுக்கு மிக முக்கியமான சாட்சி நீதான். உன்னால கோர்ட்டுக்கு வந்து ஸ்டேட்மெண்டு கொடுக்க முடியுமா, சொல்லு. அவங்க வக்கீல் கண்டபடி கேள்விங்கள்ளாம் கேப்பாங்க. அதை சமாளிக்கணும். இதுக்கெல்லாம் நீ தயாரா வேணி, சொல்லு."

வேணி "தயார்" என்றாள் லேசாக.

# 27

பரிமளா முகத்தைத் துடைத்துக்கொண்டே வெளியே வந்தாள். குட்டி, குழந்தை தமிழுவை நடத்தி அழைத்து வந்தாள்.

"என்ன ஒரு கொடுமைக்காரி பாத்தியா உங்க அக்கா. எதுக்காக இப்படிச் செய்யறா? இப்பகூட லேட்டில்லைங்கறாங்க. நீ சாட்சி சொன்னாத்தான் அவங்களால எதும் நிரூபிக்கமுடியுமாம். நீ சொல்லலைன்னா உன் புருசனையும் அப்பனையும் விடுதலை பண்ணிருவாங்களாம். ஏன் இந்தப் பிடிவாதம்? அவன் போறவன் போயிட்டான். இருக்கிறவங்க சந்தோசமா..."

"அப்படிப் பார்த்தா சட்டம் தண்டனை எல்லாம் எதுக்கு இருக்குதுங்க?" என்றான் மஞ்சு.

"சும்மார்றா. இது எனக்கும் என் மகளுக்கும் உள்ள விவகாரம்."

"பரிமளா! நீ என்ன சொன்னாலும் நான் மனசு மாற மாட்டேன்" என்றாள் வேணி.

"ஜெயில்ல உங்கப்பா செத்துருவாரு. எனக்கு மாங்கல்ய பிச்சை கொடு. வேணி! வேணி. என் மகளே!" நடுரோட்டில் பரிமளா அவள் காலைக் கட்டிக்கொண்டு அழுதாள்.

போகிற வருகிறவர்கள் எல்லாம் வேடிக்கை பார்க்க, வேணி அவள் அழுவதை ஆர்வத்துடன் பார்த்தாள். குட்டியும் லேசாக அழ –

"பரிமளா! அந்தாளை கழுத்தை நெரிக்கறப்ப பார்த்துக்கிட்டுத்தானே இருந்த?"

"அய்யோ நான் பார்க்கலை, வேணி! ரொம்ப தூரத்துல இட்டுட்டுப் போனாங்க. மைதானத்துக்குள்ள இது எல்லாம் நடந்தது. எனக்கும் அந்தக் கொலைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை."

"சொந்த மகளா இருந்தா இப்படி செய்வியா சொல்? கடன் தொல்லைக்காக என்னை விக்க சம்மதிப்பிங்களா? அதுக்காக கொலை பாதகம் செய்ய உடந்தையா இருப்பியா? சொல்லு, பரிமளா?"



"தப்பு! தப்பாயிருச்சும்மா! ஆம்பிளைங்களா சேர்ந்து முடிவெடுக்கிறாங்க. நாம பொட்டை சன்மம் என்ன செய்யமுடியும்?"

"எதுத்து ஒரு வார்த்தை பேசினியா?"

"பேசினா கொன்னில்லை போடுவாங்க? வேணி, புள்ளையையும் உன் தங்கச்சியையும் எப்படிக் காப்பாத்த முடியும் சொல்லு?"

"உனக்கு பணம் சம்பாதிக்க எத்தனையோ வழிங்கள்ளாம் தெரியும், பரிமளா. என் தங்கச்சியை நான் காப்பாத்திக்கிறன். உம்மாதிரி என் புருசனும்தான் ஜெயிலுக்குப் போயிருக்கிறான்."

"குட்டி, அக்காகிட்ட சொல்லும்மா."

"அக்கா, இந்த தடவை மன்னிச்சுருக்கா, பாவா பாவம் அக்கா. செத்துப் போயிருவாரு. உடம்பு ரொம்ப மோசமா இருக்காங்க."

"குட்டி, நீ நிசமா சொல்றியா, நான் இவங்களை விட்டுரணும்னு? அவங்க செய்த குற்றத்தை மன்னிக்கணுங்கறியா குட்டி? சொல்லு?"

குட்டி கொஞ்ச நேரம் மவுனமாக இருந்துவிட்டு, "சொல்லத் தெரியலைக்கா" என்றாள்.

"மஞ்சு நீ சொல்லு..."

"வேணி, நீ செஞ்சது சரிதான். கவலைப்படாத வேணி. உன்னையும் குட்டியையும் நான் காப்பாத்தறேன். பரிமளா, நீங்க கூட வந்துருங்க. நான் வேலை பார்த்து உங்களையெல்லாம் வெச்சு காப்பாத்தறேன்."

"பரிமளா என் தீர்மானத்தை மாத்தவே முடியாது. அநியாயமா ஒரு அப்பாவியை சதி செய்து கொன்னு போட்டுட்டு யாரும் தப்பிச்சுக்க முடிஞ்சுதுன்னா எவரும் எதையும் நம்பமாட்டாங்க. ஒரு நியாயம் இருக்குது. அதுக்கு நாம எல்லாம் கட்டுப்பட்டுத்தான் ஆகணும்."

மஞ்சு "வேணி, உன் மாதிரி ஒரு பெண்ணை நான் பார்த்ததில்லை" என்றான்.

"அக்கா" என்று குட்டி அவள் கையைப் பற்றிக்கொண்டு, "நீ சொல்றபடி கேக்கிறேன் அக்கா. பள்ளிக்கூடத்துக்குப் போறேன்." என்றாள்.

பரிமளா கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "ஆமா வேணி. நாம ரெண்டுபேரும் சேர்ந்து கடையைத் துவங்கிரலாம் மறுபடியும்" என்றாள்.

"ஆண்பிள்ளைத் துணை வேண்டாமா?" என்றான் மஞ்சு.

"அதுகூடச் சரிதான்" என்றாள் பரிமளா.

மஞ்சு, "வேணி" என்று அன்பாக பரிவாக அழைத்தான்.

வேணி திரும்பினாள். "என்னய்யா?"

"நான்தான் உன் காதலன். என்னை ஏத்துப்பியா? உனக்கு எப்ப சம்மதமோ அப்ப கல்யாணம் கட்டிக்கலாம்."

தெரு மத்தியில் பட்டை பட்டையாக போட்டிருந்த இடத்தில் நால்வரும் நின்றார்கள். பச்சை விளக்குக்காகக் காத்திருந்தார்கள்.

"என் காதலன் செத்துப்போயிட்டான்யா. அவனைக் கொன்னுட்டு என் புருசன் ஜெயிலுக்குப் போறான். என்ன அத்தனை தூரம் விருப்பப்பட்டு, என் அப்பனுக்குக் கடன் கொடுத்து, எனக்காகக் காத்திருந்து அதையே குறியா வெச்சுக்கிட்டு, அதுக்கு இடைஞ்சலா வந்தவனைக் கொலை பண்ற வரைக்கும் என்மேல் ஆசைவெச்சுட்டுப் போயிருக்கானே கோவிந்தராசு, அவன்தான் காதலன் இப்ப எனக்கு. அவன் ஜெயிலில் இருந்து திரும்பி வர்ற வரைக்கும் காத்திருக்கப் போறேன். வா... பரிமளா, வா... குட்டி. வீட்டுக்குப் போவோம் காலையில கடையைத் துவங்கணும் மறுபடி" என்றாள் வேணி.

பச்சை விளக்கு கிடைத்தது.

மஞ்சு பிரமித்து நிற்க –

அவர்கள் மூவரும் குழந்தையுடன் சாலையைக் கடந்து சென்றனர்.